விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

இராகம் 01 | தாளம் 106 | வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 29 புதன்கிழமை (14.11.2012) | பக்கங்கள்: பதினாறு + 8

**கல்வி ஒளி இலவச இணைப்பு உள்ளே...**



முப்பது வருடகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.மக்கள் தீபாவளித் தினமான நேற்று நிம்மதி வேண்டி கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீபொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு செய்தபோது எடுக்கப்பட்ட படம்.

## வெலிக்கடை மோதலையடுத்து ஐந்து கைதிகளைக் காணவில்லை

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் படையினருக்கும் கைதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தின் பின்னர் சிறையிலிருந்த ஐந்து கைதிகள் காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு காணாமல் போன சிறைக் கைதிகளில் நால்வர் குற்றவாளிகள் எனவும் ஒருவர் சந்தேகநபர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எப்படியிருப்பினும் குறித்த மோதல் சம்பவத்தின் பின்னர் சிறையிலிருந்த மூவரே காணாமற் போயுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சிறைச்சாலையின் ஆயுதக் களஞ்சியசாலையில் இருந்து கைதிகளால் கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் மூன்று இதுவரையில்

02

## திருமலை இளைஞன் இந்தோனேசியாவில் விபத்தில் பலி

இந்தோனேசியாவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இலங்கையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் திருகோணமலையை சேர்ந்த பு.கண்ணா என்ற தமிழ் இளைஞன் பலியாகியுள்ளார்.

குறித்த இளைஞன்

02

### ஐ.நா.மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில்

# இலங்கையைப் புதுடில்லி ஆதரித்திருந்தால் இந்திய மத்திய அரசு கவிழ்ந்திருக்கும்

### பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆலோசகர் கருத்து

(புதுடில்லி)

"ஜெனீவாவில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் குற்றப் பிரேரணையை அமெரிக்கா முன்வைத்த போது இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்திருந்தால், தற்போது ஆட்சியிலிருக்கும் இந்திய அரசாங்கம் கவிழ்ந்திருக்கும்" என்கிறார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆலோசகரான ஸ்ரீ ராபல் மல்ஹோத்ரா என்பவர்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்த குற்றப் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்கியதை இந்த நிலையில் வைத்தே இலங்கையர்கள் பார்க்க வேண்டும். உள்ளூர் அழுத்தங்களும், கூட்டணி ஆட்சியின் நிர்ப்பந்தங்களுமே இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு இந்திய ஆதரவளித்தமைக்குக் காரணமாகும். அதற்காக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு எதிரானதெனக் கருதமுடியாதது என்பதை இலங்கை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர்

10

## பரிதி படுகொலை: இரண்டு சந்தேக நபர்கள் பாரிசில் கைது: விசாரணையில் புதிய திருப்பம்

(பாரிஸ்)

கடந்த வியாழக்கிழமை பிரான்ஸில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியான பிரான்ஸ்-தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் பரிதியின் படுகொலைத் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்களை பிரான்ஸ் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட இருவரைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் குற்றத்தடுப்புக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர் என்று குற்றத்தடுப்பு நீதித்துறையினரை மேற்கொள்காட்டி

02

## அமைச்சர் எஸ்.பி.யின் சகோதரர் தற்கொலை முயற்சி

(கொழும்பு)

தனிப்பட்ட பிரச்சினையொன்று காரணமாகக் கடந்த சனிக்கிழமை தற்கொலைக்கு முயற்சித்தாரென்று கூறப்படும் மத்திய மாகாண சபைத் தலைவர் சாலிய திசாநாயக்கா மாகாண சபையில் காணப்பட்டார். அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்காவின் சகோதரரே சாலிய திசாநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது. சாலிய திசாநாயக்காவின் கழுத்தைச் சுற்றி நெரிக்கப்பட்டதற்கான சில காயங்கள் காணப்பட்டன என்றும் அவை சிறுகாயங்களே என்றும் கண்டி பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர்

10

## இந்தியக் கைதிகளை ஸ்தானிகராலய அதிகாரிகள் பார்வையிட்டனர்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்தியக் கைதிகளை கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராயல அதிகாரிகள் நேற்றுச் சென்று பார்வையிட்டனர். சிறைச்சாலை அதிகாரிகளின் அனுமதி பெற்றே இந்திய

02

## கொழும்புக்கு வெளியே நவீன வசதிகளுடன் சிறைச்சாலை

(கொழும்பு)

அமெரிக்காவைப் போன்று அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கொழும்பிற்கு வெளியே சிறைச்சாலை ஒன்றை அமைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கடைச் சிறைக் கைதிகளின் நடவடிக்கைகள் மற்றும் அவர்களைப் பார்வையிடச் செல்வோர் தொடர்பில் கண்காணிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

சிறைச்சாலையில் அதிகளவு சன நெரிசல் நிலவுவதனால் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்படுவதால், கைதிகளை

02

## லயன் எயார் விமானத்தின் சிதைவுற்ற பாகங்களை மீட்கும் பணிகள் ஆரம்பம்

1998ஆம் ஆண்டு புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயார் விமானத்தின் இடிபாடுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1998ஆம் ஆண்டு பலாலியிருந்து இரத்மலானை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த விமானமே புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்த விமானம் மன்னார் கடற்பரப்பில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டுக் கடலில் மூழ்கியது.

புலி இயக்க உறுப்பினர் ஒருவர் கொடுத்த தகவலுக்கு அமைய இந்த விமானத்தை மீட்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சீரற்ற காலநிலை காரணமாக குறித்த விமானத்தின்

02

# உத்தர பிரதேசத்தில் பட்டாசு வெடிவிபத்து: எட்டுப்பேர் பலி

இந்தியாவில் உத்தர பிரதேச மாநிலத்தில் பட்டாசு பொருட்கள் சேமித்துவைக்கப்பட்டிருந்த வீடொன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் உட்பட எட்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் நான்கு பெண்களும் மூன்று சிறார்களும் அடங்குகின்றனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

ஆரோவ்யா மாவட்டத்தில், ஹிம்மாட்பூர் கிராமத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மக்கள் கொண்டாட்டங்களை ஆரம்பித்து இருந்தவேளையில் திங்கட்கிழமை இரவு இந்த வெடிவிபத்து நடந்திருக்கிறது.

இந்தியாவில் பட்டாசு ஆலைகளிலும் பண்டிகைக் காலங்களிலும் இவ்வாறான வெடி விபத்துக்கள் அடிக்கடி நடந்துவருகின்றன.

கடந்த செப்டெம்பரில், தமிழ்நாட்டில் பட்டாசு தொழிற்சாலையில் நடந்த தீ விபத்தில் 30க்கும் மேற்பட்டவர்கள் உடல்கருகி பலியானார்கள்.

திங்கள் இரவு நடந்த விபத்தின்போது, வீட்டிற்குள் பதுக்கி வைத்திருந்த பட்டாசுப் பொருட்கள் வெடித்ததில் வீட்டின் கூரை பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

கிராமத்துக்கு வெளியில் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்திச்செல்ல இருந்த அனுமதியைப் பயன்படுத்தி, வீட்டின் உரிமையாளர் வெடிபொருட்களை வீட்டுக்குள் பதுக்கி வைத்திருந்துள்ளதாக காவல்துறை கூறுகிறது.

# பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயமல்ல 10 வருடங்களின் பின் விசாரணைக்கு அனுமதி

இலங்கையின் வடக்கே பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு அரசதரப்பு முன்வைத்த ஆட்சேபணையையும் உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் விவசாயிகள் சிலர் இந்த வழக்குகளை 2003-ம் ஆண்டில் தாக்கல் செய்திருந்தனர்.

பலாலி பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களில் 40 சதவீதமானோர் அங்கு மீள்குடியேற்றப்பட்டுவிட்டதாகவும், அங்கு தொடர்ந்தும் மீள்குடியேற்றம் நடந்துவருவதால் இந்த மனுக்களை தொடர்ந்தும் விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் அரசதரப்பு சட்டத்தரணி வாதிட்டார்.

இதனை எதிர்த்து வாதிட்ட மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணி, பலாலி பிரதேசத்தை அதியுயர் பாதுகாப்பு வலயமாக அரசு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கவில்லை என்றும், அதனால் அந்தப் பகுதியை அதியுயர் பாதுகாப்பு வலயமாக கருதி அங்கு இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதற்கு சட்டரீதியான அங்கீகாரம் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

"இதனால் 60 சத வீதத்துக்கும் அதிகமான விவசாயிகளும் 30 வீதத்துக்கும் அதிகமான மீனவர்களும் தமது தொழில்களை இழந்துள்ளனர். அரசு கூறுகின்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன" என்று சுட்டிக்காட்டினார் மனுதாரர் தரப்பு சட்டத்தரணி.

எனவே மக்கள் தமது சொந்த வதிவிடங்களுக்குச் சென்று வாழ்வதற்கு அனுமதி வழங்கும் தீர்ப்பை வழங்குமாறு மனுதாரர்கள் தரப்பு கேட்டுக்கொண்டது.

இந்த வாதங்களை ஏற்றுக் கொண்ட உச்சநீதிமன்ற நீதியரசர்கள், வழக்கை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அனுமதி வழங்கினர்.

இதன்படி வழக்கு விசாரணைகளை எதிர்வரும் மார்ச் 11-ம் திகதி வரை ஒத்திவைத்த நீதிமன்றம், அந்த தினத்துக்குள் அரசதரப்பு ஆட்சேபணைகளை முன்வைக்குமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இராணுவ தளபதி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

# பட்டய கணக்காய்வாளர் பரீட்சை இம்மாதம்

வரையறுக்கப்பட்ட பட்டய கணக்காய்வாளர் நிறுவனத்தின் பரீட்சை இம்மாதம் 20ஆம்,21 ஆம்,22ஆம் திகதிகளில் நடைபெறுமென இலங்கை பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப்பரீட்சை கொழும்பு, கண்டி ஆகிய இரு பிரதான நகரங்களிலும் தெரிவு செய்யப்பட்ட மத்திய நிலையங்களில் நடைபெறும் எனவும் சுமார் 3000 பரீட்சாத்திகள் இப்பரீட்சைக்கு தோற்றுவதாகவும் பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

# கஹவத்தையில் கடையடைப்பு

கஹவத்தை பிரதேசத்தில் கடைகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

கஹவத்தை கொலைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்திவந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை எதிர்த்தே இந்த கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

# இராணுவத்தினருக்கு எதிரான புகார்கள் தனித்தனியே விசாரிக்கப்படும்

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இராணுவ நீதிமன்றிற்கு 50 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மனித உரிமை விவகார அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். ஒவ்வொரு முறைப்பாடுகளும் தனித்தனியே விசாரிக்கப்படுமென்றும் அமைச்சர் கூறினார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய நிறுவப்பட்ட தேசிய மனித உரிமை செயற்திட்டத்தின் அடிப்படையில் இராணுவ நீதிமன்றம் நிறுவப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நீதிமன்றிற்கு 50 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு முறைப்பாடுகளும் தனித்தனியாக விசாரணை செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வலுவான ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால் இராணுவ நீதிமன்றம் குற்றவாளிகளுக்கு எதிராக அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்த வேண்டும் என பதில் மாற்றுக் கருத்து கிடையாது என்ற போதிலும் பாதுகாப்பை நிலைநாட்ட படையினரின் சேவை அவசியம் என அமைச்சர் சமரசிங்க சுட்டிக்காட்டி யுள்ளார்.

# பாகிஸ்தான் மாநாட்டில் மாலினி எம்.பி. சிங்களத்தில் உரை

பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற "சார்க்" சபாநாயகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் பங்குபற்றிய மாலினி பொன்சேகா எம்.பி. சிங்களத்தில் உரையாற்றினார் அவரது உரையை தேசியப் பட்டியல் எம்.பி. ஆன அஸ்வர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.


இங்கு உரையாற்றிய அஸ்வர் எம்.பி.,

"மஹிந்த சிந்தனை"யின் முக்கிய அம்சங்கள் பலவற்றை மாநாட்டின் இறுதி அமர்வில் தொட்டுப் பேசினார்.குறிப்பாக பயங்கரவாத ஒழிப்பு, கிராமிய மீள் எழுச்சி திட்டங்கள் போன்றவை தொடர்பாக அவர் குறிப்பிட்டுப் பேசினார்.



இதன் பின்னர் மாநாட்டுப் பேராளர்கள் "மஹிந்த சிந்தனை" பிரதிகளைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் செலுத்தினர்.

இம் மாநாட்டில் சிங்கள மொழியில் உரை இடம்பெற்றதும் முக்கிய பதிவாகும். மாலினி பொன்சேகா எம்.பி. மாநாட்டு அமர்வில் சிங்கள மொழியில் பேச அந்த உரையை அஸ்வர் எம்.பி. ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி மாநாட்டின் ஆரம்ப அமர்வில் உரையாற்றினார்.



யாழ்ப்பாணம் ஜே/86 சோனகதெரு தெற்கு பிரிவில் சிவில் பாதுகாப்புக் குழுவின் வருடாந்தக் கூட்டம் யாழ்.முஸ்லீம் வட்டாராப் பாடசாலையில் நடைபெற்றது.
சிவில் பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி உரையாற்றுவதையும் கிராம சேவகர்கள் எஸ்.எம். யூனோஸ், எஸ்.மிஸ்னூன் மற்றும் மௌலவி அப்துல் அஸீஸ் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்: மீரான்)

## வெலிக்கடை...(தொடர்)

கண்டுபிடிக்கப்படவில்லை.

மரணமான ஐந்து கைதிகளின் சடலங்களை உறவினர்கள் எவரும் இதுவரை பொறுப்பேற்கவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இக்கலவரத்திற்குப் பின்னர் சிறைச்சாலை நடவடிக்கைகள் தற்போது வழமைக்கு திரும்பி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## லயன் எயார் விமானத்தில்...(தொடர்)

இடிபாடுகளையும் மீட்கும் பணிகள் ஒத்தி வைக்கப்பட்டிருந்தபோதிலும், அப்பணிகள் மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிங்கள ப் பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்த விமான விபத்தில் 48 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை இளைஞன்...(தொடர்)

கப்பலில் அவுஸ்திரேலியாவுக்கு அகதி அந்தஸ்து கோரி செல்லும் வழியில், இந்தோனேசிய கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்ட அகதிகளில் ஒருவராகவிருந்து, தற்போது இவர் இந்தோனேசியாவில் வசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக இலங்கை தூதுவராலயதத்துக்கு அறிவிக்கப்பட்டதுடன் அவரின் சடலம் தூதுவராலயம் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளதாக இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்தியக் கைதிகளை...(தொடர்)

அதிகாரிகள் சிறைச்சாலைக்குச் சென்றனர்.

சிறைச்சாலையில் பூரண அமைதி நிலவுவதாகவும், 36 இந்தியக் கைதிகளும் தாம் பார்வையிட்டனர் என்றும் தூதரக அதிகாரி யொருவர் தெரிவித்தார். நேற்றுத் தீபாவளி தினமாதலால், அதனை முன்னிட்டு இந்தியக் கைதிகளுக்கு இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரி கள் மதிய உணவு வழங்கினார்கள் என்றும் தெரிவித்தனர்.

## கொழும்புக்கு வெளியே...(தொடர்)

சந்திக்க செல்வோரை வீடியோ பதிவு செய்யக் கூடிய வகையில் சிறைச்சாலை அமைக்கப்படவுள்ளது.

இந்த அதிநவீன சிறைச்சாலையை அமைப்பதற்கு 500 மில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தினையடுத்தே அரசு இவ்வாறனதொரு முயற்சிக்குத் திட்டம் தீட்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பரிதி...(தொடர்)

பிரான்ஸ் ஊடகங்களில் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை முதலாவது நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இரண்டாம் நபர் அன்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இருவரில் ஒருவர் 33 வயதானவர். குறித்த சந்தேக நபர்களை மையமாக கொண்டு படுகொலையின் பின்னணி குறித்த விசாரணைகளை குற்றத்தடுப்பு காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# கஹவத்தை கொலைகள் குறித்து விசாரணை நடத்திய 4 பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம்

கஹவத்தை படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை-களை நடத்திவரும் நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் பத்மசிறி காலிக்கும் கஹவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிரஞ்ஜன் அபேவர்தன பொலிஸ் தலைமையகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொட்டகெத்தன பொலிஸ் முகாம் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் அத்தியட்சகரும் கொட்டகெத்தன கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் கஹவத்தைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரொஹான் ஒலுகல ஆகிய இருவரும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வதிகாரிகள் நால்வரும் கஹவத்தை கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தி வந்தவர்களாவர்.

இந்நிலையில், காலி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய வாஸ் குணவர்தன, இரத்தினபுரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# ஆஸி வரும் சட்டவிரோத அகதிகள் உடன் திருப்பியனுப்பப்படுவர்

இலங்கையில் இருந்து விசா அனுமதியின்றி தமது நாட்டுக்குள் வருவோர் உடனடியாக திருப்பியனுப்பப்படுவர் என்று அவுஸ்திரேலியா எச்சரித்துள்ளது.

இலங்கையில் இருந்து படகு அகதிகள் நாள்தோறும் சென்று கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் அவுஸ்திரேலியாவில் இருந்து கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து 250 பேர் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

இந்தநிலையிலேயே அவுஸ்திரேலியாவின் பிராந்திய குடிவரவுப் பணிப்பாளர் ஜோஸ் அல்வாரெஸ் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவர், இலங்கையில் இருந்து விசா அனுமதியின்றி வரும் எவரும் உடனடியாக திருப்பியனுப்பப்படுவர் என்று தெரிவித்துள்ளார்.

# ஆஸியிலிருந்து மேலும் 30 பேர் இலங்கைக்கு நாடு கடத்தல்

அவுஸ்திரேலியக் கடலில் புதிய படகொன்று சென்றடைந்த தருணத்தில் அந்நாட்டு அரசாங்கத்தால் மேலும் 30பேர் கொண்ட குழுவினர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த 30பேரும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை, கிறிஸ்மஸ் தீவிலிருந்தே திருப்பி அனுப்பப்பட்டதாக அவுஸ்திரேலியாவின் குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கைகளை, அவுஸ்திரேலியாவுக்கு வெளியே வைத்து விசாரிக்கும் கொள்கையை ஓகஸ்ட் 13இல் அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்த 30 பேருடன் சேர்த்து இதுவரை 200பேர் சுயவிருப்பமின்றி இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

கடத்தல்காரர்களுக்கு பணம் கொடுத்து, தமது உயிரையும் பயணம் வைத்து வருவோர், தமது பணத்தை எறிந்தவர்களாகி விடுகின்றனர் என அவர் கூறினார். இதேசமயம், புகலிடம் கோரும் ஆறு பேருடன் வந்த ஒரு படகு மறிக்கப்பட்டு கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பப்பட்டது.

உடல்நலம் மற்றும் பாதுகாப்பு சோதனைகள் முடிந்ததும் இவர்களை நவுறு மற்றும் பப்புவா நியூகினி ஆகிய தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் சாத்தியம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சம்பள உயர்வுக்காகப் போராட முன்வருமாறு ஜே.வி.பி.அழைப்பு

இலங்கையில் அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்காகப் போராட முன்வருமாறு, ஜே.வி.பி ஏனைய தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஜே.வி.பியின் தலைமையிலான தேசிய தொழிற்சங்க சம்மேளன தலைவர் கே.டி.லால்காந்த இந்த அழைப்பை விடுத்துள்ளார். கடந்த வரவு செலவுத்திட்டத்தில அரச ஊழியர்களுக்கு உரிய சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை என்று அவர் கூறினார். சம்பள அதிகரிப்பை கோரி பல்வேறு போராட்டங்களுக்கு தாம் திட்டமிட்டுள்ளதாக லால் காந்த குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தின் போது ஜனாதிபதி அரச ஊழியர்களுக்கு 1500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று குறிப்பிட்டார். எனினும் அதற்கு காலம் எதனையும் குறிப்பிடவில்லை.

இந்தநிலையில் குறித்த 1500 ரூபா கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து வழங்கப்பட வேண்டும் என்று லால்காந்த கோரிக்கை விடுத்துள்ளார். தமது தொழிற்சங்கம் சம்பள உயர்வாக 13, 442.50 சதத்தை கோரியமையையும் லால் காந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களையும் சேர்ந்து 6.2 இலட்சம் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

# மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவின் ஏற்பாட்டில் "ஆரம்பத்தில் கண்டறிதல் உயிரைக் காக்கும்" என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு ஊர்வலமும் கருத்தரங்கும் மட்டக்களப்பில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது.

இலங்கையில் அதிகரித்துவரும் மார்பகப் புற்றுநோயை இல்லாதொழிக்கும் வகையில் சுகாதாரத் திணைக்களத்தால் ஒவ்வொரு வருடமும் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு மாத நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்திலும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் கே.முருகானந்தம் தலைமையில் இவ்விழிப்புணர்வு ஊர்வலமும் கருத்தரங்கும் நடைபெற்றது.

வைத்தியசாலையிலிருந்த ஆரம்பித்த விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பு நகரினூடாகச் சென்று மீண்டும் வைத்திய சாலையை அடைந்தது. இதன் பின் பிரதான மண்டபத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடை-பெற்றது.

புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.பாத்திபன் விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தினார். மட்டக்களப்பு நாடக மன்றத்தால் இது தொடர்பான விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது.

# மத்திய மாகாண சபைத் தலைவர் வீடு திரும்பினார்



தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மத்திய மாகாண சபையின் தலைவர் சாலிய திஸாநாயக்க நேற்றுச் செவ்வாய்க்கிழமை வீடு திரும்பியுள்ளார்.

அவருக்கான சிகிச்சை பூர்த்தியாகாத நிலையில், பலவந்தமாக வீடு திரும்பினார் என்று கண்டி வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் டபிள்யூ.ஜீ.கே.திஸாநாயக்க தெரிவித்தார்.

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவின் சகோதரரான இவர் ஹங்குராங்கெத்தயில் உள்ள அவரது வீட்டில் வைத்து தற்கொலைக்கு முயன்ற நிலையில் கண்டி பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் கடந்த சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டார்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இவர் தற்கொலைக்கு முயன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# அழுங்கு செதில்களுடன் இந்தியர் கைது


அழிவின் விளிம்பிலுள்ள அரிய வகையான அழுங்குச் செதில்களை கடத்துவதற்கு முயன்ற இந்திய பிரஜை ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்க பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவரிடமிருந்து இரண்டு கிலோ கிராம் அழுங்கு செதில்கள் கைப்பற்றப்பட்டன.

பயணப்பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கடத்துவதற்கு முயற்சித்த வேளையிலேயே இவரைக் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளதாக சுங்கப் பிரிவி-னர் அறிவித்துள்ளனர்.

இவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடந்த இரண்டு வருடங்களில் 100 தடவைகள் அவர் பயணித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# திருகோணமலையில் அமெரிக்க கோனர்



கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தினால் திருகோணமலையில் அமெரிக்க கோனர் திறக்கப்படவுள்ளது என தூதுவராலய தகவல்கள் தெரிவித்தன.

2013ஆம் ஆண்டின் முற்பகுதியில் திருகோணமலை நகரிலேயே இந்தப் புதிய அமெரிக்க கோனர் திறக்கப்படவுள்ளது. ஏற்கனவே கொழும்பில் அமெரிக்க சென்டரும் கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் அமெரிக்க கோனரும் அமெரிக்க தூதரகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த அமெரிக்க கோனரின் ஊடாக அமெரிக்க வெளியீடுகள், புத்தகங்கள், இணையத்தள சேவை மற்றும் விசேட விரிவுரைகள் போன்ற பல நிகழ்வுகள் இடம் பெறும்.

# மரக்கறிகளின் விலை வவுனியாவில் அதிகரிப்பு

வவுனியா மாவட்டத்தில் மரக்கறிகளின் விலை தீடிரென அதிகரித்துள்ளது என மரக்கறி வியாபாரிகள் தெரிவித்தனர். தற்போது விரத காலம் ஆரம்பித்துள்ளமையே விலையேற்றத்துக்கு காரணம் எனவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

உருளைக்கிழங்கு கிலோ 160 ரூபாவும், கத்தரிக்காய் கிலோ 160 ரூபாவும், கரட் கிலோ 280 ரூபாவும், பயிற்றங்காய் கிலோ 280 ரூபாவும், கறி மிளகாய் கிலோ 240 ரூபாவும், தக்காளி கிலோ 120 ரூபாவும், பீற்றூட் கிலோ 200 ரூபாவும், பாவற்காய் கிலோ 320 ரூபாவும், கோவா கிலோ 160 ரூபாவும், பெரிய வெங்காயம் கிலோ 80 ரூபாவும், சிறியது கிலோ 120 ரூபாவும்,

வெண்டிக்காய் கிலோ 120 ரூபாவுக்கும் கிலோ ஒன்று விற்பனை செய்யப்படுவதாகவும், விலை ஏற்றம் எதிர்வரும் மாதம் வரை நீடிக்கலாம் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# இன்றைய இராசி பலன் (14.11.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 29ஆம் நாள் புதன்கிழமை**

**நட்சத்திரம்** : விசாகம் பி.ப. 2.05 வரை அதன் பின் அனுஷம்
**திதி** : பிரதமை பி.இ. 2.19 வரை. அதன் பின் துதியை
**சுபநேரம்** : 4.37 - 6.07 **இராகுகாலம்** : 12.07 - 1.37
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : அலைச்சல், தூக்கக் குறைவு, வயிற்று ரோகம்
**இடபம்** : பொருட் சேர்க்கை, மன அமைதி, இல்ல சுகம்
**மிதுனம்** : மனச்சந்தோசம், திட்டமிட்டு செயற்படுதல், செல்வாக்கு அதிகரிப்பு
**கடகம்** : பணவரவு, கடன்தொல்லை நீங்கும், குடும்பச் செலவு
**சிங்கம்** : வீண்குறைகேட்டல், உடல்நலக் குறைவு, பணத்தட்டுப்பாடு
**கன்னி** : வீண் கவலை, குடும்பச் சச்சரவு, வருவாய் குறைவு
**துலாம்** : நற்காரிய செலவு, திருமண ஏற்பாடு, முயற்சி வெற்றி
**விருச்சிகம்** : காரிய தாமதம், ஏமாற்றம், வீண்பழி கேட்டல்
**தனுசு** : தொழில் இடமாற்றம், நினைப்பவை தடை, அயலவர் பிரச்சினை
**மகரம்** : பணவரவு தாமதம், திட்டமிட்டு செயற்படுதல், வீண் பிரச்சினை
**கும்பம்** : சொத்துப் பிரச்சினை, வீண் விரயம், பகைமை
**மீனம்** : அதிக வரவு, முயற்சி பலிதம், தொழில் முன்னேற்றம்

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

## மதுபானங்களின் விலை 20 - 30 ரூபாவினால் அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் அனைத்து வகையான மதுபானங்களினதும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என டிஸ்டிலர்ஸ் (லங்கா) கம்பனி அறிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் மதுபானங்களுக்கு வரவு செலவு திட்டத்தின் ஊடாக 25 சதவீத வரி அதிகரிக்கப்பட்டது.

இதனால் ஒரு போத்தல் விசேட சாராயம், புளு மற்றும் வைட் லேபல் சாராயம் ஆகியவற்றின் விலை 20 ரூபாவினாலும் ஒரு போத்தல் விஸ்கி மற்றும் பிரண்டி தயாரிப்புக்களின் விலை 30 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டள்ளது என டிஸ்டைலரிஸ் (லங்கா) கம்பனி தெரிவித்தது.

# நோர்வே சிறுவர் காப்பகத்தினால் மற்றொரு யாழ். குடும்பம் ஏமாற்றம்

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் வசிக்கும் இலங்கைத் தமிழ் குடும்பமொன்று நோர்வே சிறுவர் காப்பகத்தினால் ஏமாற்றப்பட்டுள்ள மற்றுமொரு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வசந்தகுமாரன் மற்றும் ஷியாமலா வசந்தகுமாரன் தம்பதிகளின் ஷியாந்தன் (வயது 11) மற்றும் ஷின்னியா (வயது 08) ஆகிய இரு பிள்ளைகள் நோர்வே சிறுவர் காப்பகத்தினால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மேற்படி இரு பிள்ளைகளின் மீதான வழக்கு விசாரணைகள் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை ஒஸ்லோவிலுள்ள நீதிமன்றமொன்றில் இடம்பெற்றன.இந்த வழக்கு விசாரணைகளின் முடிவில்இரு பிள்ளைகளை யும் 48 மணித்தியாலயங்களில் காப்பகம் உரிய பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டுமென தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி மறுநாள் பிற்பகல் இரண்டு மணியளவில் பிள்ளைகள் பெற்றோரிடத்தில் ஒப்படைக்கப்படுவர் என்று வசந்தகுமாரன் ஷியாமலா தம்பதியருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தமது பிள்ளைகள் தம்மிடத்தில் வந்து சேரப் போகும் ஆனந்தத்தில் இருந்த பெற்றோருக்கு அதிர்ச்சி மட்டுமே வந்து சேர்ந்தது.

மறுநாளான 2011 செப்டெம்பர் 27 ஆம் திகதி வந்த தொலைபேசி அழைப்பொன்றில் தொடர்பு கொண்ட நோர்வே சிறுவர் காப்பக அதிகாரியொருவர் உங்களது பிள்ளைகளை தற்போது உங்களிடத்தில் தர முடியாதென்றும் மேலும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப் போவதாகவும் கூறித் தொலைபேசியை துண்டித்துள்ளார்.

இந்தச் செயற்பாட்டின் மூலம் நோர்வே சிறுவர் காப்பகம் நோர்வே நீதிமன்றத்தின் தீர்ப்பையே உதாசீனம் செய்திருக்கின்றமை அப்பட்டமாக தெளிவாகியுள்ளது.

இதேவேளை, சிறுவர் காப்பகத்தினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எரிக் ஜோசப்பின் மனைவியான டிலாந்தினி ஜோசப்பின் தந்தை டோப்பையா பங்கிரேஸர்ஸ் என்பவர் தனது பேரப் பிள்ளைகள் நோர்வே சிறுவர் காப்பகத்தில் சிக்குண்டுள்ளமை மற்றும் அவர்களுக்கு விடிவு கிடைக்காமை ஆகியவற்றால் பாதிப்படைந்து ஏக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் மரணம் ஆகியுள்ளார்.

இவர் தனது பேரப் பிள்ளைகளின் விடுதலை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

## வளைகுடா அல்லாத நாடுகளில் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பு

வளைகுடா நாடுகள் அல்லாத நாடுகளில் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் இத்தாலி, சீனா, அவுஸ்திரேலியா, சீஷெல்ஸ், மொரீஷியஸ், அசர்பய்ஜான் மற்றும் கொரியா ஆகிய நாடுகளில் உள்ள பிரபல தனியார் நிறுவனங்களுடன், புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய முதலில் இலங்கையிலிருந்து கட்டாருக்கு மருத்துவ ,தாதிகளையும், சீஷெல்சிற்கு கல்வித்துறை சார்ந்தவர்களையும் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

மேலும், முதன்முறையாக அதிக ஊதியத்துடன் வெளிநாடுகளில் சுரங்க தொழிலுக்காக இலங்கையர்களை அனுப்புவதற்கான பயிற்சிகளும் எதிர்காலத்தில் வழங்கப் படவுள்ளன.

இதேவேளை,வெளிநாட்டு வேலை வாய்ப்பினை மேலதிகமாக பெறும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை அமைச்சும், இளைஞர் விவகார அபிவிருத்தி அமைச்சும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய, பல பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு அமையவாக விசேட பயிற்சித் திட்டம் ஒன்றையும் அமுல்படுத்த வேலை வாய்ப்புப் பணியகம் திட்டமிட்டுள்ளது.

## நடிகை நந்திதா தாஸுக்கு பிரான்ஸின் செவாலியர் விருது



இயக்குனர் தங்கர்பச்சான் இயக்கத்தில் வெளிவந்த "அழகி" திரைப்படத்தின் மூலம் தமிழ் சினி மாவுக்கு அறிமுகமானவர் பொலிவூட் நடிகை நந்திதாதாஸ்.

தொடர்ந்து மணிரத்னத்தின் "கன்னத்தில் முத்தமிட்டால்" திரைப் படத்தில் நடித்ததன் மூலம் மேலும் பிரபலமானார். இவர் தற்போது சீனு ராமசாமி இயக்கும் "நீர்ப் பறவை" திரைப்படத்தில் முக் கிய மான கதா பாத்திரத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில் நந்திதா தாஸுக்கு பிரான்ஸ் அரசு செவாலியர் விருது அறிவித்து கௌரவித்துள்ளது.

## தமிழ் மக்களுக்கு அநீதி ஏற்படாது என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

தமிழ் மக்களுக்கு அநீதி ஏற்படும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்படமாட்டார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்திற்கு பதிலாக திவிநெகும சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பது தனது நிலைப்பாடல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதிகாரப் பகிர்வினை வழங்குவதற்காக 19ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து [illegible]னம் செலுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

# இணக்க அரசியல் வாதி அமைச்சர் டக்ளஸ்

**- கலாசார அமைச்சர் பாராட்டு**

வடக்கிலிருந்து தென் பகுதி வரையில் பல்வேறு அச்சுறுத்தல்களையும் கடந்து அரசுடன் இணைந்து இணக்க பூர்வமான அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், எந்தவொரு அமைச்சையும் திறம்பட செயற்படுத்தக் கூடியவர் என கலை மற்றும் கலாசார அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்பதாம் திகதி காலை 9.30 மணிக்கு தேசிய அருங் கலைகள் பேரவையின் ஏற்பாட் டில் தேசிய கைப்பணியாளர் களது உற்பத்திகளின் கண்காட்சி கொழும்பு 07ல் அமைந்துள்ள கலாபவனத் தில் திறந்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது முன்னிலையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ஏக்கநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், இலங்கையின் தேசிய பாரம்பரியமிக்க கைப்பணிப் பொருட்களின் மேம்பாட்டிற்கும் கைப்பணியாளர்களது மேம்பாட்டிற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அயராது உழைத்து வரும் நிலையில் இத்திட்டத்திற்கு மேலும் வலு சேர்க்கும் முகமாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து கலாசார அமைச்சு எதிர் காலத்தில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, செயற்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.







# முப்பது சம்பவங்கள் குறித்து இராணுவ நீதிமன்றில் விசாரணை

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின்படி 50 சம்பவங்கள் தொடர்பாக பதிலளிக்க வேண்டியதன் கடப்பாடு சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் 30 சம்பவங்கள் தொடர்பில் இராணுவ விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் அதன் அறிக்கை இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவலைப் பெருந்தோட்டக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று வெளியிட்டுள்ளார்.

இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையின் பிரகாரம் குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் இராணுவத் தரப்பினருக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தினூடாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட இரண்டாம் கட்ட வாசிப்பின் மீதான 3ஆம் நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே மஹிந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், 30 வருட கால பயங்கரவாதம் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு நாம் வெற்றிகரமாக முகம் கொடுத்தோம். அதே போன்று தற்போது பல சவால்கள் இருக்கின்றன அவற்றையும் வெற்றிகொள்ள வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

ஜெனிவாவில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நாடு என்ற வகையில் அங்கு பொறுப்புக்கூறும் வகையிலான தலைமைத்துவம் ஒன்று இருக்கின்றதா என்று எம்மிடம் கேள்வியெழுப்பப்பட்டது. அதற்கு நாம் அவ்வாறான தலைமைத்துவம் இருப்பதாக கூறினோம்.

ஆதலால் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளின் இறுதி வடிவ அறிக்கையை பாராளுமன்றத்தினூடாக நாட்டுக்குப் பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தோம் என்பதையும் ஜெனிவாவில் தெரியப்படுத்தினோம்.

மேலும் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசேட செயலணி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டதையும் நாம் கூறினோம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி இராணுவத் தரப்பு தொடர்பில் கூறப்பட்ட விடயங்களை விசாரணை செய்வதற்கென இராணுவத் தளபதியினால் நியமிக்கப்பட்ட குழுவினால் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# ஹோட்டல்கள், வாடி வீடுகளுக்கு சிறுமிகளை அனுமதித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

ஹோட்டல்கள் மற்றும் வாடி வீடுகளிற்கு சிறுமிகளை அனுமதிக்கும் அவ்நிறுவனங்களின் உரிமையாளர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் மூலமாக சிறுமிகளை ஹோட்டல்கள் மற்றும் வாடிவீடுகளிற்கு அனுமதித்த நிறுவன உரிமையாளர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் படி இச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறுமிகள் ஹோட்டல்கள் மற்றும் வாடிவீடுகளிற்கு அனுமதிக்கப்படுவார்களாயின் அதற்கு அந்த நிறுவன உரிமையாளர்களே பொறுப்புக் கூற வேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிற்கு எதிராக கடுமையான சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வெலிக்கடைச் சிறையிலிருந்து தப்பிச் சென்ற ஐவரில் ஒருவர் கைது

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறையின் போது தப்பிச் சென்ற கைதிகளில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த கைதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தெஹியோவிட்ட பிரதேசத்தில் ருவன்வெல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறையின் போது ஐந்து கைதிகள் தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# 13ஆவது திருத்தத்துக்கு மாற்றீடு தேவை: ஆனால் அதனை ரத்துச் செய்யக் கூடாது

## ஐ.தே.க. பொதுச் செயலாளர்

13ஆவது திருத்தச் சட்டமூலத்தில் குறைகள் இருப்பின் திருத்த வேண்டுமே தவிர இரத்துச் செய்யக்கூடாது என மாகாண சபைக்கு இட்டுச் சென்ற 13ஆம் திருத்தத்தின் சிருஷ்டிகர்த்தாவான ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

மாகாண சபைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என அரசாங்கம் தீர்மானிக்குமாயின் அதற்குப் பதிலாக மாற்று அதிகாரப் பகிர்வு அலகொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். திருத்தப்பட வேண்டிய குறைபாடுகள் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ளன என அவர் ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தை மீறி மாகாண சபைகள் செயற்படுவதை தடுப்பதற்கு 13ஆவது திருத்தத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் அத்தநாயக்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன மற்றும் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோருக்கு இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் படி 13ஆவது திருத்தம் அவசரமாக கொண்டு வரப்பட்டது என்பதை அவர் ஏற்றுக்கொண்டார்.

13ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் சில மாற்றங்களை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கும். ஆனால் அதை இல்லாமல் செய்ய ஒத்துக்கொள்ளாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உரும்பிராய் தெற்கில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், உரும்பிராய் தெற்குப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவமொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் குடும்பத் தலைவரான விநாயகமூர்த்தி (வயது 57), அவருடைய மனைவி சுதர்ஷினி (வயது 47) மற்றும் இவர்களின் மகன்களான சுதர்ஷன் (வயது 27), சுகிர்தன் (வயது 21) ஆகியோரே காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த குடும்பத்தாருக்கும் அயல் வீடொன்றைச் சேர்ந்த மற்றுமொரு குடும்பத்தாருக்கும் இடையில் நான்கு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பிரச்சினையே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சுமார் 20 பேர் கொண்ட குழுவினர் வீடு புகுந்து இந்த வாள் வெட்டை நடத்தியதாக தெரியவந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகினறனர். கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தகாத உறவாம்: குவைத்தில் இலங்கை பெண்ணும் இந்தியச் சாரதியும் கைது


குவைத் நாட்டில் பணிப்பெண்ணாக வேலை பார்க்கும் இலங்கைப் பெண்ணொருவர், இந்தியச் சாரதியொருவருடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அந்நாட்டுப் பொலிஸாரால் அவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண் வேலை பார்க்கும் வீட்டுக்கு அயல் வீட்டில் சாரதியாக வேலைபார்க்கும் இந்தியர் ஒருவருடனேயே இவர் தொடர்பு வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குவைத் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே அவர்களிருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தியபோது, தங்களுக்குள் இரகசிய உறவு இருப்பதை அவர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர் என்று 'அராப் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், அவர்களிருவருக்கும் எதிராக வழக்குத் தொடர குவைத் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை குறித்து அமெரிக்காவின் அறிக்கை இது



சர்வதேச ரீதியில் மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்த அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது எனவும் அவ் வகையில் இலங்கை குறித்த தமது நடவடிக்கைகள் பெருமிதமாக உள்ளளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.


ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை விவகாரம் தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு சரியானதே என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் போன்ற விவகாரங்கள் தொடர்பில் இலங்கை இன்னமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனையே அமெரிக்கா வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டது முதல் மனித உரிமைப் பேரவையின் மேம்பாட்டிற்காக அமெரிக்கா உழைத்து வருவதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஆஸ்பத்திரி சென்று ஐ.தே.க.எம்.பி ஜயலத்தை ஜனாதிபதி பார்த்தார்



மாரடைப்பால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தனவை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார்.

மாரடைப்புக் காரணமாக கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் இவர் குணமடைந்து வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாதம்
Thamil Naatham
நவம்பர் மாதம் 14ஆம் திகதி புதன்கிழமை

# சிறைக் கைதிகளும் மனிதர்கள்தான்; ஆனால் மிருகங்களை என்ன செய்வது?

"சிறைக் கைதிகளும் மனிதர்கள்தான்" இவை வெலிக்கடைச் சிறைச்சாலையின் வெளிப்புற மதிலில் மும்மொழிகளிலும் எழுதப்பட்டிருக்கும் வாசகங்கள். மனிதப் பிறவிகளின் சராசரிக் குணாம்சங்களுக்கு மாறாக, மிருகத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட்டவர்களும் சிறைவாசிகள்தான். தண்டிக்கப்படா விட்டாலும் குற்றம் இழைத்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் நீதி விசாரணையை எதிர்நோக்கி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களும் கைதிகள்தான். ஆனால் இவர்கள் விளக்கமறியல் கைதிகள்.

சிறைக் கைதிகளும் மனிதர்கள்தான் என்ற அடிப்படை விடயத்தில் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. ஆனால் சராசரி அல்லது சாதாரண மனிதக் குணாம்சங்களில் ஏற்பட்ட பிறழ்வுகளின் காரணமாகக் குற்றமிழைத்த மனிதர்களே சிறைவாசிகளாகிறார்கள். மரண தண்டனைக் கைதிகளும், ஆயுள் தண்டனைக் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கண்டுபிடிப்பதற்காகத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்ட பொழுதே படையினருக்கும் கைதிகளுக்குமிடையில் மோதல் வெடித்துள்ளது.

செல்போன்கள், போதைப் பொருட்கள் உட்பட்ட பல பொருட்கள் சிறைக் கைதிகள் வசம் இருக்கக் கூடாதெனத் தடை செய்யப்பட்டவையாகும். ஆனால் திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்ட போதெல்லாம் பல தடவைகள் இந்தத் தடை செய்யப்பட்ட பொருட்கள் கைதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஊழல் பேர்வழிகளான சிறைக்காவலர் சிலர் இவற்றைக் கைதிகள் பெறுவதற்கு உடந்தையாகவும் இருந்திருக்கிறார்கள். இதனால்தான் சிறைச்சாலைகள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமே வலியுறுத்தியிருக்கிறார்.

மரண தண்டனைக் கைதிகளே இந்தக் களேபரத்தின் கதாநாயகர்களாகச் செயற்பட்டிருக்கிறார்கள். 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நாட்டில் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. நீதிமன்றங்களினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளெல்லாம், இயல்பாகவே ஆயுள் தண்டனைக் கைதிகளாகவே கணிக்கப்படுவார்கள். சந்தர்ப்பவசத்தால் கொலை செய்பவர்களும் இருக்கிறார்கள். திட்டமிட்டுக் கொலை செய்பவர்களும் இருக்கிறார்கள். போதைவஸ்துக் கடத்தல், கொடூரமான பாலியல் வன்புணர்வுக் குற்றங்கள் போன்றவற்றுக்கும் மரணதண்டனை விதிக்கப்படுவதுண்டு. சிறைச்சாலைகள் கைதிகளைச் சீர்திருத்தும் நிலையங்களாக இருக்க வேண்டுமென்றுதான் பொதுவாகக் கருதப்படுவதுண்டு. ஆனால் கொடூரங்களில் ஊறித் திளைத்தவர்கள் மனம் திருந்துவார்களா? மனிதப் பிறவிகளாக மறுபிறவி எடுப்பார்களா?

மரண தண்டனையை மீள அமுலாக்குவதா? இல்லையா? என்று ஆராய்வதற்காக நிபுணர் குழுவொன்றினை அமைக்கப்போவதாக நீதியமைச்சர் அறிவித்துச் சில நாட்களின் பின்னரே இந்த வெலிக்கடைக் கலவரம் இடம்பெற்றுள்ளது. மரண தண்டனை அமுல்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்துபவர்களுக்கு வெலிக்கடைக் குழப்பம் வலுச் சேர்க்கிறது. கொடூரமான குற்றங்களை இழைத்தவர்களும், அவ்வாறான மனோபாவம் கொண்டவர்களும் இலகுவில் புத்த பிரான்களாகவோ, மகாத்மா காந்திகளாகவோ மாறி விட மாட்டார்கள். மரண தண்டனை மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டுமெனனக் கோருவது நியாயமானது.

இந்த வருடம் ஜனவரி மாதமும் இவ்வாறான ஒரு குழப்ப நிலை மகஸின் சிறைச்சாலையிலும் ஏற்பட்டது. மகஸின் சிறைச்சாலைக்குள் போதைவஸ்தோடு தொடர்புபட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு சிறைச்சாலைச் சுப்ரீண்டன் ஒருவர் நடவடிக்கை எடுத்தார். விளைவு. சிறைச்சாலைச் சொத்துகளும், உடைமைகளும் அடித்து நொருக்கப்பட்டன. சிறைச்சாலையின் ஆவணப் பகுதிக்குத் தீ வைக்கப்பட்டது. சுமார் 36 பேர் காயங்களுக்கு உள்ளானார்கள்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் மோதல் ஆரம்பித்த போது சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் அந்தப் பகுதியே யுத்த களமாகக் காட்சியளித்திருக்கிறது. ஆயுத களஞ்சிய சாலையையே கைப்பற்றிக் கைதிகள் தாக்குமளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது என்றால், நிச்சயமாக சிறைக்காவலர் சிலரின் ஆதரவும், அனுசரணையும் இல்லாமல் நடைபெற்றிருக்க முடியாது. இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்த நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணைக் குழு இந்தக் 'கோடரிக் காம்பு' களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும்.

சிறைக் கைதிகளுக்கும் உரிமைகள் உண்டு. அவர்களும் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும். ஆனால் அவர்களின் மிருகத்தனமான செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். வெலிக்கடைக் கலவரம் சிறைக் காவலர்களின் கையாலாகாத்தனத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. "சிறைக்கைதிகளும் மனிதர்கள் தான்". அவர்களும் மனிதப் பிறவிகளாக மதிக்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் மிருகத்தனமாகச் செயற்பட அனுமதிக்கப்படக்கூடாது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# தமிழர்களை மீண்டும் நாங்கள் ஏமாற்றிவிட்டோமா?

நாங்கள் தமிழர்களை மீண்டும் ஏமாற்றிவிட்டோமா? என்று நான் பிரார்த்தனை செய்யும் வேளைகளில் எல்லாம் அமைதியாகச் சிந்திப்பது உண்டு என்று கூறு கிறார் ஜனாதிபதி சட்டத்தரணியான ஹேமந்த வர்ணகுல சூரிய. இலங்கையின் தூதுவராகவும் இத்தாலியில் கடமையாற்றியவர் இவர். அவர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. (ஆ-ர்)

**(நேற்றைய தொடர்ச்சி)**

சிங்கள தேசத்தை உருவாக்குவதற்காக தமிழர்களை கொல்லவும் தயங்க மாட்டார்கள், என்றுதான் எங்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் இவை யாவும் தவறானவை மற்றும் சிங்கள மக்கள், இரக்கமும் அமைதியும் உடைய எவ்வளவு இனிமையானவர்கள், என்று நீங்கள் எங்களுக்கு காட்டியுள்ளீர்கள். இந்தச் செய்தியை மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்" என்று அவள் சொன்னாள். அடுத்த நாள் மிகப் பெரிய கூட்டம் அங்கு வருகை தந்தது, மற்றும் அங்கிருந்த மூன்று அல்லது நான்கு அலுவலர்களால் அங்கு உருவான மிகப் பெரிய வேலைப் பழுவை சமாளிக்க முடியாமலிருந்ததால் வேலை இரவு 11 மணி வரை நீண்டது. அங்கு நான் அவதானித்தது, லெக்சேயில் இருந்த தமிழர்கள் சிங்களவர்களைப் போலல்லாது ஸ்ரீலங்கா அடையாளம் என்கிற மிக முக்கியமான கலாச்சார முகங்களில் ஒன்றையும் கைவிட்டு விடவில்லை என்பதைத்தான். பெண்கள் சேலை அணிந்துகொண்டு வாய் நிறைய வெற்றிலை போட்டுக் குதப்பியவாறு தமிழில் மாத்திரம் உரையாடினார்கள். ஆண்கள் தங்கள் வேட்டியில் இருந்து கால் சட்டைக்கு மாறவேண்டிய கட்டாயம் இருந்தது, ஆனாலும் வீடுகளில் அவர்கள் வன்னியில் எப்படியிருந்தார்களோ அப்படியே வாழ்ந்தார்கள். தங்களது பெண் குழந்தைகளுக்கு கதகளி, பரத நாட்டியம் போன்றவற்றை பழக்குவதற்கான ஒரு ஆசிரியரை அங்கு அனுப்பும்படி அவர்கள் என்னிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். அவர்கள் சமய ஆசாரத்தில் ஆழமாக அமிழ்ந்துள்ள மக்களாக இருந்தார்கள்.

அவர்களது தலைவர் என்னுடன் பேசியபோது இந்த மோசமான போர் எப்போது முடிவுக்கு வரும் என்று நான் நினைக்கிறேன், என்று என்னிடம் வினாவினார். " எங்களுக்கு தனியான ஒரு நாடோ அல்லது தனியான அடையாளமோ வேண்டாம்" என்றார் அவர். நடமாடும் சேவைக்கு வருகை தந்த ஒவ்வொரு தமிழரும் இத்தாலியில் புகலிடம் கோருவதற்காக தங்கள் ஸ்ரீலங்கா அடையாளத்தையும் மற்றும் ஸ்ரீலங்கா கடவுச் சீட்டினையும் அழிக்கவோ கிழித்தெறியவோ செய்யாமல் பத்திரமாக வைத்திருந்ததை எங்களால் அவதானிக்க கூடியதாக இருந்தது. அவர்கள் முகவர்களின் இந்த பொய்யான பிரச்சாரத்தை நம்பியது மிகவும் துரதிருஸ்டவசமானது என்று அவரிடம் தெரிவித்தேன்.

அரசாங்கத்தின் முயற்சிகள் யாவும் பயங்கரவாதிகளை தோற்கடித்து அவர்களை அழிப்பது தான், மற்றும் தென்பகுதியை சேர்ந்தவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் இலக்கு வடக்குக்கும் மற்றும் தெற்குக்கும் இடையில் உள்ள இடைவெளிக்கு பாலம் போடுவதுதான். இந்தப் போர் வெற்றி கொள்ளப்பட்டதும் அந்தப் பகுதிகளை சுற்றி அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதுடன் 13 வது திருத்தத்தை முற்றாக நடைமுறைப் படுத்துவதாக ஜனாதிபதி வாக்களித்துள்ளார் என்று அந்த மனிதருக்கு நான் விளக்கினேன்.

அவரால் ஆங்கிலம் வாசிக்க கூடியதாக இருந்ததால், அவரிடம் கொழும்பிலிருந்து எங்களுக்கு கிடைத்த, வடக்கிலுள்ள தமிழர்களிடம் அதிகாரத்தை பகிர்வது சம்பந்தமாக விளக்கமளிக்கும் சில அரசாங்க பிரசுரங்களையும் மற்றும் சுற்றறிக்கைகளையும் நான் கொடுத்தேன். ஸ்ரீலங்கா மற்றும் இந்திய அரசாங்கங்களின் முயற்சி பிரபாகரனால் சீர்குலைக்கப்பட்ட இந்திய - ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதுதான் என்று அவருக்கு நான் நினைவூட்டினேன்.

அப்போது அவர் ,"இந்திய - ஸ்ரீலங்கா சமாதான ஒப்பந்தத்தை எதிர்க்கும் ஜேவிபி, டிஜேவி மற்றும் ஏனைய சிங்கள தீவிரவாத அமைப்புகளின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்" என்று என்னிடம் கேட்டார். அத்தோடு எதிர்க் கட்சியில் இருந்தவர்களில் மிகவும் சக்தி வாய்ந்த ஒருவரும், இந்த இந்திய - ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தை ஆதரித்தவருமான பலரது உதாரண புருஷராக திகழ்ந்த விஜய குமாரதுங்க டிஜேவியினால் கொல்லப்பட்டதை அவர் எனக்கு நினைவூட்டினார்.

இவையெல்லாம் நாங்கள் செய்த வரலாற்றுத் தவறுகள். ஆனால் தற்போதைய அரசாங்கம் 13வது திருத்தத்துக்கு அப்பால் செல்லப்போவதாக உறுதியளித்துள்ளது, மற்றும் எல்.ரீ.ரீ,ஈயும் அரக்கனான பிரபாகரனும் அழிக்கப்பட்ட பின்னர் அரசாங்கம் தமிழ் மக்களிடம் அதிகாரத்தை வழங்கும் என்று நான் அவரிடம் சொன்னேன். மற்றும் இங்குள்ள தமிழ் மக்களின் ஒரு தலைவர் என்கிற

**- ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய**

முறையில் நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது, எல்.ரீ.ரீ,ஈக்கு நிதி உதவி செய்ய வேண்டாம் என்றும், அவர்களது செயற்பாடுகளைப் பற்றிய இரகசியத் தகவல்கள் எதையும் அவர்களிடம் தெரிவிக்காமல் தனிப்பட்ட முறையில் என்னிடம் தெரிவிக்கும்படி அவர்களுக்கு புத்தியும் ஆலோசனையும் கூறுங்கள், விபரங்களை தெரிவிப்பவர்களது பெயர்கள் ஒரு போதும் வெளியிடப்படமாட்டாது, என்றும் நான் அவரிடம் சொன்னேன்.

அப்போது பதிலுக்கு அவர், ஐயா! நான் உங்களை நம்புகிறேன். ஆனால் ஸ்ரீலங்காத் தலைவர்கள் போரில் வெற்றி பெற்ற பிறகு தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களா? அவர்கள் திரும்பவும் எங்களை ஏமாற்ற மாட்டார்களா. இது ஆரம்ப காலந்தொட்டு கணக்கிட முடியாத தடவைகள் நடந்து வரும் ஒரு செயல். உதாரணத்துக்கு டி.எஸ். சேனநாயக்கா இந்திய - பாகிஸ்தானிய குடியுரிமை சட்டத்தை கொண்டுவந்து ஆயிரக் கணக்கான தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையை பறித்தாரே,என்று என்னிடம் கேட்டார்.

அவரிடம் நான் சொன்னேன் அவை யாவும் கடந்த காலத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட கசப்பான பாடங்கள். ஆனால் முன்னேற்றம் என்கிற இயந்திரச் சக்கரத்தின் முக்கியமான பல் தமிழர்கள். எல்.ரீ.ரீ,ஈயினை நசுக்கிய பின்னர் தாங்கள் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதி மொழிகளிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை, அவர்கள் நிச்சயம் வடக்கை அபிவிருத்தி செய்வார்கள் என்று. அதன் பின்னர் நாங்கள் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளான றெஜியோ, எமிலியா, மற்றும் பலரோமா போன்ற பகுதிகளில் அநேக நடமாடும் சேவைகளை நடத்தினோம்.


இத்தாலிய காவல்துறையினர் மற்றும் எல்.ரீ.ரீ,ஈ பற்றி தமிழ் மக்கள் வழங்கிய தகவல்கள் என்பனவற்றின் உதவிகளைக் கொண்டு எங்களுக்கு 32க்கும் மேற்பட்ட கடும்போக்கு எல்.ரீ.ரீ,ஈ அங்கத்தவர்களைக் கைது செய்யக் கூடியதாக இருந்தது. இந்த சமூகத் தலைவர்கள் தொடர்ச்சியாக என்னைத் தொடர்பு கொண்டு வந்தனர். " 1958 டிசம்பரிலிருந்து இன்றுவரை எங்கள் மக்கள் ஸ்ரீலங்காவிலுள்ள மற்ற எந்த இனக் குழுக்களையும்விட கண்ணீரைக் காட்டிலும் அதிகம் இரத்தமே சிந்தியுள்ளார்கள். நாங்கள் அடித்து காயப்படுத்தப் பட்டோம், எங்கள் சொத்துக்கள் எரித்து நாசமாக்கப் பட்டன, மற்றும் நாங்கள் ஒரே இரவில் ஆண்டியாகும் அவல நிலைக்கு ஆளானோம்.

தனிநாட்டு கோரிக்கையை எழுப்பிய அரசியல்வாதிகள் பாதிக்கப்படவில்லை, அவர்களது பிள்ளைகள் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் கல்வி பயிலுகிறார்கள், ஆனால் எங்கள் பிள்ளைகளுக்கு பாடசாலைகளுமில்லை, படிப்புமில்லை, எல்.ரீ.ரீ,ஈ தொடர்ந்து இளம் ஆண்களை மட்டுமல்லாது, இளம் பெண்களையும் கடத்திச் செல்கிறது. எந்தப் பாதுகாப்பும் இல்லாது எங்கள் சமூகம் இன்னல் படுகிறது. இப்போது யுத்தம் முடிவடைந்து விட்டது, பிரபாகரனும் இறந்து விட்டார். எல்.ரீ.ரீ,ஈக்கு நிதியுதவி செய்யாமல் நாங்களும் எங்கள் பங்களிப்பை வழங்கிவிட்டோம்" என்றார் அவர்.

இப்போது நாங்கள் நல்லிணக்கதை ஏற்படுத்தும் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார் " நாங்கள் உங்களை நம்புகிறோம், ஆனால் நீங்கள் எங்களை ஏமாற்றி, உங்கள் வாக்குறுதிகளுக்கு எதிராகச் செயற்பட்டாலும் உங்களை யாரும் எதிர் கேள்வி கேட்க அனுமதிக்க மாட்டீர்கள். எல்.ரீ.ரீ,ஈயின் கொள்கையும் இதுதான். அவர்கள் சொல்வர்கள் சிங்களவரை ஒரு போதும் நம்பாதீர்கள், ஒரு இறந்துவிட்ட சிங்களவரைக்கூட நம்பாதீர்கள் என்று.

ஸ்ரீலங்கா அரசாங்கம் மீண்டும் ஒருமுறை எங்களை ஏமாற்றாது என நாங்கள் நம்புகிறோம். எங்கள் கண்ணீர் சுரப்பிகள் உறைந்துபோய், இதற்கு மேலும் கண்ணீரை சிந்த முடியாமலிருப்பதால், இனியாவது நாங்கள் கண்ணீர் சிந்தாமலிருப்போம், மற்றும் நாங்கள் அனைவரும் எங்கள் சிங்கள மற்றும் முஸ்லிம் சகோதரர்களுடன் ஒன்றுகூடி புன்னகை சிந்தியபடியே பிளவுபடாத ஒன்றுபட்ட நம் தாய்நாடாம் ஸ்ரீலங்காவுக்காக போராடுவோம், அங்கு ஒவ்வொரு சமூகமும் தனது இனம் மதம் மற்றும் மொழி என்பனவைகளை எண்ணி பெருமைப்படும்." என்று அவர் என்னிடம் சொன்னார்.

இப்பொழுது நான் ஒரு தூதுவரல்ல. என்னுடைய பிரார்த்தனைகளில் அமைதியாக நான் சிந்திப்பது நாங்கள் மீண்டும் ஒரு முறை அவர்களை ஏமாற்றி விட்டோமா என்று?



# அறிவியலும், சந்தை அறிவியலும்

சந்தை இலக்கியம் என்று சில பத்தாண்டுகளுக்கு முன் தமிழ் எழுத்துச்சூழலில் அறியப்பட்ட எழுத்துவகை இருந்தது நாமறிந்ததே. "சந்தை", சமீபகாலமாக "வணிக" அல்லது "கேளிக்கை" என்று மாறியுள்ளது. வாசிப்பனுபவத்தில் அதற்கான தேவையும் பங்களிப்பும் இருந்தாலும், சந்தை இலக்கியத்தின் ரசனை என்பது வாசிக்கும் மக்கள்தொகையின் பொதுவான சராசரியை கல்வி நிற்பது. சந்தை இலக்கியத்திற்கு விற்பனையே குறி. இதைப்போலவே "சந்தை அறிவியல்" என்று ஒரு வகை உள்ளது. இன்று பரிமளிக்கிறது.

"சந்தை அறிவியல்" ஊடகச் செல்வாக்கினால் முக்கியமாக, [illegible]ாகசிமாக வளர்ந்துவரும் இணையத்தினால், வளர்த்தெடுக்கப்பட்ட "[illegible]ப்புலர் சயின்ஸ்" வகையின் [illegible]ழ்ச்சி. பாப்புலர் சயின்ஸ் என்பதை பரப்பறிவியல் (பொதுமக்களிடம் பரப்பும்வகையில் பகிரப்படும் அறிவியல்) என்றால், சந்தை அறிவியலை பரபரப்பு அறிவியல் எனலாம். இவ்வளவு நாள் மனித அறிவுக்கலனில் தொகுத்துள்ள அறிவியல் புரிதல்களை எதிர்த்தோ, அல்லது மாற்றியமைக்கும் வகையிலோ புதிய ஆராய்ச்சி முடிவுகள் வந்துள்ளதாக அறிவித்து பரபரப்பு ஏற்படுத்துவது. பலசமயம் சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகள் அப்படித்தான் கூறுகிறர்களா என்பதை சரிபார்க்காமலேயே. சிலசமயங்களில் சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகளும் பரபரப்பிற்கு பலியாவது துரதிருஷடம். விரைவான புகழுக்காகவோ, அல்லது தங்கள் ஆராய்ச்சி மான்யத்தை தக்க [illegible]த்துகொள்ளும் நிர்பந்தங்கள் போன்றவைகளில் சிக்கியோ ஊடகங்களைத் திரட்டி, பிரஸ்-மீட் வைத்து விளம்பரம் தேட விழைகிறார்கள். கடந்த இரண்டு மூன்று வருடங்களில் இணையத்தில் பிரபல செய்திவெளியீட்டு நிறுவனங்களின் அறிவியல் செய்திகளை கவனித்துவந்தாலே இது தெரியும்.

செல்போனினால் சிட்டுக்குருவிகள் அழிவு தேனீக்களும்தான் மனித மூளையும் பாதிக்கப்படுகிறது செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் கொட்டாவி மூளையின் சூட்டைத் தணிக்கிறது ஒளியை விஞ்சும் நியூட்ரினோக்கள்: கவுந்தார் ஜன்ஸ்டின் கண்டுவிட்டோம் "கடவுள் துகள்" ஆர்செனிக்கை உண்ணும் பாக்டிரியா: உயிரியல் பாட புத்தகங்களை மாற்றியமைக்கவேண்டியதே் இப்படியாப்பட்ட "அறிவியல் செய்திகள்".

செல்போன் உபயோகம் நாளுக்கு நாள் அதிகரித்தபடியே இருந்தாலும், சிட்டுக்குருவிகள் திரும்பிவந்துவிட்டதாய் ஒரிரண்டு மாதங்கள் முன் செய்திவெளியானது (டைம்ஸ் ஆஃப் இந்தியாவில்) உங்களில் அநேகருக்குத் தெரியுமோ? தெரியாதிருந்தால் வியப்பில்லை "பரபரப்பிற்கு" எதிராய் வரும் மறுப்புச் செய்திகளை, ஆதாரம் இருந்தாலும், அவ்வளவு விளம்பரப்படுத்தமாட்டார்கள். இதுவும் சந்தை அறிவியலின் அறிகுறி.

சரி, நிசமாகவே செல்போனை மூளைக்கருகில் அதிக நேரம் வைத்திருந்தால் கேடா என்றால், அவ்வகை முடிவுகள் கொண்ட ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை சென்றவருடம் (2011) வாசித்தேன். கூடவே "செல்போன்கள் மூளையின் இயக்கத்தை பாதிக்க வல்லது" என்கிற வகைத் தலைப்பின் கீழ் "சந்தை அறிவியல்" செய்தியும் வெளியாகியிருந்தது. பார்த்தவுடன் எரிச்சலூட்டும் தலைப்பு (மூளையை பாதிக்காத மனிதச் செயல்பாடு எது? கையை ஆட்டினாலும், காலை ஆட்டினாலும்-தான் மூளை "பாதிக்கப்படும்"). ஆராய்ச்சிக் கட்டுரை மூலத்தை வாசித்துப் பார்த்தேன். காதின்மேல் இருத்திக் கொண்டு செல்போனில் பேசினால், காதுபகுதியின் அருகாமையில் மூளையினுள் வெப்பநிலை உயருவதாய் நிறுவியிருந்தார்கள். அடடா, சரியாக இருக்கிறதே என்று மேலும் துழாவினால், பரிசோதனையில் செல்போனை "டாக்-மோடில்" காதிற்கருகில் தொடர்ந்து ஐம்பது நிமிடம் பிடித்துக்கொண்டிருந்தால் இவ்வாறு மூளை சூடாகிறதாம். "கைவலிக்காதோ?" என்று கேட்கநினைத்தாலும், நான் கேட்க நினைத்தது: "ஒருவன் ஐம்பது நிமிடம் தொடர்ந்து செல்போனில் பேசினால், அது மூளை இருப்பவன் செய்யும் செயல் என்று நிரூபிப்பதற்கே ஆதாரம் கேட்கவேண்டுமே் (கெட்ட வார்த்தையை நிரப்பிக் கொள்ளுங்கள), பின் அவனுக்கு இருப்பதாய் சந்தேகப்படும் அம்மூளை ஆராய்ச்சி நிரூபணத்தில் சூடானால் என்ன, சுக்கலாயிறமாய்ச் சிதறினால்தான் என்ன?"

ஆனாலும் இவ்வகை "சந்தை அறிவியல்" செய்திகளைத் தொடர்ந்து உள்வாங்கும் நாம், செல்போன் பேசுவதினால் உண்மையில் நமக்கு எவ்வளவு, எப்படி ஆபத்து, எது பாதுகாப்பான செயல்பாடு என்றெல்லாம் அறிந்துகொள்ள மெனக்கெடுவதில்லை (நானும் இக்கட்டுரையில் எழுதப் போவதில்லை). செல்ஃபோனினால் மூளைக்கு ஆபத்து என்கிற ஒற்றைவரி பயம் மட்டும் நமக்குள் தங்கிவிடுகிறது. நாலுபேரை அலைபேசியில் அலறி அங்கலாய்த்துக்கொள்கிறோம். இது சந்தை அறிவியலையும் கடந்த மந்தை அறிவியல்.

ஒளியின் வேகத்தை விட அதிகமான வேகத்துடன் பயணம் செய்யும் நியூட்ரினோக்கள் உள்ளன என்று தடாலடியாக 2011இல் ஒரு செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது நினைவிருக்கலாம். ஓபரா (OPERA) என்றழைக்கப்பட்ட இப்பரிசோதனையில், ஏற்பாட்டின்படி ஐரோப்பாவில் இரண்டு நகரங்களுக்கிடையே பூமிக்கடியில் பயணம் செய்த நியூட்ரினோக்களின் வேகத்தை அளப்பதற்கு பௌதிக பேராசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள், பொறியியலாளர்கள் அடங்கிய குழு சில வருடங்களாய் முயன்று வந்தது. ஓபரா குழுவின் ஒரு பிரிவு பரிசோதனை முடிவுகளை நவம்பர்



**அருண் நரசிம்மன்**

2011இல் வெளியிட்டது. சற்று அவசரமாக. வெளிவருகையிலேயே இம்முடிவுகள் அவசரமானவை என்று கருதி ஓபெரா பரிசோதனையில் உடன் வேலைசெய்த சில விஞ்ஞானிகள் குழுவாய் இம்முடிவுகளின் வெளியீட்டில் தங்கள் பங்கு வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டனர். தொடர்ந்து, நியூட்ரினோக்கள் அதியொளித்துகள்கள் (super luminary particles) என்பது நிரூபிக்கப்பட்டுள்ளபடியால், பிரபஞ்சத்தில் எப்பொருண்மையும் ஒளியைவிட வேகமாய் பயணம் செய்யாது என்கிற ஐன்ஸ்ட்டீனின் சித்தாந்தம் மாறுதலுக்குட்படுத்தவேண்டியது அவசியமாகிறது என்று செய்தி வெளியானது.

தமிழில் கூட அறிவியல் அதன் செயல்பாடு, வாசகரின் புரிதலை மேம்படுத்த ஏதாவது அறிவியல் உப அங்கங்களின் விளக்கங்கள் என்று எந்த ஒரு உருப்படியான அறிவியல்கட்டுரையும் எழுதாதவர்களும், ஐன்ஸ்ட்டீன் தூக்கியடிக்கப்பட்டுவிட்டதாகவும்,"மாற்றம் என்பது மானுட தத்துவம்" என்று அன்றே பாரதிதாசன் சொல்லிவிட்டாராக்கும் என்றும் எழுதிச்சென்றார்கள். அறிவுத்துறைகளில் முக்கியமானதாய் ஏதாவது முன்னேற்றங்கள் உலகில் நிகழ்கையில் சட்டெனதனக்கும் அது புரிந்து தெரிந்து செரித்துவிட்டதுபோல் "சர்வக்ஞராய்" கருத்துசொல்வது சிலரின் இயல்பு.

என்னதான் பொதுமக்களிடம், முன்பு எப்போதுமில்லாத வகையில், உடனுக்குடன் பல அறிவியல் தளங்களில் நடக்கும் ஆராய்ச்சி முடிவுகளைக் கொண்டு சேர்க்கிறது என்றாலும், இவ்வகை மிகைகளும் சார்ந்த மீள்-மிகைகளும் சந்தை அறிவியலின் முக்கியமான இடர். கைசொடுக்கும் நேரத்தில் ஒற்றை வரிச் செய்தி மிகைகளை வாசித்துத் "தெளிந்து" தீர்க்கதரிசன மதிப்பீடுகளை கிடைக்குமிடத்தில் (இணையத்தில்) அரைபண்டித அறைகூவலாய் அழற்றுவதும் தவிர்க்க இயலாது.

அறிவியல் சிந்தையின்படி எந்தச்சித்தாந்தமும், கருதுகோளும், கட்டமைப்பும் எதிர் ஆதாரங்களுடன் மறுக்கப்படக்கூடியதே. ஐன்ஸ்ட்டினும் விலக்கல்ல. ஆனால் சித்தாந்தங்களின் திறனுக்கும் பொதுவம்சத்திற்கும் ஏற்ப எதிர் ஆதாரங்களும் அவ்வளவு வலுவானதாக அமையவேண்டும். அப்போதுதான் மாற்றுச்சித்தாந்தம் பற்றி யோசிக்கத் தேவையேற்படும். இதைத் தினந்தோறும் அறிவியல் பழகிவரும் (ஆண்டாள் பொறுத்துக்கொண்டால்: "உண்ணும் சோறும், பருகும் நீரும், திண்ணும் வெற்றிலையும், அறிவியலே" என்று பழகிவரும்) விஞ்ஞானிகள் அறிந்திருப்பவர்களே. அவர்கள் "சந்தை அறிவியல்" கூவி விற்பதை எல்லாம் உடனடியாக ஏற்றுக்கொண்டு "அப்படியே சாப்பிடமாட்டார்கள்".

இந்த "ஒளியை விஞ்சும் நியூட்ரினோ" சோதனை முடிவுகளை 2011இல் வெளிவந்தவுடனேயே "இது சந்தேகக் கேஸ், மேலும் பரிசோதனைகளை சரிபார்த்தால் இம்முடிவுகளின் துல்லியத்தில் சந்தேகம் வரும், ஐன்ஸ்ட்டினை அவ்வளவு எளிதில் அகற்றமுடியாது" என்று சில பௌதிக ஆய்வாளர்களின் கருத்துகளையும், வலைதளங்களில் எழுதிய விளக்கங்களையும் ஊடகங்கள் பொருட்படுத்தவில்லை.

தொடர்ந்து பரிசோதனைகளின் முடிவுகளை செப்பனிட்டதில், இயந்திரத்தில் ஒரு இடத்தில் ஃபைபர் ஆப்டிக் கேபிள்கள் சரியாகச் சொருகப்படவில்லை. அதனால், நியூட்ரினோக்களின் பயணத்தில் 60 நேனொ செகண்ட் ரத்து செய்துகொள்ளவேண்டுமா அல்லது கூட்டிக்கொள்ளவேண்டுமா என்பது சரிவரத் தெரியவில்லை என்று அறிந்துகொண்டனர். முன்னர் ஒளியைவிஞ்சும் வேகம் என்று குறிப்பிட்டதே இப்படி ஒளியின் வேகத்தைவிட நேனோசெகண்ட் பொழுதுகளினால் ஏற்பட்ட வேக வித்தியாசத்தை வைத்தே என்பதால், அம்முடிவுகள் துல்லியத்தில் வழுவின.

இதனால், சில மாதங்கள் கழித்து, பிப்ரவரி 2012இல் அதே விஞ்ஞானிகள் குழு புதிய முடிவுகளைச் சரிபார்த்துவிட்டு, ஆமாம், முன்னர் வெளியிட்ட முடிவுகளில் சில தோராயச்சுழிப்புகள் (ரவுண்டிங் ஆஃப்) நேர்ந்துவிட்டது அதனால் அறிவித்ததில் பிழை. பயணம் செய்த நியூட்ரினோக்களின் வேகம் ஒளியின் வேகத்தை விட அதிகமா என்பது திட்டவட்டமில்லை. அடுத்த சுற்று பரிசோதனைகள் தேவை. இப்போதைக்கு ஐன்ஸ்ட்டீனின் சித்தாந்தத்திற்கு பங்கமில்லை. இப்படி அறிவித்தார்கள். "சந்தை அறிவியல்" பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. அதற்குள் வேறு பரபரப்பான அறிவியல் விஷயங்களுக்கு கடந்து சென்றுவிட்டது.

மேலே குறிப்பிட்ட தமிழ் எழுத்தின் அரைப்பண்டிதர்களும் சளைப்பதே இல்லை. நியூட்ரினொ புதிய முடிவுகளை கண்டுகொண்டார்களோ இல்லையோ, அதற்குள் வேறு விஷயத்திற்கு தாவி விட்டார்கள். உதாரணமாக, 2012-இற்கான பாண்டித்ய வெளிப்பாடாய் சமீபத்தில்கூட -- இருபது வருடமாய் பௌதிகம் சார்ந்து பயிற்சி, ஆய்வு மற்றும் ஆசிரியத்துவம் செய்துவருவோருக்கும் சட்டென்று புரிபடாத - "கன்றாவித் துகள்" பற்றி எளிதாக தங்கள் தீர்ப்புகளையும், தீர்க்கதரிசனங்களையும் இணையத்திலும், அரசியல் சஞ்சிகைகளிலும் எழுதிப்போகிறார்கள் (அறிவியலுக்கு என்று பிரத்யேகமாக சஞ்சிகைகள் வைத்துக் கொள்வது நம் பாரம்பர்யத்தில் தழைப்பதில்லை). மக்கள் காசு கொடுத்து வாங்கிப் படிக்கிறார்கள்.

மற்றொரு "சந்தை அறிவியல்" உதாரணம், 2010இல் வெளிவந்த ஃபெலிஸா வுல்ஃப் சைமன் மற்றும் குழுவினரின் "ஆர்செனிக் பாக்டீரியா" ஆராய்ச்சி முடிவுகள். இதைப் பற்றி "மாற்று உயிர்" என்கிற தலைப்பில் முன்னரே சொல்வனத்தில் சில கட்டுரைகள் எழுதியுள்ளோம். இவ்வாராய்ச்சி முடிவுகள் வெளிவருகையிலேயே எதிர்குரல்களும் துறை விஞ்ஞானிகளிடையே கிளம்பியது. தற்போது ஜூலை 2012இல் வெளிவந்துள்ள புதிய ஆராய்ச்சி முடிவுகள் ஆர்செனிக் பாக்டிரியா அவ்வகையில் ஆர்செனிக்கை மரபணு வரை கொண்டு சென்று "உணவாகக்" கொள்ளும் வகையில் செயலாகவில்லை என்று கண்டுள்ளது. ஃபெலிஸா குழுவினரின் மாற்று உயிர், ஆர்செனிக் பாக்டிரியா பற்றி 2010இல் தடபுடலாய் செய்திகள், பேட்டிகள், படங்கள் என்று வெளியிட்ட ஊடகங்கள், மறுப்பாய் இரண்டு ஆராய்ச்சி முடிவுகள் வெளிவந்தும், (ஓரிரு செய்திக்குறுங்கட்டுரைகள் தவிர்த்து) அதிகம் அவற்றை பிரபலப்படுத்தவில்லை.

மாற்று உயிர் பற்றிய ஆராய்ச்சி இனி யும் தொடரும். ஆனால் சார்ந்த "ஆர்செனிக் பாக்டிரியா" ஆராய்ச் சியோ துரதிருஷ்டவசமாக, சந்தை அறிவியலில் சிக்கிக்கொண்டது. இதற்கு ஒரு பெருங்காரணம் நாஸா-தான்.

**(நன்றி இணையம்)**

# உலக நீரிழிவு தினம்

## நீரிழிவு நோய், சில அடிப்படை உண்மைகள்

### 14 November

உலக நீரிழிவு தினம் ஆண்டுதோறும் நவம்பர் 14ம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் அதிகரித்து வரும் நீரிழிவு நோய் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கடந்த 1991ம் ஆண்டில் சர்வதேச நீரிழிவு மையம் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தால் இந்த விழிப்புணர்வு தினம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இன்று இத்தினத்தைக் கடைப்பிடிக்கும் வேளையில், இந்நோய் குறித்து நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்...

**இன்சுலின் என்ற முக்கிய ஹார்மோன் :**

உற்பத்தியாவதிலும், அதன் செயல்பாடுகளில் குறை நேர்வதாலும் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு அதிகரித்து நீரிழிவு நோய் ஏற்படுகிறது. இதை மருந்துகளின் மூலமும், உடற்பயிற்சிகள் மூலமும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்றாலும், இதனால் பலவித நோய்கள் வர வாய்ப்புள்ளதால் குறைந்த வயதில் மரணம் ஏற்பட வழி வகுக்கிறது.

நீரிழிவு நோயில் இரண்டு வகை உண்டு. முதலாம் வகை, இன்சுலினை நம்பியுள்ள நீரிழிவு நோய் என அழைக்கபடுகிறது. இது குழந்தையாக இருக்கும் போதே ஏற்படக்கூடியது ஆகும். 2ம் வகை வயதான பின் வரும் நோய். இதை பெரும்பாலும் மருந்துகள் மற்றும் உடற்பயிற்சி மூலம் கட்டுக்குள் கொண்டுவர முடியும்.

முதலாம் வகை, சில உடல் எதிர்ப்பு சக்தியால் பாங்கிரியாஸின் பீட்டா செல்கள் அழிக்கப்படுவதால் இன்சுலின் அளவு குறைந்தும், இன்னும் சிலருக்கு இன்சுலினை வீரியம் உள்ளதாக வைக்கும் சக்தி குறைவதாலும் உண்டாகிறது. இதற்கு சீனியின் அளவை அவ்வப்போது சரி பார்த்து இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இது குழந்தைகளையும் இளம் வயதினரையும் தாக்கும். மரபணு குறைபாடு, சுற்றுப்புறம் மற்றும் உடலின் சுய எதிர்ப்பு தன்மை இவற்றால் வரும் இவ்வகை நீரிழிவு நோய்க்கு எந்தவித தடுப்பும் உபயோகப்படாது. நீரிழிவில் பாதிக்கப்பட்டவர்களில் 5ல் இருந்து 10 வீதம் பேர் இந்த வகை நோயை கொண்டிருக்கிறார்கள்.

நீரிழிவு நோய் உள்ளவர்களில் 90 வீதமானோருக்கு இரண்டாம் வகை நீரிழிவு நோய் கொண்டிருக்கிறார்கள். இன்சுலினுக்கு எதிர்ப்பு சக்தி உண்டாவதால் இந்நோய் வருகிறது. இன்சுலினுக்கு தேவை அதிகரிக்க அதிகரிக்க பாங்கிரியாஸ் உற்பத்தியை நிறுத்துகிறது. உடல் எடை அதிகமாக உள்ளவர்கள், சர்க்கரை செரிமான குறைவு, குடும்பத்தில் ஏற்கனவே நீரிழிவு நோய் இருத்தல், அதிக உடல் இயக்கம் இல்லாதது போன்றவை இதற்கு காரணம்.

மூன்றாவது வகை நீரிழிவு நோய் கருத்தரிக்கும் போது வரும். சில பெண்கள் உடல் எடை அதிகமாக இருந்தால், அவர்களின் குடும்ப வரலாறை பொறுத்து இந்த நீழிவு நோய் வர வாய்ப்புண்டு. குழந்தை பிறந்த பின் இதில் 5 வீதமான பெண்களுக்கு இரண்டாம் வகை நீரிழிவு நோய் வரக்கூடும்.

**நீரிழிவு நோய்க்கான மருந்து:**

முதலாம் வகை, நீரிழிவு நோய் உள்ளவர்கள் இன்சுலின் ஊசி அல்லது ஒரு பம்ப் கொண்டு மருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். இரண்டாம் வகை நோய் உள்ளவர்கள் உடற்பயிற்சி மூலம் எடையை குறைப்பதோடு சில மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும். இதை தவிர்த்து கொழுப்புச் சத்தை குறைக்கவும் மாத்திரை எடுத்து கொள்ளவேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் 16 வீதமானோர் இன்சுலின் உபயோகிக்கிறார்கள். மற்றவர்களில் 54 வீதமானோர் மாத்திரைகளும் 17வீதமானோர் இரண்டும் உபயோகிக்கிறார்கள். நீரிழிவு நோய் முதலாம் நிலையில் உள்ளவர்களுக்கு இரத்தத்தில் குளுக்கோசின் அளவு சாதாரணமானவர்களை விட அதிகமாக இருக்கும். ஆனால், அதே சமயம் இவர்களை நீரிழிவு நோய் உள்ளவர்கள் என்றும் சொல்ல முடியாது.


இவர்களுக்கு உணவு உண்பதற்கு முன் குளுக்கோஸ் அளவு பாதிக்கப்பட்டிருக்கும். அதேபோல, இவர்களுக்கு முன் இரவு முழுவதும் சாப்பிடாமல் இருந்து மறுநாள் காலை அளவு பார்க்கப்படும் போது குளுக்கோஸ் அளவு 100,120 மில்லிகிராம் /டெசிலிட்டர் இருக்கும். இது சாதாரணமானவர்களின் அளவை விட அதிகம்.

அமெரிக்காவில் பலரின் குளுக்கோஸ் அளவை சரிபார்த்ததில் 4.1 கோடிக்கும் அதிகமானோருக்கு நீரிழிவு நோய்க்கான முதல் நிலை பாதிப்பு உள்ளது தெரியவந்திருக்கிறது. 2005ம் ஆண்டு மட்டும் 20 வயதுக்கும் மேலானவர்களில் 15 லட்சம் பேருக்கு நீரிழிவு நோய் இருப்பது தெரிய வந்திருக்கிறது.

**இதய நோய், பக்கவாதம் :**

நீரிழிவு நோய் இருந்தால் இன்னும் பல நோய்கள் வரக்கூடும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் மற்றவர்களை விட 4 மடங்கு அதிகமாக இதய நோய் ஏற்படக்கூடிய வாய்ப்பு பெறுகிறார்கள். இதில் இதய நோய், பக்கவாதம் வந்தபின் 65 வீதமானோர் இறக்கிறார்கள். நீரிழிவு நோய் உள்ளவர்களில் 75 வீதமானோருக்கு 130/90க்கு மேல் இரத்த அழுத்தம் ஏற்பட்டு மருந்து உட்கொள்கிறார்கள்.

20 வயதிலிருந்து 74 வயதுக்குள்ளான நீரிழிவு நோயாளிகள் கண் பார்வையை இழக்கிறார்கள். ஆண்டுக்கு 24,000 பேர் புதிதாக கண் பார்வை இழப்பதாக சொல்லப்படுகிறது. சிறுநீரக கோளாறு வரவும் நீரிழிவு நோய் முதல் காரணம் ஆகிறது.




ஆண்டுக்கு 44% புதிய சிறுநீரக கோளாறு உள்ள நீரிழிவு நோயாளிகள் கண்டறியப்படுகிறார்கள். 2002ம் ஆண்டில் நீரிழிவு நோய் உள்ளவர்களில் 1,50,000க்கும் அதிகமானோர் சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டு டயாலிசிஸ் செய்து கொள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்ததாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

60 முதல் 70% வரையான நீரிழிவு நோய் உள்ளவர்கள் நரம்பு சம்பந்தமான நோய்களுக்கு உள்ளாகிறார்கள். கை கால் விரல்களில் உணர்ச்சி அற்றுப்போதல், உணவு செரிக்கும் சக்தி குறைவது போன்றவை ஏற்படுகின்றன. சிலருக்கு கால்கள் நீக்கப்பட வேண்டிய நிலைகூட வருகிறது. பற்களும் அதிகளவு பாதிக்கப்படுகிறது. பெரும்பாலோருக்கு இரண்டாம் வகை நீரிழிவு நோயே அதிகம் ஏற்படுகிறது என்பதால் சீரான உடற்பயிற்சி, உணவு கட்டுபாடு மூலம் நீரிழிவு நோயை தடுக்க முயற்சி செய்யலாம்.

**பிளாக் டீ குடித்தால் நோய் கட்டுப்படுமாம்:**

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற கூற்றை நாம் பலமுறை நினைவுகூர்ந்தாலும், அந்த குறைவற்ற செல்வத்தை பெறுவதில் நம்மில் பலர்




போதிய விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறோம். நாள்தோறும் நிகழ்ந்து வரும் விஞ்ஞான அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப, நோய்களும் பல்வேறு நிலைகளில், வெவ்வேறு தன்மைகளில் மாற்றமடைந்து வருகின்றன.

மனிதகுலத்தில் எண்ணற்ற நோய்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டாலும், அதில் தலையாயதும், மனிதனின் உடலை சிறிது சிறிதாக அழிவுக்கு இட்டுச்செல்வதும் நீரிழிவு நோய்தான். அதனையொட்டி பல ஆய்வுகள் உலக அளவில் நடத்தப்பட்டு, அன்றாடம் புதுப்புது தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அந்தவகையில், லண்டன் நகரில் நீரிழிவு குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பிளாக் டீ அருந்தினால் நீரிழிவு ஓரளவு கட்டுப்படும் என்ற புதிய தகவல் வெளியாகிவுள்ளது. "பிளாக் டீ" யில் இருக்கும் வேதியியல் பொருளுக்கு நீரிழிவைக் கட்டுப்படுத்தும்

## கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சை - டிசெம்பர் - 2012
## தமிழ் மொழியும் இலக்கியமும் - 1
### (2012.11.07 ஆம் திகதி 'கல்வி ஒளி'யில் வெளியாகியிருந்த வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 4 | 2) 3 | 3) 2 | 4) 1 | 5) 1 |
| 6) 4 | 7) 3 | 8) 1 | 9) 3 | 10) 3 |
| 11) 2 | 12) 3 | 13) 3 | 14) 1 | 15) 2 |
| 16) 2 | 17) 2 | 18) 3 | 19) 2 | 20)3 |
| 21) 3 | 22) 1 | 23) 3 | 24) 3 | 25) 2 |
| 26) 4 | 27) 1 | 28) 2 | 29) 2 | 30) 3 |
| 31) 3 | 32) 1 | 33) 4 | 34) 3 | 35) 1 |
| 36) 2 | 37) 2 | 38)2 | 39)2 | 40) 4 |

## கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சை - டிசெம்பர் - 2012
## நாடகமும் அரங்கியலும் (விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 2) 3 | 3) 2 | 4) 4 | 5) 2 |
| 6) 2 | 7) 1 | 8) 1 | 9) 1 | 10) 3 |
| 11) 4 | 12) 3 | 13) 1 | 14) 2 | 15) 2 |
| 16) 1 | 17) 1 | 18) 4 | 19) 4 | 20) 2 |
| 21) 4 | 22) 1 | 23) 1 | 24) 1 | 25) 2 |
| 26) 3 | 27) 1 | 28) 2 | 29) 1 | 30) 1 |
| 31) 1 | 32) 4 | 33) 3 | 34) 2 | 35) 1 |
| 36) 1 | 37) 4 | 38) 1 | 39) 1 | 40) 1 |

## கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சை - டிசெம்பர் - 2012
## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (மாதிரி வினாத்தாள்)

2012 அக்டோபர் 10ஆம் திகதி வெளியாகிய கல்வி ஒளியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (மாதிரி வினாத்தாள்) முதலாம் பகுதி பிரசுரமாகியிருந்தது. இதன் இரண்டாவது பகுதி அடுத்த வாரம் (21.11.2012) கல்வி ஒளியில் பிரசுரமாகும்.

இப்பத்திரிகை இன்'.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 14.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

14-11-2012
# கல்வி ஒளி
தமிழ்நாதம்
மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 22

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை - டிசெம்பர் 2012
## வரலாறு - I (மாதிரி வினாத்தாள்)

**ஆசிரியர்: க. ரவிக்குமார், B.A., M.A., Dip.in.Tech., NCT**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. 40 புள்ளிகள் வழங்கப்படும்
- ஒன்று தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

1.இந்தியாவில் பௌத்த சமயத்தின் நிலவுகை பற்றியும் அது இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டமை பற்றியும் குறிப்பிடும் வரலாற்றேடு பின்வருவனவற்றில் எது?
1.சமந்தபாசதிகாவ 2.டிமுன்டோ 3.மகாவம்சம் 4.இராஜதரங்கனி

2.பின்வரும் இலங்கை தொடர்பான வரலாற்று விடயங்களை அறிய உதவும் வரலாற்று நூல்களில் காலத்தால் முந்தியது?
1.மகாவம்சம் 2.சூலவம்சம் 3.தீபவம்சம் 4.பூஜாவலிய

3.இலங்கைப் பிக்குனிகள் பற்றிய குறிப்பிடத்தக்களவு விடயங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வரலாற்றாதாரம் பின்வருவனவற்றில் எது?
1.சீன எழுத்தாளர்களின் நூல்களில் இருந்து 2.தாடவம்சத்தில் இருந்து
3.போதி வம்சத்தில் இருந்து 4.தம்பதெனிய கதிகா வதையில் இருந்து

4.பின்வருவனவற்றில் ஐந்து அமைச்சர் பரம்பரை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?
1.கொடவாய தூண் கல்வெட்டு 2.வல்லிபுரம் பொற்சாசனம்
3.கந்துறு வெவக் கல்வெட்டு 4.சித்துல் பவ்வக் கல்வெட்டு

5.மகா விகாரைக்கு எதிராக மகாசேன மன்னன் செயற்பட்டான் என்பதற்காக அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த அமைச்சர் யார்?
1.காலிங்கராயர் 2.நிஸாங்க மரனர் 3.மித்தபுத்திர 4.மேகவர்ணபாய

6.ஆஜீவர், ஜைனம், பிரம்மணிய மதங்களையும் மதித்து நடத்தல். சோழ தேசம், பாண்டிய தேசம், தம்பபண்ணி போன்ற நாடுகளுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுதல். பெருந் தெருக்கள் வசதிகளை மேம்படுத்துதல் மேற்குறித்த எல்லா விடயங்களையும் மேற்கொண்டவனாக எவரைக் கருதலாம்?
1.அக்பர் 2.சாஜகான் 3.அசோகன் 4.எல்லாளன்

7.படத்தில் காட்டப்பட்டுள்ள கலைப்படைப்பு எது?
1.சோழர்கால பார்வதி 2.குப்தர்கால பார்வதி
3.பொலன்நறுவை சிவன் 4.குப்தர் - சிவன்



8.ரிதிபெந்தி மூலம் நீர் பெறல்
மீ ஓயா மூலம் நீர் பெறல்
அம்பன் கங்கை மூலம் நீர் பெறல்
மேற்குறித்த வழிகளில் நீரைப் பெறும் குளங்களை முறையே குறிக்கும் விடைத்தொகுதி
1.மாகல்ல வாவி - தப்போ வாவி - பராக்கிரம சமுத்திரம் 2.மகாகனதர - மாகல் கடவல - மாமினியா
3.மாகல்ல வாவி - மாமினியா வாவி - பராக்கிரம சமுத்திரம் 4.தப்போ - மாகல்ல - பராக்கிரம சமுத்திரம்

9.குளத்தின் அமைப்புகளில் ஒன்றாகிய கலிங்கல்லின் (மடைக் கதவு) குளப்பக்கத் துவாரம் சிறிதாகவும், கால்வாய்ப் பக்கத் துவாரம் பெரிதாகவும் அமைக்கப்பட்டிருப்பது தொடர்பான மிகச் சரியான கூற்று?
1.கால்வாய்க்கு அதிகளவுநீரை வழங்குவதற்காக
2.குளத்தில் இருந்து விவசாயத் தேவைக்கு நீரை வெளியேற்ற
3.குளத்து நீர் வீண் விரயமாகாது தடுக்க
4.குளத்து நீரின் வேகத்தால் கால்வாய் அரித்துச் செல்லப்படுவதைத் தடுக்க.

10.பபிரிய, கசுப்தொட்ட ஏபா முதலிய பன்னிரண்டு மகா கவிகள் முதலாம் அக்போ மன்னன் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறும் நூல்.
1.நிகாய சங்கிரஹய 2.தம்பியா அட்டுவா கற்றபதய 3.ஹெபல் சட்டி 4.மகாபச்சா அட்டுவா

11.யுங்லோ என்ற பேரரசனால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட செங்கோ என்ற சீனத் தளபதி இலங்கையில் படித்தறிந்திருக்க முடியாத இலக்கியம்?
1.தீபவம்சம் 2.திசரசந்தேசய 3.பொலன்நறுவை கதிகாவத 4.முவதெவிதாவத

12.சோழர்களுக்கு எதிராக போர் தொடுத்த விஜயபாகு மன்னன் ஆரம்பத்தில் இரு தடவைகள் சோழர்களிடம் தோற்று தப்பி ஓடி ஒழித்துக் கொண்டான். அவ்வாறு அவன் ஒழித்திருந்த இடங்களை முறையே குறிப்பிடும் விடை?
1.பலுட்ட கிரி வக்கிரிகலை 2.வக்கிரிகலை மாகம
3.பலுட்டகிரி - மாகம 4.ஹுங்குரன் கெத்த - வக்கிரி கல

13.A - வலிமையற்ற அரசர்களின் ஆட்சி
B - விஜயபாகுவின் வெளிநாட்டுக் கொள்கை
C - கொள்ளை நோய் பரவியமை
D - கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
E - பொருளாதார வீழ்ச்சி
மேற்சொன்ன காரணிகளுள் பொலன்நறுவை வீழ்ச்சிக்கு நெருங்கிய தொடர்புடைய காரணியாக கருதத்தக்கது எது?
1.A யும் B யும் 2.C 3.A யும் E யும் 4.D

14.பொலன்நறுவையில் இருந்து புலம் பெயர்ந்த பின்பு காடுகளுக்குள் சிங்கள இராசதானிகளுக்கு தலைநகர் களாகத் தெரிவு செய்த இடங்கள் நிரல் I இலும், தெரிவு செய்த தலைவர்களது பெயர்கள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் Iஐ நிரல் II உடன் பொருத்தும்போது சரியான விடை பின்வருவனவற்றில் எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1.யாப்ப கூவ | A - புவனேகபாகு |
| 2.கோவிந்தமலை | B - 3ஆம் விஜயபாகு |
| 3.மினிப்பே | C - சுபதளபதி |
| 4.தம்பதெனிய | D - சங்க தளபதி |

1.C, D, A, B 2.C, A, D, B
3.D, A, B, C 4.B, C, D, C

15.மகனின் அச்சுறுத்தலுக்குப் பயந்து கொத்மலையில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த புத்தரின் வஸ்துவை எடுத்துவந்து கேகாலை வெலிகபி மலையில் தலதாவை கட்டி பிரதிஸ்டை செய்தான் 3ஆம் விஜயபாகு மன்னன் எனக் குறிப்பிடும் நூல்.
1.பூஜா வலிய 2.தாதாவம்சம் 3.போதிவம்சம் 4.இராஜாவலிய

16.முகமது நபியின் பின்னர் இஸ்லாம் சமயத்தின் பாதுகாவலனாக இருந்தவர் பின்வருவோரில் யார்?
1.கலியா உமர் 2.கலிபா அபூபக்கர் 3.கலிபா மாலிக் 4.மஸாத் பேகம்




10) 12X 12 CM
84 X 12 CM
$= \frac{108}{2}$
$= 54\ CM^3$
= 54 ML

11) 4 X 12
$= \frac{48}{2}$ மனித நாள்
$= \frac{24}{3}$
= 8 வேலையாட்கள்

12) $ar^{n-1}$
$3x2^{28-1}$
$= 3 \times 2^{27}$

13) C=5/9 (P-44)
9C = 5(P-44)
= 9C/5 + 44 = P
P = 9C/5 + 44

14) X + 3 < 5
X < 5 - 3
X < 2

15.


16) $53^2 - 43^2$
(53 - 43) (53 + 43)
= 10 x 96
= 960

17) புறக் கோணம் = $180^o - 120^o$
பக்கங்களின் எண்ணிக்கை $60^o$
$\frac{360}{60}$
= 6 பக்கம்

18) 81-61 = 20
ii.இடையம் = $\frac{n+1}{2}$ ஆவது ஈட்டு
$\frac{9+1}{2}$
$= \frac{10}{2}$
= 5 உறுப்பு
= 72

19)x2 + 3x + 2, (x+2) (x+3)
(x+2) (x+1), (x+2) (x+3)
பொ.மா.சி = (x+2) (x+1) (x-3)
பொ.கா.பெ = (x+2)

20)$180^o - 50^o$
$130^o$

21)10+8+6+10+8+6
= 48 cm

22)A=[4,5]


23)Y=mx+c
0 = mx2 + 2
0=2m+2
=0-2 = 2m
=-2 = 2m
=m=-2/2
=m=-1

Y=mx + c
y=-x + 2
வெட்டுப்புள்ளி = C=2
படித்திறன் = C=2

24)Cos = 6/10
tan= எ.ப / அ.ப
8/6


25)
4 69
4 17-1
4 4-1
1-0
=1011 நான்கு

26) P(b) = 1/6 - 1/4
= 2+3 / 12
P(b) = 5/12

27.


28)1:3

29)25/100 x 6000 x 1/12
125 ரூபாய் x 4
500/-
6000 + 500
6500/-

30)


39.இலங்கை ஆரியர்களின் அரசுரிமை அம்சங்கள் தொடர்பான பிழையான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1.அனுராதபுரத்தின் முதன்மை ஆட்சியாளன் “மகாராஜா” எனவும் பிரதேச ஆட்சியாளர்கள் “அரசன்” எனவும் அழைக்கப்பட்டனர்.
2.அரசுரிமை தாய்வழி வாரிசு அடிப்படையில் வழங்கப்பட்டது
3.தசராஜதர்மத்திற்கு ஏற்ப நாடு ஆட்சி செய்யப்பட்டது.
4.அரசர்கள், உலகம், சாசனம் இரண்டையும் பாதுகாக்க வேண்டிய தலைமை கடமையில் இருந்தனர்.

40.நீர்ப்பாசனக் குளம் ஒன்றின் அமைப்புகளில் “மேஹுல” எனும் சிங்களப் பதத்தால் அழைக்கப்படும் உறுப்பு பின்வருவனவற்றில் எது?
1.அலைதாங்கி
2.கலிங்கல் தொட்டி ஊடாக நீரை கால்வாய்க்கு வழங்குவதற்குரிய நீர்கட்டுப்பாட்டு உபகரணம்
3.மேலதிக நீரை குளம் ஒன்றில் இருந்து வெளிக்கொண்டு செல்லும் அமைப்பு
4.கலிங்கற் கட்டு என்னும் அமைப்பு

---

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012**
**கணிதம் - I (17.10.2012 இல் வெளியாகிய மாதிரி வினாத்தாள்)**
**பகுதி - A (விடைகள்)**

1)24X15
=360.00

2)$P^2 + 3$
$= 5^2 + 3$
=25+3
=28

3)P={1,3,5,7,9,11,13,15,19}

4)50 X 100
=50%

5.)

6)120+P=180
=180-120=P
=P=60°

7)$P^2$-7'P
=P(P-7)

8) $\frac{250}{90}$
=2.66/-

9. $\frac{1}{x-1} - \frac{2}{1-x}$
$\frac{1}{x-1}\ \frac{2}{x-1}$
$\frac{3}{x-1}$



17.●துருக்கியில் பிறந்து நாடோடியாக வாழ்ந்தவர்
● வஹுல் பரம்பரையைச் சேர்ந்தவர்
●சிறந்த கொடையாளி
●குதிரைப் பந்து விளையாடுகையில் தவறி விழுந்து இறந்தவர்
மேற்சொன்ன தகவல்கள் கீழ்வருவோரில் மிகச் சரியாக பொருந்தக்கூடிய நபர்
1.கூர்கி முகமது 2.அலாவுதீன் கில்ஜி 3.பாபர் 4.குதுபுதீன் ஐபக்

18. A - தலைநகர் தௌலதா பாத்திற்கு இடம்மாறல்
B - டில்லி சுல்தான் கஜனி நகரை வெற்றி கொள்ளல்
C - குலாவியரில் ஆடைகள் இன்றிக் காணப்பட்ட சமண சிலைகள் பாபர் மன்னரால் அழிக்கப்படல்
D - சாஜகான் சிறையிடப்படல்
1.B,A,C,D 2.A,B,C,D 3.B,C,D,A 4.C,A,B,D

19.தன்னை அலெக்சாண்டரின் பிரதி விம்பம் எனக்கூறி நாணயங்களிலும் இவ் விடயத்தை வெளியிட்ட முஸ்லிம் ஆட்சியாளன்
1.கோரி முகமது 2.கஜனி முகமது 3.அலாவுதீன் கல்ஜி 4.ஜகாங்கீர்

20.பின்வரும் நாடுகளில் பௌத்த சமயத்தை அறிமுகப் படுத்தியவர்களை முறையே குறிப்பிடும் விடை
A - இலங்கை
B - சீனா
C - பர்மா

1.A - மகிந்த தேரர்
B - காசியப்ப மதங்க தேரர்
C - சோன, உத்தர

2.A - மகிந்த தேரர்
B - சோன, உத்தர
C - காசியப்ப மதங்கதேரர்

3.A - மகிந்த தேரர்
B - சூ பாலன
C - திம்புலா கலதேரர்

4.A - தேவநம்பிய திஸ்ஸ
B - சூபாலன
C - சோன, உத்தர

21.தனிநபர்களை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறை
பிரதேச ஆட்சியாளர்களிடம் தனிப்பட்ட படைப்பிரிவு காணப்படல்
நிலத்தை அனுபவிப்பதற்காக சேவைகளை வழங்குதல்
மேற்சொன்ன பொதுப்பண்புகளை அதிகம் கொண்டமைந்த மிகச் சரியான ஆட்சி முறை எது?
1.இராஜகாரிய முறை 2.ஜனநாயக முறை 3.மானிய முறை 4.எதேற்சதிகார முறை

22.ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் மிக முக்கியமானது?
1.ஐரோப்பாவில் ஏற்பட்ட வியாபார விருத்தி
2.மானிய முறையின் வீழ்ச்சி
3.ஐரோப்பியர் மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தமை
4.கிழக்கு உரும்பேரரசின் தலைநகரான கொன்ஸ்தாந்திநோபிளை துருக்கியர் கைப்பற்றியமை

23.கீழே நிரல் 1இல் மறுமலர்ச்சிக் கால கலைஞர்களை ஊக்குவித்தவர்களும் நிரல் II இல் அவர்கள் எந்த இடத்தவர்கள் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிரல் 1 உடன் நிரல் II ஐ பொருத்தி சரியான விடையை இனம் காண்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1.ஸ்நேஸா | A - புளோரன்ஸ் |
| 2.மெடிஸி | B - பூரா |
| 3.எஸ்டே | C - மிலான் |
| 4.கொன்ஸாகா | D - மாண்டுவா |

1.D,A,B,C 2.C,A,B,D 3.C,A,D,B 4.A,B,C,D

24.மானிட வாதம் என்பது தொடர்பான மிகச் சரியான கூற்று எது?
1.எல்லாவற்றையும் விட மனிதன் முக்கியமானவன்
2.சுதந்திரமாக பிறக்கும் மனிதன் சுதந்திரமாக வாழவிடு
3.உணவைப் பெற அனைத்து மனிதருக்கும் உரிமையுண்டு
4.எல்லாவற்றையும் மேற்கொள்பவன் மனிதனே

25.குருதி இதயத்தின் இடது பக்க அறையிலிருந்து வெளியேறி சுவாசப்பையை அடைந்து அங்கு சுத்திகரிக்கப் பட்டு மீண்டும் இதயத்தை அடைந்து உடல் முழுவதும் ஓடிச் செல்கிறது என்று முதன்முதலில் கருத்துரைத்தவர்
1.வைத்தியர் பெரசல்சஸ் 2.விஞ்ஞானி - நியூட்டன்
3.வைத்தியர் மைக்கல் சர்டெஸ் 4.ஓவியர் டாவின்சி

26.புதிய முடியாட்சி முறை (தேசிய அரசு) பற்றிய பண்புகளில் தவறானது எது?
1.அரசருக்கு நிரந்தர இராணுவம் இருந்தது
2.கிறிஸ்தவ திருச்சபைக்கு போதிய ஆதிக்கம் காணப்பட்டமை
3.வணிகவாதப் பொருளாதாரம்
4.புதிய சமூக வகுப்பு தோற்றம்

27.தீப்பொறி என்னும் பத்திரிகையை வெளியிட்டுத் தனது கொள்கைகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்ற தலைவர் யார்?
1.ஸ்டாலின் 2.கிட்லர் 3.லெனின் 4.ட்ரொட்ஸ்கி

28.சீனக் கூட்டாட்சியின் முதலாவது ஜனாதிபதி யார்?
1.மா - ஓ - சோங் 2.சங் - யாத் - சென்
3.சியாங்காய் செக் 4.யுவாங் - ஷி - காயிகே

29.கீழே நிரல் 1இல் உள்ளவர்கள் அமைத்த தலைநகரங்கள் நிரல் II இல் உள்ளன. அவற்றை முறையே பொருத்தினால் கிடைக்கும் சரியான விடை

| நிரல் 1 | நிரல் II |
|---|---|
| 1.ஷோகுன்கள் | A. கென்டன் |
| 2.கோமிங்டாங் கட்சி | B. தேவகிரி |
| 3.முகமது இபின்துளக் | C. மஹமூத் |
| 4.முகமது ஹியாமன் ஷா | D. ஈடோ |

1.A,D,C,B 2.D,A,B,C 3.D,A,C,B 4.A,D,B,C

30.பின்வருவனவற்றில் சீனத் தேசியவாதக் கட்சியுடன் தொடர்புறாத சம்பவம்?
1.சங்காய் நகரில் ஊர்வலம் சென்ற கொம்யூனிஸ்டுகளை தாக்கியமை.
2.தண்டனை வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்தமை.
3.வடசீன ஆட்சியாளர்களான இராணுவ ஆட்சியாளர்களுக்கு சவாலாக அமைந்தமை.
4.கலாசாரப் புரட்சியை முன்னெடுத்தமை.



31."புரட்சியை புரட்சி செய்வதன் ஊடாகக் கற்றுக்கொள்ளுங்கள்" என இளைஞர்களைத் தூண்டி புரட்சிச் செயற்பாட்டை முன்னெடுத்த தலைவர்?
1.மா-ஓ-சேதுங் 2.லெனின் 3.காந்தி 4.நேரு

32.பின்வரும் பெண் அரசிகளில் இலங்கையை ஆட்சி புரியாதவர் யார்?
1.மித்தா இளவரசி 2.கல்யாணவதி ராணி 3.சுகலாதேவிராணி 4.திரிலோக சுந்தரிராணி

33.நிரல் I இல் உள்ள வம்சங்களுடன் தொடர்புடைய அரசர்களை நிரல் II இல் இருந்து தெரிவு செய்க?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. கலிங்க வம்சம் | A. ஸ்ரீ மாற ஸ்ரீ பல்லவன் |
| 2. பாண்டிய வம்சம் | B. நிஸஸ்க மல்லன் |
| 3. வஹல் வம்சம் | C. 1ஆம் ஹரிகரன் |
| 4. சங்கம வம்சம் | D. குதுபுதீன் ஐபக் |

1.A,B,C,D 2.B,A,C,D 3.B,A,D,C 4.A,B,D,C

34.1ஆம் உலக மகாயுத்த ஆரம்பத்தில் ஐரோப்பிய வல்லரசுகளின் நட்பு கூட்டு அணியிலும் யுத்த முடிவில் முக்கூட்டு அணியிலும் இருந்த நாடு?
1.இத்தாலி 2.சுவீடன் 3.அமெரிக்கா 4.பல்கேரியா

35.பின்வருவனவற்றுள் 2ஆம் உலகப் போருக்கான உடனடிக் காரணங்களில் ஒன்றாக அமைந்துள்ளது? எது?
1.சரஜீபோ படுகொலை 2.அல்ஷேஸ் லொறைன் பிரச்சினை
3.ஜேர்மன் போலந்தை தாக்கியமை 4.ஜேர்மன் பெல்ஜியத்தை தாக்கியமை

36.முதலாம் உலகப்போர் ஓய்ந்த பின் நாடுகளுக்கிடையே அமைதியை நிலைநாட்டவென கூட்டப்பட்ட பரீஸ் அமைதி மாநாட்டில் தோல்வியுற்ற நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை நிரல் 1 இல் உள்ளன. அதனுடன் தொடர்புடைய நாடுகள் நிரல் II இல் உள்ளன. நிரல் 1ஐ நிரல் II உடன் பொருத்தினால் கிடைக்கும் சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1.1919.06.10 - செயின் ஜேர்மியான் உடன்படிக்கை | A. துருக்கி |
| 2.1919.06.28 - வர்சேல்ஸ் உடன்படிக்கை | B. ஜேர்மனி |
| 3.1920.06.04 - டிரினியான் உடன்படிக்கை | C. ஆஸ்திரியா |
| 4.1923.07.23 - லாசேன் உடன்படிக்கை | D. ஹங்கேரி |


1.C,B,D,A 2.C,A,B,C 3.B,C,A,D 4.C,D,A,B

37.பின்வருவனவற்றில் சர்வதேச சங்கத்தின் கட்டமைப்புக்குள் உள்ளடங்காத அமைப்பு?
1.செயலகம் 2.பாதுகாப்புச் சபை 3.கவுன்சில் 4.பேரவை

38.பின்வருவனவற்றில் 1ஆம் உலகப்போருடன் தொடர்புடைய சம்பவங்கள் மட்டும் இடம்பெற்றுள்ள விடைத் தொகுதி எது?
A. வர்சேல்ஸ் உடன்படிக்கை
B. மன்னர் ஹைசர் வில்லியம் போலந்திற்கு தப்பிஓடுதல்
C. கலாசாரப்புரட்சி ஏற்படல்
D. முசோலினி சுட்டுக்கொல்லப்படல்
E. பிரான்சிஸ் பேர்டினந் சுட்டுக் கொல்லப்படல்
1.A,B,C 2.C,D,E 3.B,C,E 4.A,B,E

ஆற்றல் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.
இதனையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் சாப்பிட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி உள்ளனர். அதற்கு மேல் சென்றால் அதுவும் ஆபத்தில் முடியும் என அவர்கள் எச்சரித்துள்ளனர். ஆகவே, நீரிழிவு நோயை கட்டுப்படுத்த இதனை ஓர் வழிமுறையாக எடுத்துக் கொண்டாலும், அதனை வராமல் தடுப்பதே நாம் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய அம்சமாகும்.

2ஆம் வகை நீரிழிவு நோய் குழந்தைகளை தாக்குவதில்லை. 10 வயதுக்கு குறைவான குழந்தை அதிக உடல் பருமன், பார்வை மங்கல், அடிக்கடி நோய் தொற்று மற்றும் திடீரென எடை குறைதல் இதன் அறிகுறியாகும். கழுத்து, அக்குள் பகுதிகளில் கறுப்பு வெல்வெட் நிற தோல் மாறுதல் இருந்தால் உடல் பருமனானவர்களுக்கு 2ஆம் வகை நீரிழீவு முன்னதாகவே வரக்கூடும். டாக்டர்கள் அடங்கிய மருத்துவக்குழு மூலம் சமீபத்தில் அரிசி பற்றி ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. இதில் பிரௌன் அரிசியின் குணங்கள் நீரிழிவுக் கட்டுப்பாட்டில் பங்காற்றும் விதம் பற்றி கண்டுபிடிக்கப் பட்டது.




**நீரிழிவு உள்ளவர்கள் எவ்வாறு பாதங்களை கவனமாக வைத்திருப்பது?**

பாதங்களைத் தினமும் பரிசோதிப்பது மிக முக்கியமாகும். கால்களில் வெடிப்புகள், காய்ப்புகள் சொறி, காயங்கள், வெட்டுக்கள், தடிப்புகள், கொப்புளங்கள், நிறமாற்றங்கள் வீக்கங்கள், பாதம் அதிக சூடாக, குளிராக இருத்தல் ஆகியவற்றை கவனித்தல் மிக அவசியமாகும்.

கால் விரல்கள் நகங்களுக்கிடையில் பூஞ்சணம் ((Fungus) தொற்றியுள்ளனவா என தினமும் பார்க்க வேண்டும். மேற்கூறியவற்றில் ஏதேனும் நீரிழிவு நோயாளியை தாக்குமேயானால் உடனடியாக வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.தினமும் ஒரு முறையாவது பாதங்களைக் கழுவி மெல்லிய பருத்தித் துணியினால் துடையுங்கள். கால்களை கழுவி சுத்தம் செய்ய சுடு தண்ணீரை பாவித்தலை நிறுத்தவேண்டும். ஏனெனில் நோயாளியின் பாதங்களில் சில நேரங்களில் உணர்வு இல்லாததன் காரணமாக அதிக சூடான நீர் பாதங்களைத் தாக்கலாம். கால்களைக் கழுவ சூடான நீர் அவசியமானால் சூடான நீரை பாவனைக்கு எடுப்பதற்கு முன்னர் கையால் அல்லது முழங்கையால் நீரைத் தொட்டுப் பார்த்துவிட்டு பின்னர் காலில் ஊற்றுங்கள்.



கால்களை கழுவுவதற்கு சவர்க்காரம் பாவியுங்கள். எக்காரணம் கொண்டும் ஏனைய இராசாயனப் பொருட்களை பாவிக்க வேண்டாம். கால்களைத் துடைப்பதற்கு மிருதுவான துணியைப் பாவியுங்கள். கால்களின் விரல்களின் சந்துகளுக்கிடையில் கவனமாகத் துடைக்கவும் தோலை ஈரலிப்பாக வைத்திருப்பதற்கு பூச்சுக்கள் பாவிக்கலாம்.

கால் விரல்களின் நகங்களை வெட்டும் போது நேராக வெட்டுங்கள். நகங்களின் ஓரங்களை அல்லது உள்நோக்கி வளர்ந்த நகங்களை வெட்டுவதைத் தவிர்க்கவும். நோயாளிக்கு தனது நகங்களை வெட்ட இயலாத போது வேறொருவரின் உதவியைப் பெறுவது அவசியமாகும். குளித்ததன் பின்னர் நகங்கள் மிருதுவாக இருக்கும்.

பாதங்களில் ஏற்படும் தடிப்புக்கள், கொப்புளங்கள் ஆகியவற்றிற்கு ஒருபோதும் சுய வைத்தியம் செய்தல் மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இதன் காரணமாக நோயாளி கால்களை ஆபத்திற்குட் படுத்தலாம். வெறுங்காலுடன் நடப்பதை முற்றாகத் தவிர்க்கவும். நோயாளி குளிக்கும் போதும் நித்திரை செய்யும் போதும் மாத்திரமே பாதணிகளைக் கழற்ற வேண்டும்.

காலணிகளை, காலுறைகளை மிகவும் கவனமாகத் தெரிவு செய்தல் அவசியமாகும். காலணிகளை தெரிவு செய்கையில் நோயாளியின் கால்களுக்கு நன்கு பொருத்தக் கூடிய கால் விரல்களுக்கு பாதிப்படையாத வகையில் போதிய இட வசதியுள்ள சப்பாத்துக்களை தெரிவு செய்ய வேண்டும்.

எப்போதும் சப்பாத்துக்களை மாலை நேரங்களில் வாங்குவது நல்லது. ஏனெனில் மாலை நேரங்களில் கால்கள் பொதுவாக வீக்கத்துடன் இருக்கும். சப்பாத்துக்களை நன்கு சோதிக்கவும் உட்புறத்தை விசேடமாக சோதிக்கவும் ஏனெனில் சப்பாத்தினுள்ளிருக்கும் கூர்மையான பொருட்கள் கிழிந்த ஓரங்கள் உங்கள் பாதங்களில் காயங்களைத் தோற்றுவிக்கலாம். பருத்தியினாலான தளர்வான காலுறைகளை அணியுங்கள். கால்களில் காயங்கள் உள்ளவர்கள் தங்களுக்கென விசேடமான வகையில் தயாரிக்கப்பட்ட பாதணிகளை அணிய வேண்டும்.

நோயாளி தங்களின் பாதங்களுக்கு பயிற்சி கொடுப்பது நல்லது. ஏனெனில் உடற் பயிற்சியானது பாதங்களுக்கான குருதியோட்டத்தை அதிகரிக்கச் செய்வதோடு நீரழிவைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றது.கால்களை குறுக்காக வைத்து இருப்பதைத் தவிர்க்கவும். ஏனெனில் இது கால்களுக்கான குருதியோட்டத்தை குறைப்பதுடன் நரம்புகளிலும் அழுத்தத்தை உண்டாக்குகின்றது.

புகைத்தலை நிறுத்த வேண்டும். நீரிழிவு நோயாளிகள் புகைப்பிடிப்பது மிகவும் ஆபத்தானது. குருதிக் கலன்களில் புகைத்தலும் நீரிழிவும் அடைப்பை ஏற்படுத்தி நோயாளியின் பாதங்களிலும் ஆபத்தை ஏற்படுத்தி விடுகிறது.

நீரிழிவு நோயாளிகள் காயங்கள் ஏற்படுவதைக் கூடியளவு தவிர்ப்பது மிகவும் நல்லது. நீரிழிவு உள்ளவர்களுக்கு காயங்கள் மிகவும் இலகுவில் ஆறுவதில்லை. காயங்களுக்கு நீண்ட கால வைத்தியம் அவசியப்படும். இதன் காரணமாக இக்காயங்கள் அவர்களின் முழு வாழ்க்கையையும் பாதிக்க வைக்கின்றது.

உங்களுக்கும் நீரிழிவு இருந்தால் உங்கள் பாதங்கள் முகத்தைவிட முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு முறையும் வைத்தியரைச் சந்திக்கும் வேளையில் தவறாது உங்கள் கால்களை வைத்தியரிடம் காண்பிக்க வேண்டும். நீரிழிவு நோயாளிகளின் பாதங்களை கவனிப்பதற்காக விசேட தேர்ச்சி பெற்ற கால் நோய் நிபுணர்கள் (வைத்தியர்கள்) உள்ளனர். இவர்களை அணுகி தேவையான வைத்தியச் சேவையைப் பெறுவது அவசியமாகும்.

இன்று எமது நாட்டில் அதிகரித்துவரும் நீரிழிவு காரணமாக கால்நோய் நிபுணர்களின் தேவை அதிகரித்து வருகின்றது. எனவே நீரிழிவு நோயாளி உங்கள் கால்களை கவனித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கும் நீரிழிவு இருந்தால் உங்கள் கால்களில் நோயேதுமில்லை என ஒரு போதும் எண்ண வேண்டாம். நாம் பிறக்கும் போது இரு கால்களுடன் பிறக்கின்றோம். அக்கால்களை இழந்தால் வாழ்நாளில் மீளப்பெற இயலாது.

**நீரிழிவாளருக்கான உணவுத் திட்டம் :**

நீரிழிவாளர்கள் எத்தகைய உணவை உண்ண வேண்டும்? எவ்வளவு உண்ண வேண்டும்? இவைதான் நீரிழிவாளவர்கள் அறிய விரும்புகிற முக்கிய விடயமாக இருக்கிறது.

உண்மையில் நீரிழிவாளர்களுக்கு எனத் தனியான உணவுத் திட்டம் என எதுவுமே கிடையாது எனச் சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படவீர்கள். ஆனால் அதுதான் உண்மை.




"நீரிழிவாளர்கள் சீனி சேர்க்கக் கூடாது. சோறைத் தவிர்க்க வேண்டும். அரிசி கோதுமை ஆகிய மாப் பொருள்களால் செய்யப்படும் இடியப்பம், பிட்டு, இப்பம், நாடில்ஸ் போன்ற சிற்றுண்டிகளை குறைந்தளவே உண்ண வேண்டும்'' என்பதே பெரும்பாலான நோயாளர்களின் எண்ணமாக இருக்கிறது.

பல மருந்துவர்களும் இதையே நோயாளர்களுக்கு ஆலோசனையாகக் கூறுகிறார்கள்.

இப்பொழுது உலகளாவிய ரீதியில் மருத்துவர்களாலும், உலக சுகாதார ஸ்தாபனம் போன்றவற்றாலும் சிபார்சு செய்யப்படும் உணவுமுறை என்ன சொல்கிறது?

கொழுப்பு, சீனி, உப்பு ஆகியன குறைந்தளவும் பழங்களும் காய்கறிகளும் அதிகம் கொண்டதுமா ஆரோக்கியமான சமவலுவுள்ள (balanced) உணவையே ஆகும்.

எதையும் முற்றாகத் தவிர்க்கச் சொல்லவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

கொழுப்பு என்றால் என்ன? எண்ணெய், பட்டர், மார்ஜரின் போன்ற அனைத்துக் பொருள்களும், அவை சார்ந்த உணவுகளாகும். சீனி கூடத் தவிர்க்கப்படவேண்டும் என்று சொல்லப்படவில்லை. ஆனால் அவற்றை உணர்வுபூர்வமாக அணுகாது, புத்திபூர்வமாக அளவோடு உணவில் சேர்க்கலாம்.

பொதுவான ஏனைய ஆலேசனைகள் என்ன?

உணவில் மாப்பொருள் உணவு பெரும்பகுதியாக இருக்க வேண்டும். மாப்பொருள் உணவுகளைத் தேர்ந்தெடுக்கும்போது கிளைசீமிக் இன்டெக்ஸ் (Low GI ) குறைவான உணவுகள் முக்கிய இடம்பெறுவது நல்லது. கிளைசீமிக் இன்டெக்ஸ் என்பது குறிப்பிட்டளவு ஒரு உணவை தனியாக உண்ணும்போது சீனியின் அளவு எவ்வளவு அதிகரிக்கிறது என்பதை பற்றிய ஒரு கணக்கீடு ஆகும். கிளைசீமிக் இன்டெக்ஸ் அதிகமுள்ள உணவுவகைளைத் தவிர்க்கவும். அதிலும் முக்கியமாக பிரதான உணவுகளுக்கு இடையேயான குறுந்தீனிகளைத் தவிர்ப்து நல்லது. அவற்றிற்குப் பதிலாக ஒரு பழம் சாப்பிடலாமே.

காலை உணவை ஒருபோதும் தவிர்க்க வேண்டாம்.

உணவுகளை வேளைக்கு வேளை சாப்பிட வேண்டும். உணவுகளைத் தப்ப விடுவது கூடாது. விரதம் இருப்பது கூடாது. எண்ணெய், நெய், பட்டர், மார்ஜரின் போன்றவற்றை உண்பதில் அவதானம் தேவை. ஹைரஸன் ஏற்றப்பட்ட மார்ஜரின் வகைகள் கூடாது. ஒலிவ் ஓயில், சூரியகாந்தி எண்ணெய், சோள எண்ணெய், நல்லெண்ணய் போன்றவை நல்லது, ஆயினும் தேங்காய் எண்ணெய், பாம் எண்ணெய் தவிர்க்கப்பட வேண்டியது அல்ல. அளவோடு உண்ணலாம். ஒரு முறை பொரித்த எண்ணெயை வீசிவிட வேண்டும். மீண்டும் மீண்டும் அதே எண்ணெயை உபயோகிக்கக்கூடாது.

பால் அருந்தும்போது கொழுப்பு குறைந்த அளவுள்ள பாலைத் தேர்ந்தெடுங்கள். யோகர்ட் போன்றவற்றை உண்ணும்போதும் அவ்வாறே குறைந்த கொழுப்புள்ள தையே தேர்ந்தெடுக்கவும்.

பொரித்த, பேக் பண்ணப்பட்ட உணவுகளைத் தவிர்க்கவும்.

துரித உணவுகளைத் (Fast food)தவிருங்கள். கட்லட், ரோல்ஸ், பிட்ஸா, சமோசா, ஹம்பேகர், பிரன்ஸ் ப்ரை, பிஸ்கற், வடை, சூசியம், சொக்லற் கேக், வனிலா கேக் போன்ற பலவும் அடங்கும்.

இறைச்சியைத் தேர்ந்தெடுக்கும்போது கொழுப்பு குறைந்தவற்றையே உண்ணுங்கள். ஆடு, மாடு, பன்றி போன்றவற்றிக்கு பதிலாக கோழி உண்ணலாம். அதிலும் கொழுப்புள்ள பகுதியை நீக்குங்கள்.

மதுபானம் அதிகம் கூடாது. இனிப்புள்ள மென் பானங்கள் கூடாது. ஆனால் போதிய நீராகாரம் எடுங்கள்.

இக் கட்டுரைக்கான தரவுகள் பிரித்தானிய சுகாதார சேவையினரின் பரிந்துரையை ஆதாரமாகக் கொண்டதாகும்.

**டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.**

# 40 ஆண்டுகளுக்கு பின் சிரியாமீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்

கோலன் ஹைட்ஸ் பகுதியிலுள்ள இஸ்ரேல் இராணுவ முகாமிற்கு சிரியாவில் இருந்து மோட்டார் குண்டுகள் விழுந்ததைத் தொடர்ந்து இஸ்ரேல், சிரியா மீது எச்சரிக்கை ஏவுகணை தாக்குதலை நடத்தியுள்ளது. கடந்த 1973 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தத்திற்கு பின்னர் இஸ்ரேல், சிரியா மீது தாக்குதல் நடத்துவது இது முதல் முறையாகும். ஏற்கனவே சிரியாவில் தொடரும் அரச எதிர்ப்பு போராட்டம் அயல் நாடுகளான துருக்கி, லெபனான் எல்லைகளிலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இஸ்ரேலும் இதில் தலையிட்டுள்ளது.

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் ஹைட்ஸ் பகுதியில் அண்மையில் இஸ்ரேல் இராணுவ வாகனம் ஒன்றின் மீது சிரியாவிலிருந்து துப்பாக்கிச்சூடு நடத்தியதைத் தொடர்ந்து இஸ்ரேல் துருப்புகள் எல்லைப் பகுதியில் உஷார்படுத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் இது குறித்து ஐ.நா.விடம் முறையிட்டது.

இந்நிலையில் சிரியாவில் இருந்து மீண்டும் மோட்டார் குண்டுகள் இஸ்ரேல் இராணுவ முகாமில் விழுந்துள்ளது.

இதனைத் தொடர்ந்தே இஸ்ரேல் சுமார் 40 ஆண்டுகளுக்கு பின் முதல் முறையாக சிரியா மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. எனினும் இது எச்சரிக்கை தாக்குதல் என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இதன் போது இஸ்ரேல், சிரியா மீது ஒரே ஒரு தமூஸ் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவ தரப்பு கூறியுள்ளது. இந்த ஏவுகணை இலக்குகளை தெளிவாக தாக்கக்கூடியது. ஆனால் தாம் இலக்கு எதனையும் தாக்கவில்லை என இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

சிரியாவில் இடம்பெறும் அரச படைக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான மோதலில் இஸ்ரேல் பகுதிக்குள் தவறுதலாக துப்பாக்கி குண்டுகள் தாக்குவ்தோடு மோட்டார் குண்டுகளும் விழுந்து வருகின்றன. இவ்வாறு சிரிய படை நடத்திய எறிகணை தாக்குதல் தவறுதலாக இஸ்ரேல் எல்லை வேலியை தாண்டி யூதக் குடியிருப்பு பகுதி ஒன்றில் விழுந்துள்ளது. இதனால் எந்த பாதிப்பும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இனிமேலும் எல்லை தாண்டி தாக்குதல்கள் இடம்பெற்றால், இஸ்ரேல் அமைதியாக இருக்காது என ஜெரூசலத்தில் வைத்து இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகூ எச்சரித்துள்ளார். "எமது சிரிய எல்லைப் பகுதியில் என்ன நடக்கிறது என கூர்மையாக அவதானித்து வருகிறோம்.

எதற்கும் நாம் தயாராகவே இருக்கிறோம்" என கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய இஸ்ரேலிய வாராந்த அமைச்சரவை கூட்டத்தில் நெதன்யாகு கூறினார்.

ஏற்கனவே சிரியா - இஸ்ரேலுக்கு இடையில் நீண்ட காலமாக யுத்த சூழல் நீடித்து வருகிறது. இரு நாட்டு எல்லையில் ஐ.நா. படை யுத்த சூன்ய பகுதியை கடைப்பிடித்து வருகிறது.



### துருக்கி எல்லையில் ஏவுகணை தளம்

மறுபுறத்தில் சிரியாவின் துருக்கி எல்லையிலும் இரு நாட்டுக்கும் இடையில் பதற்றம் நீடிக்கிறது. அண்மையில் சிரியாவின் எறிகணை தாக்குதலால் துருக்கி கிராமத்தைச் சேர்ந்த 5 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து துருக்கி, சிரியா மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தியது.

அத்துடன் சிரியாவைத் தாக்குவதற்கு துருக்கி பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்பட்டது. இந்நிலையில் சிரிய எல்லையில் துருக்கி இராணுவத்தை பலப்படுத்தி தீவிரமாக கண்காணித்து வருகிறது. அத்துடன் எல்லைப் பகுதியில் நேட்டோ ஏவுகணைத் தளத்தை அமைப்பது குறித்து துருக்கி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்த தகவலை துருக்கி ஜனாதிபதி அப்துல்லா குல் தெரிவித்தார். சிரியாவின் எந்த வகையான அச்சுறுத்தலில் இருந்தும் பாதுகாத்துக் கொள்ள எமக்கு முழு உரிமை உள்ளது.

இதனால் எல் லையில் அமெரிக்க பெட்ரொயிட் ஏவுகணைத் தளத்தை நிறுவுவது குறித்து நேட்டோவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக குல் கூறினார்.

எனினும் துருக்கி எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் சிரிய இராணுவம் கிளர்ச்சியாளர்கள் மீது வான் தாக்குதல் நடத்தியுள்ளது. சிரியாவின் வடகிழக்கு பகுதியில் இருந்து முன்னேறி வரும் கிளர்ச்சியாளர்கள் துருக்கி எல்லைப் பகுதியில் இருக்கும் ராஸ் அல் அயின் பகுதியை கடந்த சனிக்கிழமை கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் சிரிய இராணுவம் ராஸ் அல் அயின் மீது ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல் நடத்தியதோடு பீரங்கி தாக்குதலையும் நடத்தியது.

லெபனானிலும் பதற்றம்

அதேபோன்று சிரியாவின் மற்றுமொரு அயல் நாடான லெபனானில் சிரிய மோதலை ஒட்டி பதற்றம் நீடித்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரத் தில் மூவர் கொல்லப்பட்டதோடு மேலும் ஐவர் காயமடைந்தனர்.

தெற்கு லெபனான் கரையோர நகரான சிடோனில் இந்த கலவரம் ஏற்பட்டுள்ளது. லெபனானின் ஷியா பிரிவு ஆயுதக் குழுவான ஹிஸ்புல்லா வுக்கும் சலபி பிரிவு தலைவரான ஷெய்க் அஹமத் அஸிர் ஆதரவாளர் களுக்கும் இடையிலேயே மோதல் ஏற்பட்டுள்ளது.

இதில் சலபி பிரிவு தலைவரான அஹமத் அஸிர் ஹிஸ்புல்லா அமைப்பு சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத்திற்கு ஆதரவளிப்பதற்கு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளதோடு சிடோன் பகுதியில் இருக்கும் ஹிஸ்புல்லா அமைப்பின் சுவரொட்டிகளை கிழித்தெறியும்படி தமது ஆதரவாளர்களை கோரியுள்ளார். இதனைத் தொடர்ந்தே இரு தரப்புக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

சிரியாவில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மக்கள் எழுச்சி போராட்டத்திற்கு பின்னர் அதனை ஒட்டி லெபனானிலும் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகிறது. அண்மையில் பஷர் அல் அஸாத்திற்கு எதிராக செயற்பட்டு வந்த லெபனான் உளவுப் பிரிவு தலைவர் கொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

சிரியாவில் தொடரும் வன்முறைகளில் இதுவரை 37,000 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக சிரியா தொடர்பில் கண்காணித்து வரும் மனித உரிமை அமைப்புகள் கூறியுள்ளன.

## இலங்கையைப் புதுடில்லி...(தொடர்)

சொன்னார். இந்தியாவின் தென் பகுதியிலுள்ள தி.மு.க. இந்தியாவின் மத்தியலுள்ள கூட்டணி அரசாங்கத்தில் மிகவும் முக்கிய பங்காளிக் கட்சியாகும் என்றும் அவர் சொன்னார்.

முன்னாள் இந்தியப் பிரதமர்களான இந்திரா காந்தி மற்றும் ராஜிவ் காந்தி, காந்தி ஆகியோருக்கும் ஆலோசகராகச் செயற்பட்ட ரபால் மல்ஹோத்ரா இந்தியப் பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றியவர்.

சண்டிகாரிலுள்ள கிராமிய மற்றும் தொழில்துறை அபிவிருத்திகான ஆய்வு மையத்தின் நிர்வாக உப தலைவராகவும் இவர் பணியாற்றுகிறார். மேற்படி மையத்தின் தலைவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் என்பது குறிப்பிடத் தக்கது.

இலங்கையில் நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக இந்தியாவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தால், 2012 மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைப் பேரவைக் கூட்டத்திலிருந்து இந்தியா விலகி நின்றிருக்கும்.

இலங்கை அரசாங்கம் புனரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் ஆகிய விடயங்களில் இலங்கை அரசாங்கம் பாரிய முன்னேற்றப் பாய்ச்சலைக் கண்டுள்ளது. இது சந்தோசத்துக்கு இடமின்றி நல்லிணக்கத்துக்குப் பங்களிக்கும். இந்தத் தகவல் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருந்தால், புதுடில்லியில் இருக்கும் மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டிலிருக்கும் தனது கூட்டாளிக் கட்சிக்கு நம்பிக்கையை ஊட்டியிருக்கும். அதாவது நிரந்தர அரசியல் தீர்வொன்றினை எட்டுவதற்கான வழிமுறைப் போக்கில் எதிர்கொள்ளப்படும் சவால்கள், தடைகளுக்கு மத்தியில் ஏதோ ஒரு வகையில் முன்னேற்றம் ஏற்படுத்தப்படும் என்று மத்திய அரசாங்கம் தமிழகத்திலுள்ள தனது கூட்டாளிக் கட்சிக்கு நம்பிக்கையை ஊட்டிருக்கும் என்றும் ரபால் மல்ஹோத்ரா கூறினார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான உறவுகள் மிகச் சிறந்தவையாக உள்ளன. ஜெனிவா தீர்மானத்துக்கும், பிந்திய மோசமான தாக்கங்களுக்கும் தீய பின் விளைவுகளுக்கும் இரு பெரும் நாடுகளுக்கிடையிலும் அதிருப்தியை ஏற்படுத்த முனையும் சர்வதேச அழுத்தங்களுக்கும் எதிராக நின்றுபிடிக்கக் கூடிய அளவுக்கு வலுவான உறவுகள் இரு தலைவர்களிடமே உள்ளன. இரு தலைவர்களுக்குமிடையிலான உறவுகள் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையானவை.

இது பொருளாதாரம், பாதுகாப்பு, கலாசாரம் உட்படப் பல்வேறு முனைகளில் பலமானதாகவும் ஆரோக்கியமாகவும் இந்த இருதரப்பு உறவுகள் தொடர்ந்தும் வலுவடைந்து வருகிறது.

பெரும்பாலான இலங்கை மக்களுக்கு எதிராகத் தென்னிந்தியர்கள் குரோதம் கொண்டிருக்கவில்லை.

ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்துக்கு முன்னதாகப் புதுடில்லிக்கு இந்தத் தகவல் கிட்டவில்லை என்றும் சொன்னார்.

தக வல் கிட்டியிருந்தால் இந்தியாவின் தீர்மானம் வேறுவிதமாக அமைந் திருக்கும் என்றும் சொன்னார்.

## 10 கோடி பைபிள்கள் அச்சிட்டு சீன நிறுவனம் சாதனை

சீனாவை சேர்ந்த நிறுவனம், 10 கோடி பைபிள் புத்தகங்களை, அச்சிட்டு சாதனை படைத்துள்ளது.

சீனாவின் நான்ஜிங் மாகாணத்தில் உள்ள, "அமிட்டி பிரின்டிங் கம்பெனி" 88ம் ஆண்டு முதல், 10 கோடி பைபிள்களை அச்சிட்டுள்ளது.

இந்நிறுவனத்துக்கு பல்வேறு நாடுகளில் கிளைகள் உள்ளன. 70 நாடுகளில், 90 மொழிகளில், இந்நிறுவனம் நான்கு கோடி பைபிள்களை அச்சிட்டு வழங்கியுள்ளது.

சீனாவில், மதங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. இருப்பினும், 1.6 கோடி கிறிஸ்தவர்கள் உள்ளனர். 55 ஆயிரம் தேவாலயங்கள் செயல்பட்டு வருகின்றன. "அமிட்டி" நிறுவனம் வெளியிடும் பைபிள் புத்தகங்களுக்கு, சீன அரசு, வரி சலுகை அளித்துள்ளது.

## அமைச்சர் எஸ்.பி.யின்...(தொடர்)

டபிள்யூ.ஜி.கே. திசாநாயக்கா தெரிவித்தார். அவருக்கு விஷேட டாக்டர்களின் குழுவொன்று சிகிச்சையளித்து வருவதாகவும் ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

சாலிய திசாநாயக்காவின் தேக நிலை சம்பந்தமாகப் பல்வேறு வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதென்றும், அவர் கழுத்தில் சுருக்குப் போட்டுத் தற்கொலை செய்ய முயற்சித்த போதும் உடல் உள்ளுறுப்புகள் பாதிக்கப்படவில்லையென்றும் ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

# பெண்களும், அறிவியலும்

பத்து பெண் அறிவியலாளர்கள் பெயர்களை கூறமுடியுமா என்று கேட்டுப் பாருங்கள் அல்லது உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். பலர் அறிந்த ஒரே பெண் அறிவியலாளர் மேரி க்யுரி. ஆனால் ஐன்ஸ்டின், நியுட்டன், ஜகதிஷ் சந்திரபோஸ், சி.வி.ராமன் என்று பலராலும் பட்டியல் தரமுடியும். ஏன் - அறிவியலில் பெண்கள் இல்லையா இல்லை அவர்கள் அதிகம் அறியப்படவில்லையா.

ஜனவரி 2005ல் ஒரு கருத்தரங்கில் ஹார்வர்ட் பல்கலைத் தலைவர் லாரன்ஸ் ஸம்மர்ஸ் தெரிவித்த கருத்துக்கள் கடும் எதிர்வினைகளை உருவாக்கின. ஹார்வர்ட் பல்கலைகழக ஆசிரியர்கள் உட்படபலர் அவரை விமர்சித்தனர்.தொடர்ந்து பத்திரிகைகளில் அறிக்கைகள், கட்டுரைகள் மற்றும் கூட்டறிக்கைகள், கூட்டுக் கடிதங்கள் வெளியாகின்றன. தன் கருத்துக்களுக்காக வருந்துவதாக அவர் கூறியும் சர்ச்சை ஓயவில்லை. இப்போதும் சர்ச்சை தொடர்கிறது. ஒரு கட்டத்தில் தான் பேசியது என்ன என்பதையும் வெளியிட்டு, தன் நிலைப்பாட்டினைத் தெளிவாக்கினார்.


ஹார்வர்ட் பல்கலை பேராசிரியர்கள், மூன்று பல்கலைகழகங்களின் தலைவர்கள் எனப் பலர் அவர் மீது விமர்சனம் வைத்தனர்.அவரை பதவி நீக்கம் செய்யமாட்டோம் என்று பல்கலைகழகத்தினை நிர்வகிக்கும் அமைப்பு கூறிவிட்டது. அவர் என்னதான் கூறினார். அவரது உரையில் மூன்று வி'யங்கள் விவாதிக்கப்பட்டிருந்தன. அவர் கூறியதை சுருக்கமாகச் சொன்னால், உள்ளார்ந்த திறன்கள், குடும்ப பொறுப்புகள், மற்றும் வேலை சார்ந்த காரணங்கள்தான் பெண்கள் அறிவியல், பொறியியற் துறைகளில் மேலிடங்களில் இடம் பெறாததற்கு காரணம், பாரபட்சமோ, சமூகமயமாதலோ அல்ல. இக்கருத்தினை அவர் ஒரு கருதுகோளாக முன்வைத்தேன், ஒரு விவாதத்தினை உருவாக்கவே முன்வைத்தேன் என்று அவர் கூறினாலும் அதை பலர் ஏற்கவில்லை. ஏனெனில் அவரது முழுப் பேச்சினைப் படித்தவர்களுக்கு அவர் தன்னுடைய பாரபட்சமான கருத்துக்களுக்கு அறிவியல் முலாம் பூசுகிறார் என்பது புரிந்துவிடும். சம்மர்ஸ் தன் உரையில் ஒரு சில 'பெண்களே அறிவியல் புலங்களில் இருப்பதற்கு மூன்று காரணங்களைக் கூறினார். குழந்தை(கள்), குடும்ப பொறுப்புள்ள பெண்களால் வாரத்திற்கு 80 மணி நேரம் உழைக்க முடியாதது அல்லது அப்படி உழைக்க அவர்கள் தயங்குவது, உயர்நிலைப் பள்ளிகளில் நடத்தப்பட்ட தேர்வுகளில் கணிதம், அறிவியலில் சில பெண்களே ஆண்களை விட அதிக மதிப்பெண் பெறுகின்றனர், இதற்குக் காரணம் பாலினங்களுக்கிடையே உள்ள இயற்கையாக அமைந்த வேறுபாடு.



வேறு வார்த்தைகளில் சொன்னால் பெண்களுக்கு எதிரான பாரபட்சமோ அல்லது நிறுவனங்களின் செயல்பாடுகள், கொள்கைகள், அறிவியல், பொறியியலில் பெண்கள் அதிக அளவில், குறிப்பாக உயர் பதிவிகளில் இடம் பெறாததற்கு காரணமல்ல. இயற்கையாகவே பெண்கள் சிலவற்றில் ஆண்களை விட திறன் குன்றியவர்கள். சம்மர்ஸ் ஒரு சாதாரண நபராக இருந்து இதைக் கூறியிருந்தால் இவ்வளவு தூரம் சர்ச்சை எழுந்திராது. அவர் உலகில் முதலிடத்தில் உள்ளதாக கருதப்படும் பல்கலையின் தலைவர்.இதற்கு முன்பு அமெரிக்க அரசிலும், அதற்கு முன்பு உலக வங்கி யிலும் உயர்பதவிகள் வகித் தவர்.

இந்த இயற்கையாகவே பெண்கள் .... என்பதற்கு வரலாறே உண்டு. பெண்கள் அறிவியல் செய்வதற்கு படைக்கப்படவில்லை என்ற வாதம் சில நூற்றாண்டுகளுக்கு முன் நிலவியது. இயற்கையாகவே வெள்ளை நிறத்தவர் அல்லது ஐரோப்பியர், அமெரிக்கர் பிற இனத்தவரை விட அறிவில் மேம்பட்டவர்கள். இயற்கையாகவே மனிதரில் வேறுபாடு உண்டு, அதன் விளைவாக என்னதான் முயற்சி எடுத்தாலும் ஒரு சில இனத்தவர் வெள்ளையவர் போல் புத்திசாலிகளாக முடியாது. இந்த இயற்கையாகவே என்ற வாதத்தினை இயற்கையா அல்லது சூழல், வளர்ப்பா என்ற சர்ச்சையின் ஒரு பகுதியாகக் காணலாம். அனைவரும் சமம் என்று கூறும் போது நாம் பாலின ரீதியாகவோ அல்லது இன ரீதியகவோ யாரும் பிறக்கும் போதே யாரையும் விட உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் இல்லை என்று கொள்கிறோம். அதாவது இயற்கையயிலே சிலர் உயர்ந்தவர்கள், சிலர் தாழ்ந்தவர்கள் என்ற வாதத்தினை ஏற்பதில்லை. மேலும் சரியான சூழலும், போதுமான வசதிகளும் தரப்பட்டால் வறியவர்கள், படிப்பறிவில்லாத பெற்றோரின் குழந்தைகள், பெண்கள் - இவர்கள் தங்கள் திறன்களை வெளிப்படுத்தி சமூகத்தில் தாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் என்பதை நிரூபிக்கமுடியும். அவர்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது பாரபட்சங்களும், போதுமான வாய்ப்புகள் தரப்படமால் இருப்பதுதான் காரணம். இத்தடைகளை நீக்குவது மட்டுமல்லாது, இதுவரை போதுமான பிரதிந்தித்துவம் பெறாதவர்களுக்கு சில சலுகைகள் தரப்படவேண்டும்,


குறைந்தபட்சம் பாகுபாடுகள் எந்த விதத்தில் இருந்தாலும் அவை நீக்கப்பட வேண்டும். இன்னொரு தரப்பின் வாதம் இது போன்ற “சலுகைகள்“ தேவையேயில்லை, ஏனெனில் அனைவரும் சமமன்று. சிலர் பிறப்பிலேயே சில விசே'த் திறன்களைப் பெற்றிருப்பவர். அதனால் அவர்கள் வாழ்வில் முன்னேறுவர். திறனற்றவர்கள் பின் தங்கி இருப்பதில் வியப்பில்லை. இதுதான் சமூகத்தில் பிரதி-பலிக்கிறது. ஏற்றதாழ்வுகளுக்கு முக்கியமான காரணம் இதுதான். எனவே “தகுதியற்றோருக்கு“ சலுகைகள் வழங்குவது இயற்கைக்கு முரணனாது. இது போன்ற வாதங்கள் புதிதல்ல என்றாலும் பல்வேறு கட்டங்களில் இவ்வாதங்கள் அறிவியல் பூர்வமானவை என்று நிரூபிக்க வேமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




இவை சமூக டார்வினியக் கோட்பாட்டுடன் சேரும் போது சமூகத்தில் வெற்றி, தோல்வி என்பதற்கு பரிணாம பரிமாணம் தரப்படுகிறது. காலங்காலமாக இவை இனவாதத்தினையும், காலனி யாதிக்கதினையும், ஜாதி பாகுபாட்டினையும், ஆணாதிக்கத் தினையும் இன்ன பிற பாகுபாடுகளையும் நியாயப்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றன.

# அம்பேத்கரின் பெண்ணியம்

## - ஒரு பார்வை



[illegible]மத்துவம் என்பது தொடக்கக் காலத்திலிருந்தே இல்லை. ஆணுக்குப் பெண் அடிமையாகவும் ஆதிக்க சாதியினருக்கு அடுத்த சாதியினர் கட்டுப்பட்டும் இருந்து வந்துள்ளனர். வருகின்றனர். பெண்களுக்கு ஆதரவான குரல் சங்கக் காலத்திலிருந்தே ஒலித்து வருகிறது. பெண்களும் பேசியுள்ளனர். ஆண்களும் குரல் கொடுத்துள்ளனர். இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் பெண்ணியம் பேசப்படுவது தொடர்கிறது. இருபதாம் நூற்றண்டில் மொத்த தலித் சமூகமும் முன்னேற வேண்டும் என்னும் நிலைப்பாடடுடன் தீவிரமாக போராடிய அம்பேத்கர் பெண் சமூகம் மேன்மையுற வேண்டும் என தனிக் கவனம் செலுத்தி பெண் விடுதலைக்கு பங்காற்றியுள்ளார். அம்பேத்கரை ஓரு சட்ட மேதையாகவும் ஒரு தலித் தலைவராகவும் போற்றப்பட்டதால், பேசப்பட்டதால் அவர் ஒரு பெண்ணியவாதி என்பது வெளிச்சப்படுத்தப்படவில்லை. பா.பிரபாகரன் அக்குறையைப் போக்கும் வண்ணம் “அம்பேத்கரின் பெண்ணியம்“ தொடர்பான சிந்தனைகளை, செயல்களை தொகுப்பாக அளித்துள்ளார். “பெண்களுடைய முன்னேற்றத்தை அளவிடும் அம்பேத்க்கரின் மறைக்கப்பட்ட “பெண்ணியபிம்பம்“ இந்நூல் மூலம் நமக்கு அறிமுகமாகிறது என“யாதுமாகி“ லெனாகுமார் குறிப்பிட்டுள்ளது தொகுப்பின் நோக்கை அறியச் செய்கிறது.

இந்தியாவிலுள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட இனங்களின் விடுதலைக் குறியீடு டாக்டர் அம்பேத்கர் என தொகுப்பைத் தொடங்கி முதலில் “தலித் பெண்ணியம்“ குறித்து விளக்கியுள்ளார். தலித் என்பதாலும் பெண் என்பதாலும் இரண்டு நிலைகளிலும் பாதிக்கப்படுகிறாள் தலித் பெண். இவைகளில் இருந்து ஒரு சேர விடுபட வேண்டிய நிலையே “தலித் பெண்ணியம்“ என்கிறார். பார்ப்பனியத்துக்கும் முதலாளியத்துக்கும் எதிராக தலித் பெண் போராட்டம் நடந்த வேண்டும் என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

“அம்பேத்கரின் பெண்ணியச் சிந்தனைக்கான பின்னணி“யினை அறிந்து பகுதி மூன்றில் கூறியுள்ளார். ஆங்கில அரசின் சட்டப்படி அம்பேத்கரின் குடும்பப் பெண்கள் கல்வி கற்க முடிந்தது. இதுவும் ஒரு காரணமாயிற்று என்கிறார். மகாத்மா பூலே அம்பேத்கரின் ஆசான். இவர் பெண்ணிய விடுதலைக்கு வித்திட்டவர். இதுவும் அம்பேத்கரைத் தூண்டியது என்கிறார். புத்தர், அவர் கற்ற கல்வி,அரசியல் பின்புலமும் ஆகியனவும் அம்பேத்கரின் பெண்ணியவாத-ியாக மாற்றியது என்றும் குறிப்பிடுகிறார்.

சமூகத்தில் சாதியம் ஒரு தொடர் பிரச்சனை. காலங்காலமாகவே இருந்து வருகிறது. சாதியம் நீடிப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் “அகமணம்“ ஒரு முக்கிய அடிப்படை என்று அம்பேதகர் ஆய்ந்தளித்துள்ளார் என்கிறார். இதில் ஆணாதிக்கமும் உள்ளது என்றும் உணர்த்தியுள்ளார். அகமணம் என்பது தன் உறவுக்குள்ளேயே, சொந்தத்துள்ளேயே திருமணம் செய்து கொள்வதாகும். இதனால் சாதி வளர்ந்து கொண்டேயுள்ளது என்கிறார். கலப்பு மணம் செய்தால் சாதியம் ஒழிந்து விடும் என்று தெரிந்தே அகமணத்தைக் கட்டாயப்படுத்தி வந்துள்ளனர் என்றும் குற்றம் சாட்டடியதையும் குறிப்பிட்டுள்ளார். அகமணம் செய்யப் படுவதால் பெண்கள் சாதியத்திலிருந்தும் தப்பிக்க முடியாமல் அடிமையாகவே இருக்க வேண்டியதைக் கண்டு அகமணத்தை அம்பேத்கர் எதிர்த்துள்ளார் என்கிறார். அகமண முறையாலே விதவை என்னும் கொடிய நிலையும் உடன்கட்டை ஏறுதலும் தொடர்கிறது என்று கண்ட அம்பேத்கர் கலப்பு மணத்ததை ஆதரித்துள்ளார். அம்பேத்கரின் ஆய்வை ஏற்றுக் கொண்டாலும் வரவேற்றாலும் சமூகம் அகமண முறையிலிருந்தும் சாதிய பிடியி லிருந்தும் மீளாமல் உள்ளதற்காக கட்டுரையாளர் வருந்தி யுள்ளது அவரின் சார்புக்குச் சான்று.

“அம்பேத்கரின் பெண்ணிய விடுதலைக் கருத்துக்களும் - செயல்பாடுகளும்“ எவ்வாறு இருந்தன, இருக்கின்றன என ஒரு பகுதியில் விவரித்துள்ளார். சுதந்திரமான சமத்துவ, சகோதரத்துவ சமூகத்தையே அம்பேத்கர் விரும்புகிறார் என்பதன் மூலம் ஆணும் பெண்ணும் சமம் என்பதையே வலியுறுத்தியுள்ளார் என்று தன் கருத்தை முன்வைத்துள்ளார்.

மேலும் பெண்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டாலே முன்னேற்றம் காண முடியும் என்னும் கருத்தையும் காட்டியுள்ளார். சாதிய உணர்வைக் களைந்தெறிய பெண்கள் பொதுத் தளத்திற்கு வரவேண்டும் என்று அம்பேத்கர் வேண்டியிருப்பதைக் குறிப்பிட்டுள்ளார். பெண்களை இழிவுபடுத்தும், அடிமைப்படுத்தும் மனுஸ்மிருதியை எரித்தது அவரின் செயல்பாடுகளில் ஒன்று என்கிறார்.

**அவசரம்!** அவசரம்! சீக்கிரம் வாருங்கள், வாருங்கள். பாக்ஸரை எடுத்துச் செல்கிறார்கள்' என்று பெஞ்சமின் கத்தியது. பன்றியிடம் அனுமதிகூட கேட்காமல் எல்லா மிருகங்களும் வேலைகளை அப்ப டியே விட்டுவிட்டு, பண்ணைக் கட்டிடத்தை நோக்கி ஓடின. உண் மைதான், அங்கே மூடிய ஒரு பெரிய வண்டி லாயத்துக்கு எதி ரில் நின்றுகொண்டிருந்தது. வண் டியில் இரண்டு குதிரைகள் பூட் டப்பட்டிருந்தன. வண்டியின்மேல் பெரிய எழுத்துக்களில் ஏதோ எழு தப்பட்டிருந்தது. வண்டியோட்டி பார்ப் பதற்கே அவநம்பிக்கை விளைவிக் கும் அருவருப்பான தோற்றமுடை யவனாகவும் தந்திரக்காரனாகவும் காணப்பட்டான். லாயத்தில் பாக்ஸ ரைக் காணவில்லை. விலங்குகள் எல்லாம் அந்த வண்டியைச் சுற் றிச் சுற்றி வந்து 'போய்வா, பாக் ஸர், போய்வா' என்று விடை கொடுத் தனுப்பின. முட்டாள்கள்! முட்டாள் கள்! என்று பெஞ்சமின் குதித்துக் குதித்து வந்தது. தன் கால்களால் பூமியை அறைந்தது. அது சொல் லியது 'முட்டாள்களே! வண்டிமேல் எழுதியிருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா?' மிருகங்கள் சற்றுத் தயங்கின. அங்கு ஒரு விநாடி மௌனம் நிலவியது.




பிறகு முரியல் எழுத்துக்கூட்டி வண் டிமேல் எழுதியிருப்பதை படித்தது. அதை அப்பால் தள்ளிவிட்டு பெஞ் சமின் எல்லா மிருகங்களுடைய காதிலும் விழும்படியாக வாசித்தது. ஆல்பிரட் ஸிம்மண்டன்ஸ், குதிரை கொல்லி, தோல் எலும்பு வியாபாரி, நாய்க்குட்டிகளுக்கு மாமிசம் கிடைக்கும்'' என்று படித்தது பெஞ் சமின், 'புரியவில்லையா உங்களுக்கு பாக்ஸரை குதிரை கொல்லி எடுத் துச் செல்கின்றான், புரிந்ததா? என்றது அது.

விலங்குகள் எல்லாம் இந்தக் கொடுமையை எண்ணிப் பயங்கர மாகக் கூச்சலிட்டன.

அதே சமயம் வண்டிக்காரன் சாட்டையைச் சொடுக்கித் தன் வண்டியை ஓட்டத் தொடங்கினான். முற்றத்தை விட்டு வண்டி வேகமாக வெளியேறியது. எல்லா மிருகங்க ளும் உரக்கக் கத்திக்கொண்டு வண்டியைப் பின் தொடர்ந்தன. க்ளோவர் விழுந்தடித்துக்கொண்டு முன் வரிசைக்கு வந்தது. அப்போது வண்டி வேகமாகப் போகத் தொடங் கியது. பருத்துவிட்ட க்ளோவர் வேகமாக ஓட முயன்றது. பாக்ஸர்!

பாக்ஸர்! என்று கத்திக் கொண்டே ஓடியது. மூடிய வண் டியில் உயர இருந்த யன்னல் வழியாக பாக்ஸரின் முகமும் அதன் நெற்றியிலுள்ள வெள்ளைக் கோடும் தெரிந்தன.

பலமான குரலில் க்ளோவர் கத் தியது. "பாக்ஸர்! பாக்ஸர்! வந்து விடு வெளியே வந்துவிடு வெளியே, உன்னை கொல்ல அழைத்துப் போகிறார்கள்."

'வெளியே குதித்துவிடு பாக்ஸர்' என்று எல்லா மிருகங்களுமாகச் சேர்ந்து இப்போது குரல் கொடுத் தன. ஆனால் வண்டி வேகமாகச் சென்றது. க்ளோவர் சொன்னதை பாக்ஸர் புரிந்துகொண்டதா என் பது சந்தேகம்தான். ஆனால் ஒரு நிமிடத்திற்குள் அதன் முகம் ஜன் னலிலிருந்து மறைந்தது. உட்பகு தியை பாக்ஸர் காலால் உதைத் துக் கொண்டிருக்கும் சத்தம் கேட் டது. சத்தம்தான் பெரிதாகக் கேட் டதே தவிர, பலம் அதிகமில்லாத உதைகள்தான் அவை. **(நாளை)**

## நான் தான் அரிசி!


என்ன ஆச்சரியமாக உள்ளதா? "நான் தான் பேசுகிறேன்" என்று சொன்னது நெல். நான் வளமான வண்டல் மண்ணில் விளைவேன், அதிக மழை, மிதமான வெப்பம், ஈரப்பதம் ஆகியவை எனக்குத் தேவை. மழை குறைவாகப் பெய்யும் இடங்களில் நீர்ப்பாசனம் மூலமாக என்னை சாகுபடி செய்கிறார்கள் என்றது நெல்.

"உன்னை எவ்வாறு விளைவிக்கிறார்கள்?" என்று கேட்டான் கீரன்.

உழவு செய்து பண்படுத்திய நிலத்தில் என் விதைகளை விதைப்பார்கள். வளர்ந்ததும் எனக்கு "நாற்று" என்று பெயர். வளர்ந்த நாற்றுகளைப் பறித்து நீர் குறைந்த பண்படுத்தப்பட்ட நிலத்தில் என்னை வரிசையாக நடுவார்கள்.

"அப்படியா! மேலே சொல் எனக்கு ஆர்வமாக உள்ளது" என்றான் கீரன்.

"நான் வளரும் பொழுது நீர் பாய்ச்சி, உரமிடுவார்கள். நான் வளரும்பொழுதே என்னுடன் "களை" என்று சொல்லக்கூடிய தேவையற்ற செடிகளும் முளைக்கும். அவற்றை நீக்கி என்னை நன்றாகப்



பராமரிப்பார்கள். கதிர் நன்கு முற்றிய பிறகு அறுவடை செய்வார்கள். கதிர்களை நன்றாக அடித்து என்னைத் (நெல்மணிகளை) தனியாக எடுப்பார்கள்.


"உன் கதை கேட்பதற்கு மிக நன்றாக உள்ளது. என் வீட்டிற்கு நீ எவ்வாறு வந்து சேர்ந்தாய்?" எனக் கேட்டான் கீரன்.

"நெல்மணிகளைப் பிரித்ததும் அரவை ஆலையில் அரிசியாக மாற்றுவர். பின்னர் சந்தைக்கு எடுத்துச் செல்வர். அங்கிருந்து உங்கள் வீடுகளை வந்தடைவேன். உங்களுக்குப் பிடித்தமான உணவாக மாறுவேன். நீங்கள் என்னை விதவிதமாய் சமைத்து உண்ணலாம்" என்றது நெல்.

உடனே யாழினி, "ஆம். ஆம். நெல்லில் புரதம் மற்றும் மாவுச் சத்துக்கள் உள்ளதாக என் ஆசிரியர் கூறினார்" என்றாள். "உண்மைதான்" என்றது நெல். அதற்குள் அம்மா அரிசி கஞ்சி தயார் செய்து கொண்டு வந்தார்கள். நெல் சொன்ன கதையைக் கேட்ட கீரன் அதை மகிழ்ச்சியோடு வாங்கிப் பருகினான்

**அரிசியில் தயாராகும் உணவு வகைகள்:**

சோறு, இட்டலி, தோசை, வெண்பொங்கல், சர்க்கரைப்பொங்கல், பிரியாணி, கொழுக்கட்டை, அரிசி உப்புமா, அரிசிக் கஞ்சி, அரிசிக் கூழ், அரிசிப் பாயசம்.



# சிறுவர் அமுதம்

## குயிலே குயிலே



இளங்குயிலே! இளங்குயிலே!
இளம்காலை வாராயோ!-
உன்இன்பமணிக் குரலெடுத்து
ஏழிசையைப் பாடாயோ!

கவிக்குயிலே! கவிக்குயிலே!
கவிச்சோலை வாராயோ!-
உன்கனி அமுதக் குரலெடுத்து
காதலினைப் பாடாயோ!

கருங்குயிலே! கருங்குயிலே!
கருக்கலிலே வாராயோ!-
என்காதினிலே தேன்பாய்ச்ச
காவியங்கள் பாடாயோ!

மாங்குயிலே! மாங்குயிலே!
மாலையிலே வாராயோ!-
உன்மகரயாழ் குரலெடுத்து
மனம்குளிரப் பாடாயோ!

பூங்குயிலே! பூங்குயிலே!
பூஞ்சோலை வாராயோ!-
உன்பொங்குமெழில்
குரலெடுத்து
பூபாளம் பாடாயோ!

தேன்குயிலே! தேன்குயிலே!
தேரேறி வாராயோ!-
உன்தித்திக்கும் குரலெடுத்து
தெம்மாங்கு பாடாயோ!

## இருட்டிலும் ஒலி கேட்கும்



முல்லா ஒரு மாலை நேரத் தில் தன் நண்பர் ஒருவர் வீட் டிற்குச் சென்று அவருடன் நேரம் போனது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார். இருட் டாகி விட்டது நண்பருக்கு மெழுகுவர்த்தியை எங்கு வைத் தேன் என்று தெரியவில்லை. இருட்டில் அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்தார்.

"என்ன சமாச்சாரம்" என்று கேட்டார் முல்லா.

"மெழுகுவர்த்தியை எங்கோ வைத்து விட்டேன், இருட்டில் உட்கார்ந்தா நாம் பேசிக் கொண் டிருப்பது?" என்று நண்பர் வருத் தத்தோடு கூறினார்.

"இதற்காகவா, கவலைப்படு கிறீர்கள் நமது பேச்சு ஒலி இருட்டில் கூட நம் இருவர் காதுகளில் விழும் என்பதை மறந்து விட்டீரா?" என்றார். முல்லாவின் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற சாதுரியமான நகைச் சுவையை அனுபவித்து ரசித்த நண்பர் மகிழ்ச்சியோடு சிரித் துக் கொண்டார்.

சுடோக்கு எண் 94 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 2 | 9 | 4 | 5 | 8 | 3 | 7 |
| 4 | 3 | 7 | 6 | 8 | 1 | 2 | 5 | 9 |
| 8 | 9 | 5 | 7 | 2 | 3 | 6 | 1 | 4 |
| 1 | 4 | 9 | 8 | 3 | 2 | 5 | 7 | 6 |
| 2 | 8 | 3 | 5 | 6 | 7 | 4 | 9 | 1 |
| 7 | 5 | 6 | 4 | 1 | 9 | 3 | 8 | 2 |
| 5 | 2 | 8 | 1 | 9 | 4 | 7 | 6 | 3 |
| 9 | 7 | 4 | 3 | 5 | 6 | 1 | 2 | 8 |
| 3 | 6 | 1 | 2 | 7 | 8 | 9 | 4 | 5 |

சுடோக்கு எண் 95

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | | 3 | 7 |
| 3 | | | | | | 8 | | |
| | 2 | | 9 | | 7 | | | 4 |
| 1 | | 9 | | 4 | 6 | | | |
| 5 | | | | | | | | 3 |
| | | | 3 | 9 | | 5 | | 6 |
| 2 | | | 6 | | 3 | | 4 | |
| | | 3 | | | | | | 8 |
| 4 | 1 | | 8 | | | | | |

### இன்று ஆரம்பமாகிறது

# கந்தன் கருணைக்குரிய கந்தசஷ்டி விரதம்

முருகப் பெருமானுக்குரிய விரதங்களில் மிகவும் சிறந்ததாகப் போற்றப்படும் கந்த சஷ்டி விரதம். ஐப்பசி மாதத்து அமாவாசையை அடுத்துவரும் பிரதமை முதல் சஷ்டி ஈறாக ஆறுநாட்களுக்கு அனுட்டிக்கப்படுகிறது.

புனிதமும் மகோன்னதமும் மிக்க உயர்ந்த விரதமாகிய கந்தசஷ்டி விரதத்தை முறைப்படி அனுட்டித்தால் பிள்ளைப் பாக்கியம் கிடைக்கப் பெறலாம் என்பது ஆன்றோர் நம்பிக்கை "சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" என ஒரு முதுமொழியும் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது.

மகிமை மிக்க இந்தக் கந்தசஷ்டி முருகப் பெருமான் தேவாதி தேவர்களையும் முனி சிரேஷ்டர்களையும் கொடுமைப்படுத்திய சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் எனப்படும் கொடிய அசுரர்களை அழித்து ஒழித்த நாள் என்று கூறப்படுகின்றது.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன். இந்தக் கந்தசஷ்டி காலத்தில் முருகப் பெருமானுடைய திருவருள் பரிபூரணமாகக் கிடைக்க மெய்யன்போடு விரதம் அனுட்டித்து வழிபாடியற்றுதல் வேண்டும். இந்த ஆறு நாள்களும் எதுவுமே உண்ணாமல் வெறும் தண்ணீரை மட்டும் குடித்து ஆறு மிளகை உட்கொண்டு விரதமிருப்பாரும் உளர்.

சிலர் மதியம் ஒருவேளை மட்டும் உணவு உட்கொண்டு விரதங் காப்பர். சிலர் பாலும் பழமும் மட்டுமே எடுப்பதும் உண்டு. எனினும் உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் விரதங் காத்தலே உத்தமமாகும். விரத காலத்தில் கந்த புராணம், கந்தசஷ்டிகவசம், கந்தரனுபூதி முதலானவற்றைப் பாராயணஞ் செய்து வழிபடுவதும் உத்தம பலனைத்தரும்.

"விழிக்குத் துணை
திருமென்மலர்ப்
பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா
எனும்
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவன்
பன்னிரு
தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும்
செங்கோடன் மயூரமுமே!"
என்கிறது கந்தரலங்காரம்.

இந்தப் பாடலில் முருகன் பெருமை மிக அழகாகக் கூறப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அந்த வகையில் கந்தசஷ்டி விரதத்தைச் சரியான முறையில் அனுட்டிப்பதால் முருகப் பெருமானின் தெய்வீகத் திருவடிகளுக்குப் பாத்திரமாகி சகல சௌபாக்கியங்களும் நிறைந்த மங்களகரமான வாழ்க்கை அமையும் என்பது கண்கூடு.

**- கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்.**

# சரவணபவ தத்துவம்

சூரபத்மாதியர், சிங்கமுகாசுரன், தாரகாசுரன், கிரௌஞ் சாசுரன் ஆகியோர் பரம சிவபக்தர்களே, அவர்கள் சாகா-வரம் வேண்டினர். அந்த வரம் கிடைக்காமல் போகவே சிவனின் மறு அவதாரத்தால் அழிவை வேண்டினர். அது கிடைத்தது. சிவன் தங்களை அழிக்க மாட்டான் என நம்பி, அகங்காரம் மேலிட, அவர்கள் தேவர்கள் அனைவரையும் பணியாளர்களாக்கினர். பிரம்மா, விஷ்ணு முதல், யாவரும் மோன நிலையிலிருந்த சிவபெருமானை வேண்டினர், அவரும் இசைந்து பார்வதியை பங்குனி உத்தரத்தன்று மணம் புரிந்தார். சூரபத்மாதியரின் அட்டூழியத்தை அடக்க, சிவன் தமது ஐந்து முகங்களுடன் அதோமுக்தினின்றும் ஜோதியை எழுப்பி, வாயுவையும் அக்னியையும் அதை ஏந்தி கங்கையில் இடச் செய்தார். கங்கை, சரவணப் பொய்கையில் 6 தாமரைகளில் இட்டாள். அங்கு ஆறு ஜோதியும் ஆறு குழந்தைகளாக மாறின. அவர்கள் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பட்டனர். அதனால் முருகன், காங்கேயன், சரவணபவன், கார்த்திகேயன், என்றும் துதிக்கப் படுகிறான்.

உமை, குழந்தைகளை அழைத்து அணைக்க ஆறு குழந்தைகள், ஆறுமுகம், பன்னிருகை, இரு கால், ஓருடலாகக் கந்தனாக (ஸ்கந்தன் ஒன்று சேர்ந்தவன்) மாறினான். கந்தன் உதித்த தினம் வைகாசி மாத - விசாக பௌர்ணமி. அதனால் அவன் பெயர் விசாகன். சிவஜோதியின் மறுஉருவம். வேதசொரூபன் அதனால் சுப்ரமண்யன், என்றும் இளையவன் அதனால் குமாரன், மிக அழகானவன் ஆகவே முருகன் (முருகு என்றால் அழகு).

**மு - முகுந்தன் என்கிற விஷ்ணு, ரு - ருத்ரன் என்கிற சிவன்**

**க - கமலத்தில் உதித்த பிரம்மன்.**

ஆக, முருகன் மும்மூர்த்திகள் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் செய்து மக்களுக்கு அருளும் கருணை வடிவமானவன். காஞ்சி குமரப் பெருமானால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்டு கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதிய கந்தபுராணத்தில் முருகன் அவதாரத்தை இவ்வாறு கூறுவார்:

**அருவமும் உருவமாகி அநாதி
யாய் பலவாய், ஒன்றாய்ப்
பிரம்மமாய் நின்ற ஜோதிப்
பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒரு திருமுருகன் வந்து ஆங்கு
உதித்தனன் உலகம் உய்ய!**

இந்தப் பாடலை உள்ளன்புடன் ஓதினால் பலவித நன்மைகள் ஏற்படும். - நாரதர் பழம் ஒன்றை சிவனிடம் வழங்க கணபதி சிவபார்வதியை வலம் வந்து பழத்தைப் பெற, கோபம் கொண்ட பாலன் தண்டம், கௌபீனம் அணிந்து பழனி ஆண்டியானான்.

கந்தனைப் புறக்கணித்து சிவனைத் தரிசிக்க பிரம்மா செல்ல, பிரணவத்திற்குப் பொருள் அறியாமல் அவர் சிறைப்பட, சிவனுக்கு பிரணவப் பொருள் உரைத்ததால் கந்தன், சிவகுருநாதன், சுவாமிநாதன் என்று போற்றப்பட்டான். இது நடந்த தினம் ஆடிப் பௌர்ணமி, இதனை குருபௌர்ணமி என்றும் கூறுவர். (தலம் - சுவாமிமலை 4-ஆம் படைவீடு). குருவருள் பெற உகந்த தினம். முருகன் தம் அவதாரக் காரணம் நிறைவேற குருவும் நாரதரும் புகன்றிட, திருச்செந்தூரில் தேவர்களுக்கெல்லாம் சேனாதிபதியாகப் பதவியேற்றார். வீரபாகுவைத் தூது அனுப்பினார். முடிவில் தாரகாசுரன், கிரௌஞ்சாசுரன், சூரபத்மாதியரையும் அழித்து வெற்றியை நிலைநாட்டினார்.

கந்தனின் ஆயுதம் - பராசக்தியின் மறு உருவமான வேல். சூரபத்மன் கடைசியில் மாமரமாக நின்றான். அதை வேலால் துளைக்க, ஒரு பாதி மயிலாகி வாகனம் ஆனான். மறு பாதி கொடியில் சேவலாக மாறினான். இராவண வதம், கம்ஸ வதம் என்பர், ஆனால் இங்கு மட்டும் சூரசம்ஹாரம் என்பர். வேறு எந்த தெய்வ அவதாரத்திலும் நிகழாத சம்பவம், அது தான் கந்தன் கருணை. இது நடந்த தினம் கந்த சஷ்டி - தீபாவளி - அமாவாசைக்குப் பிறகு வரும் ஆறாவது நாள். இது நடந்த இடம் திருச்செந்தூர். மாத சுக்ல சஷ்டியும் கந்தனுக்கு ஒரு விசேஷ தினமாக அமைகிறது. சஷ்டியில் விரதம் இருந்தால் சகல நலன்களும் பெறலாம்.

தேவேந்திரன் கந்தனுக்குத் தனது பெண் தெய்வயானையை மணம் புரிவித்தான். சப்தமி தினம் இது நடந்த இடம் திருப்பரங்குன்றம் - (முதல் படைவீடு) - (திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை கல்யாணம் பங்குனி உத்தரம் அன்றே.)

வேடன் நம்பிராஜன் மகளாக வள்ளி (மாதவன் மகாலஷ்மி நோக்கால் தைப்பூசத்தில் உதித்தவள்) வள்ளி மலையில் வளர்க்கப்பட்டாள். நாரதர் நினைவூட்ட, கந்தன், வேடனாக, வேங்கை மரமாக, கிழவனாக வள்ளியை நாடி, தேனும் தினையும் உண்டு, பணிந்து சுயதரிசனம் தந்து, போரும் புரிந்து, வள்ளியை மணந்து கொண்டான். இது நடந்த இடம் வள்ளிமலை திருத்தணிகையில் (5-ஆம் படைவீடு), வள்ளி திருமணம், தைப்பூசம், மாசி பூசம், பங்குனி உத்தரத் தினங்களில் நடக்கின்றன. சிறுவனாக தோன்றி, ஔவைக் குச் சுட்ட பழத்தைக் கொடுத்து, பாட வைத்துத் தரிசனம் தந்தான் பழமுதிர்ச் சோலையில் முருகன் (6-ஆம் படைவீடு).


> **கந்தனின் ஆயுதம் - பராசக்தியின் மறு உருவமான வேல். சூரபத்மன் கடைசியில் மாமரமாக நின்றான். அதை வேலால் துளைக்க, ஒரு பாதி மயிலாகி வாகனம் ஆனான். மறு பாதி கொடியில் சேவலாக மாறினான். இராவண வதம், கம்ஸ வதம் என்பர், ஆனால் இங்கு மட்டும் சூரசம்ஹாரம் என்பர். வேறு எந்த தெய்வ அவதாரத்திலும் நிகழாத சம்பவம். அது தான் கந்தன் கருணை. இது நடந்த தினம் கந்த சஷ்டி**





# அமெரிக்காவிலும் மின் தடை நியூயோர்க் மக்கள் ஆர்ப்பாட்டம்

அமெரிக்காவில் சாண்டி புயலால் பாதிக்கப்பட்ட நியூயார்க் மக்கள் மின்தடையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் மின்சார அலுவலகத்தை ஏராளமான மக்கள் முற்றுகையிட்டு நேற்று கோஷம் எழுப்பினர். அமெரிக்காவின் அட்லாண்டிக் கடலோர பகுதிகளை சாண்டி புயல் புரட்டி போட்டது. இதனால் பஸ், ரயில், விமான போக்குவரத்து முற்றிலும் முடங்கியது. 2 முறை சாண்டி புயல் தாக்கியதால், நியூயார்க், நியூஜெர்சி நகரங்களில் ஸ்தம்பித்தன.



மின் தடையால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். சூறாவளி காற்றால் மின் கம்பங்கள், தொலைதொடர்பு கம்பிகள் அறுந்தன. பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. மீட்புப் படையினர் போர் கால அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். எனினும், பல இடங்களில் மின் தடை இன்னும் நீடிக்கிறது. சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் மின்சாரம் இன்றி இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் வியாபார நிறுவனங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஆத்திரம் அடைந்த நியூயார்க் மக்கள் ஏராளமானோர் நேற்று லாங் ஐலண்ட் மின் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இருட்டில் உட்கார்ந்திருக்கிறோம். மின் சப்ளை வழங்க யாரும் வரவில்லை. மின் துறை அதிகாரிகள் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். போன் செய்தால் மின்துறை அலுவலகத்தில் இருந்து சரியான தகவல்கள் கூறுவதில்லை என்று கோஷமிட்டனர். இதுகுறித்து மின்சார அலுவலக தலைமை நிர்வாகி மைக்கேல் ஹார்வே கூறியதாவது:


மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் கஷ்டப்படுவதை பார்த்து வேதனையாக இருக்கிறது. , எனினும், வழக்கமான நேரங்களில் 200 லைன் மேன்கள்தான் வேலை பார்ப்பார்கள்.

சாண்டி புயலுக்கு பின்னர் 6,400 லைன்மேன்கள் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் மரங்களை வெட்டி அப்புறப்படுத்தும் பணியில் 3,700 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மின்சார அலுவலகத்திடம் இருந்து சரியான தகவலை பெற முடியவில்லை என்று பலர் குற்றம் சாட்டி உள்ளனர். அது ஓரளவு உண்மைதான். ஏனெனில், மின்சார அலுவலகத்தில் இப்போதுள்ள தொழில்நுட்பம் மிக பழமையானது. இதை நவீனமாக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இந்த பணி முடிந்ததும் மின் நுகர்வோர்களுக்கு தேவையான அனைத்து தகவல்களும் எளிதில் கிடைக்கும்.

# உலக பார்வை

## தீக்குளிப்புகளுக்கு நான் பொறுப்பல்ல, சீன அரசாங்கமே தடுக்க வேண்டும்

- தலால் லாமா



திபெத்தில் சீன அரசுக்கு எதிராக நடக்கும் தீக்குளிப்பு சம்பவங்களை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்காமல், என் மீது பழியை போடுகிறது என்று தலாய் லாமா குற்றம் சாட்டினார். சீனாவின் ஆதிக்கத்தில் திபெத் உள்ளது.

திபெத்துக்கு விடுதலை அளிக்க வேண்டுமென கோரி அந்நாட்டு மக்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

அந்த மக்களின் தலைவரும், புத்தமத துறவியுமான தலாய் லாமா, நீண்ட காலமாக இந்தியாவில் வசிக்கிறார்.

இந்நிலையில், சமீப காலமாக சீன அரசை எதிர்த்து திபெத்தில் தீக்குளிப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது வரை 69 பேர் தீக்குளித்திருக்கின்றனர். அவர்களில் 54 பேர் உயிரிழந்து விட்டனர். தீக்குளிப்பு சம்பவங்களுக்கு தலாய் லாமா தூண்டுதலே காரணம் என்று சீனா கூறியிருக்கிறது. இந்நிலையில், ஜப்பானுக்கு சென்றுள்ள தலாய் லாமா அங்கு நிருபர்களிடம் கூறியதாவது:

திபெத்தில் தீக்குளிப்பு சம்பவங்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி அதை தடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, சீன அரசு என் மீது பழி போடுகிறது.

அந்த துயரச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க சீன அரசு எந்த நடவடிக்கை எடுப்பதை நான் வரவேற்கிறேன். இவ்வாறு தலாய் லாமா கூறினார். ஜப்பான் எம்.பி.கள் இடையே தலாய் லாமா உரையாற்ற உள்ளார்.

இதற்கிடையே, ஜப்பானில் தலாய் லாமாவை அனுமதித்ததற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

# சிரிய கிறிஸ்தவர்களுக்கு ஜேர்மனி அடைக்கலம் தரும்



சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அடைக்கலம் அளிக்க தயார் என ஜேர்மன் கிறிஸ்துவ அரசியல் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்காக நடத்தப்பட்ட உலகளாவிய பிரார்த்தனை தினத்தை தொடர்ந்து ஜேர்மனியின் ஆளுங்கட்சியான சிடீயு மற்றும் அதன் சகோதர கட்சியான சிஎஸ்யு ஆகியவற்றின் நாடாளுமன்ற தலைவர் வோல்க்கர் காதெர் கூறுகையில், சிரியாவில் உள்நாட்டு போர் நடந்து வருவதால், அகதிகளாக வெளியேறும் கிறிஸ்தவர்களுக்கு புகலிடம் தருவது மனிதநேய நடவடிக்கை.

இதேபோன்று ஈராக்கில் போர் நடைபெற்ற போது ஜேர்மனிக்கு புகலிடம் தேடி வந்த பல கிறிஸ்தவர்களுக்கு புகலிடம் அளிக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

மேலும் கிறிஸ்தவர்கள் அதிகளவு கொடுமைகளை சந்திப்பதால் புகலிடம் அளிக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில் ஆளுங்கட்சியின் மனித உரிமை நடவடிக்கைகளின் தகவல் தொடர்பாளரான எரீக்கா ஸ்ட்டீன்பெக், கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தாங்கள் குடியிருந்த நாட்டிலேயே இருக்க விரும்புகின்றனர்.

அந்நாட்டை விட்டு வெளியேறினாலும் திரும்பவும் அங்கு போய் தங்கிவிடவே ஆசைப்படுகின்றனர் என்றார்.

## கலிபோர்னியா குருத்வாராவுக்கு வெளியே இருவருக்கு கத்திக்குத்து

குருத்வாராவின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை கைபற்றுவதற்காக இரு கோஷ்டியினர் மோதிக் கொண்டதில் இருவருக்கு கத்திக்குத்து விழுந்தது. கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள யுபா நகரில் டியர்ரா புயனா குருத்வாரா உள்ளது. இங்கு நிர்வாகிகள் கூட்டம் சனிக்கிழமையன்று நடைபெற்றது. கூட்டம் முடிந்து சில நிர்வாகிகள் கார் நிறுத்தும் இடத்துக்கு சென்றனர். அப்போது இரு கோஷ்டியினருக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டது.

அவர்கள் மண் அள்ளும் கருவி, துடைப்பம், கம்புகள் கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். இருவருக்கு கத்திக்குத்து விழுந்தது. பெப்பர் ஸ்பிரேயை ஒருவர் பீய்ச்சி அடித்ததால் பலர் கண் எரிச்சலால் பாதிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது, யாரும் கைது செய்யப்படவில்லை என்று சட்டர் கவுண்டி பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஆப்கனில் குண்டுவெடிப்பு குழந்தையுடன் குடும்பமே பலி




ஆப்கானிஸ்தானில் சாலையோரம் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் பிறந்து சில மணி நேரமே ஆன குழந்தையுடன் குடும்பமே பலியானது. கோஸ்ட் சபாரி மாகாணத்தில் உள்ள மகப்பேறு மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு ஒரு தம்பதிக்கு குழந்தை பிறந்தது. மறுநாள் காலையில் வீட்டுக்கு செல்வதற்காக அந்த குழந்தையுடன் அதன் தாய், தந்தை, சகோதர சகோதரிகள் என குடும்ப உறுப்பினர்கள் 6 பேர் மருத்துவமனையிலிருந்து புறப்பட்டனர்.

வெளியே வந்த அவர்கள் ஒரு காரில் ஏறி சென்றனர். அப்போது சாலையோரம் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் அந்த கார் சின்னாபின்னமானது. இதில் அனைவரும் உயிரிழந்தனர் என்று கோஸ்ட் சபாரி மாகாண கவர்னர் சர்மயீத் மோக்லிஸ் தெரிவித்தார். தெற்கு ஹெல்மண்ட் மாகாணத்தில் இதேபோல திருமண நிகழ்ச்சிக்காக ஒரு குடும்பத்தினர் காரில் சென்று கொண்டிருந்தபோது குண்டு வெடித்து 3 பேர் இறந்தனர், இருவர் காயமடைந்தனர். நேட்டோ படைகளுக்கு எதிராக தலிபான் தீவிரவாதிகள் சாலையில் ஆங்காங்கே வெடிகுண்டுகளை புதைத்து வைத்துள்ளனர்.

# விமான பணிப்பெண்களும் தலையை மூடிக் கொள்ள வேண்டும்

- எகிப்து அரசு



"விமான பணிப்பெண்கள், தலைமுடியை மறைக்கும் விதத்தில், முக்காடிட்டு பணிக்கு வர வேண்டும்" என எகிப்து அரசு, வலியுறுத்தியுள்ளது. எகிப்து நாட்டில், ஹோஸ்னி முபாரக் ஆட்சியில் இருந்தவரை, முஸ்லிம்களுக்கான கட்டுப்பாடுகள் ஏதும் பெரிய அளவில் விதிக்கப்படவில்லை. மக்கள் புரட்சி மூலம், கடந்த ஆண்டு, முபாரக், ஆட்சியிலிருந்து விலக்கப்பட்டார். ஜனநாயக முறைப்படி நடத்தப்பட்ட தேர்தலில், முஸ்லிம் சகோதரத்துவ கட்சி வெற்றி பெற்றது. முகமது முர்சி அதிபராகியுள்ளார்.

இந்த ஆட்சியில், முஸ்லிம் பழமைவாத கொள்கைகள் அதிகம் பின்பற்றப்படுகின்றன. "டிவி" நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பர்தா அணிய வேண்டும் என, வற்புறுத்தப்பட்டுள்ளது"

தற்போது, விமானப்பணிப்பெண்களும், தலைமுடியை மறைக்கும் விதத்தில் முக்காடிட்டு பணிக்கு வர வேண்டும் என, வற்புறுத்தப்பட்டுள்ளது. எகிப்து விமானத்துறையில், 900 பணி பெண்கள் உள்ளனர். இவர்கள், பணியில் இருக்கும் போது, முக்காடிட்டு கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

# இந்திய செய்திகள்


## ராகுல் "கல்யாண வீட்டுக் குதிரை" காங்கிரஸால் அசைக்க முடியவில்லை

- யஷ்வந்த் சின்ஹா

கல்யாண வீட்டில் மாப்பிள்ளை அழைப்புக்குப் பயன்படுத்தப்படும் குதிரை மாதிரிதான் ராகுல் காந்தி என்று கிண்டலடித்துள்ளார் பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான யஷ்வந்த் சின்ஹா.

இப்போதெல்லாம் அரசியல் செய்வது ரொம்ப ஈஸியாகி விட்டது. நீ அவரைப் போல இருக்கிறாய், அவர் உன்னை மாதிரி இருக்கிறார் என்று படு ஜாலியாக பேசப் பழகி வருகின்றனர் இந்திய அரசியல்வாதிகள். மோடியை காங்கிரஸ்காரர்கள் குரங்கு என்று பேசுகின்றனர். காங்கிரஸ்காரர்கள், அரவிந்த் கெஜ்ரிவாலை ராக்கி சாவந்த்துடன் இணைத்துப் பேசுகின்றனர். இப்படி மாறி மாறி பேசிப் பழகி வருகிறார்கள் இந்திய அரசியல்வாதிகள்.

இந்த நிலையில் தற்போது ராகுல் காந்தியை, கல்யாண வீட்டுக்குதிரை என்று பேசியுள்ளார் பா.ஜ.க மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா. இதுகுறித்து அவர் கூறுகையில், மாப்பிள்ளை



அழைப்பின்போது மாப்பிள்ளைய கூட்டி வருவதற்குப் பயன்படுத்தப்படும் குதிரை போல இருக்கிறார் ராகுல் காந்தி.

இந்தக் குதிரை எப்போதும் ஒரே இடத்தில்தான் நிற்கும், அசையவே அசையாது. அதே போலத்தான் ராகுல் காந்தியும் எங்குமே நகருவதில்லை. அவரை நகர்த்த எத்தனையோ முயற்சிகளைச் செய்து பார்த்தாகி விட்டது. ஆனாலும் அவர் நகர மாட்டேன் என்கிறார். சிலர் அவரைத் தள்ளி விடக் கூட முயற்சிக்கின்றனர், ஆனாலும் முடியவில்லை.

தனக்கான நேரம் வரும் என்று அவர் காத்துக் கொண்டிருக்கிறார். அதுவரை மன்மோகன் சிங் என்ன செய்யப் போகிறாரோ பாவம் என்று கூறியுள்ளார் சின்ஹா.

சின்ஹாவின் இந்தக் கருத்துக்கு காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து திக் விஜய் சிங் பேசுகையில், முதலில் கத்காரி பா.ஜக.வின் தலைவரா இல்லையா என்பது குறித்து சின்ஹா விளக்க வேண்டும். அவரை தலைவராக அவர் ஏற்கிறாரா இல்லையா என்பதைச் சொல்ல வேண்டும் என்றார்.


## ராம்தேவ் அறக்கட்டளைக்கு 5.14 கோடி இந்திய ரூபா வரி விதிப்பு

யோகா குரு பாபா ராம்தேவின் அறக்கட்டளை ரூ5.14 கோடி சேவை வரி கட்டக் கோரி மத்திய அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. யோகா முகாம்கள், ஆயுர்வேத மருந்து தயாரிக்கும் அறக்கட்டளைகள் மூலமாக கிடைக்கும் வருமானத்துக்கு வரி கட்டாமல் தவிர்த்து வருகிறார் கறுப்புப் பணத்தை மீட்க வேண்டும் என்று பேசிவருகிறார் ராம்தேவ்.

மேலும் ராம்தேவின் பதஞ்சலி யோகா பீடம் மற்றும் திவ்ய யோகா ட்ரஸ்ட் சார்பாக நடத்தப்பட்ட யோகா முகாம்களுக்காக ரூ 5.14 கோடி சேவை வரி பாக்கி வைத்திருக்கிறார் ராம்தேவ். இது 2007 -2008 மற்றும் 2011-2012 காலகட்டத்தின்போது நடந்த முகாம்களின் போது கட்டப்பட வேண்டிய சேவை வரியாகும். இதனை உடனடியாக கட்ட வேண்டும் என்று மத்திய அரசு நோட்டீஸ் அனுப்பி வைத்திருக்கிறது. இதற்கான ஆதாரங்களும் அந்த நோட்டீசில் இணைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் யோக குரு பாபா ராம்தேவின் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ள வரிவிதி விலக்கை நிதி அமைச்சகம் ரத்து செய்துள்ளது என்ற செய்தியும் நோட்டீசில் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் மருத்துவ உதவிகளுக்காக அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் நடவடிக்கைகளுக்காக வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதில் தாங்கள் எதையும் மறைக்கவில்லை என்கிறார் ராம்தேவின் செய்தித் தொடர்பாளர்.




டெசோ தீர்மானங்களை ஐ.நா.சபை மற்றும் ஐ.நா. மனித உரிமைக கமிஷனிடம் வழங்கிவிட்டு தி.மு.க. பொருளாளர் ஸ்ராலின், டி.ஆர்.பாலு ஆகியோர் சென்னை திரும்பிய பின்னர் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் வரவேற்பு.

## தேர்தலுக்கு முன்னர் தனித் தெலுங்கானா: எம்.பி.க்கள் டிசம்பர் ஒன்பது வரை கெடு

தனித் தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவது தொடர்பாக முடிவு எடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்குத் தெலுங்கானா காங்கிரஸ் எம்.பி.க்கள் கெடு விதித்து கடிதம் அனுப்ப திட்டமிட்டிருக்கின்றனர்.

தெலுங்கானா பகுதி காங்கிரஸ் எம்.பிக்கள் கூட்டம் நேற்று முன்தினம் இரவு அமைச்சர் ஜனா ரெட்டி வீட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெலுங்கானா விவகாரத்தில் உரிய முடிவு எடுக்குமாறு காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. மேலும் டிசம்பர் 9ஆம் திகதி வரை சோனியாவின் முடிவுக்காக காத்திருப்பதாகவும் அதன் பிறகு முக்கிய முடிவு எடுக்கலாம் என்றும் அவர்



கள் தீர்மானித்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் கேசவராவ், கட்டா சுகேந்தர் ரெட்டி, ஜகநாதம், பிரபாகர, விவேக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக தெலுங்கானா விவகாரத்தில் சாதகமான முடிவை காங்கிரஸ் மேலிடம் எடுக்காவிட்டால் நிச்சயம் தெலுங்கானா பகுதியில் ஒரு தொகுதியில் கூட காங்கிரஸ் கட்சி ஜெயிக்காது என்று இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் ஒருமித்த குரலில் குமுறியிருக்கின்றனர்.

தெலுங்கானா மாநிலம் அமைக்க காங்கிரஸ் கட்சி ஒப்புக் கொள்ளாதபோது தனிக் கட்சியைத் தொடங்கவும் தெலுங்கானா காங்கிரசார் திட்டமிட்டிருக்கின்றனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் எம்.பி. விவேக், தெலுங்கானா உருவாக்கப்படாவிட்டால் காங்கிரஸுக்கு வாய்ப்பே கிடையாது. தேர்தலுக்கு முன்பு தெலுங்கானா மாநிலம் அமைக்காவிட்டால் காங்கிரஸ் படுதோல்வியைச் சந்திக்கும். காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற தெலுங்கானா தனி மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

## நாற்பது ஆண்டுகளின் பின்னர் ஆங் சாங் சூகி இந்தியா வந்தார்

சுமார் 40 ஆண்டுகளுக்குப்பிறகு, மியான்மர் நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் ஆங் சாங் சூகி நேற்று இந்தியா வருகை தந்தார்.

மியான்மர் நாட்டில் இராணுவ ஆட்சிக்கு எதிராக பல ஆண்டுகளாக போராடி வந்தவர் ஆங் சாங் சூகி. இராணுவத்திற்கு எதிராக போராடியதால் சுமார் 15 ஆண்டுகள் சூகியை வீட்டுக்காவலில் வைத்தது மியான்மர் இராணுவ ஆட்சி. மியான்மரில் ஜனநாயகத்தை மீட்க போராடிய அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்நிலையில், உலக நாடுகளின் நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால், 2010ஆம் ஆண்டு இராணுவத்தின் ஆதரவுடன் மியான்மாரில் ஆட்சி அமைந்தது. அப்போது முதல் அந்த நாட்டில் மெல்ல மெல்ல பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் ஏற்பட ஆரம்பித்தன. சூகி வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார். இந்நிலையில்,



இந்தாண்டு ஏப்ரல் மாதத்தில் மியான்மார் நாட்டில் தேர்தல் நடந்தது. இதில் ஆங் சாங் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி, தான் போட்டியிட்ட 44 இடங்களில் 43 இடங்களில் வெற்றி பெற்று முக்கிய எதிர்க் கட்சியாக உருவெடுத்துள்ளது. சமீபத்தில் மியான்மர் சென்றிருந்த பிரதமர் மன்மோகன் சிங் சுகியைச் சந்தித்து இந்தியா வரும்படி அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பை ஏற்று, இன்று சூகி இந்தியா வருகிறார். சூகி தனது இளமைக்காலத்தை இந்தியாவில் கழித்துள்ளார்.

சுகியின் தாயார் இந்தியாவுக்கான பர்மா தூதராக இருந்த போது அவருடன் டில்லியில் சூகி தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா வரும் சுகி, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசுகிறார். தொடர்ந்து ஜவஹர்லால் நேரு தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் பேசும் அவர், டில்லி கல்லூரி நிகழ்ச்சி ஒன்றிலும் கலந்து கொள்கிறார்.

மியான்மரில் இராணுவ புரட்சி ஏற்பட்ட 1988 முதல் 90ஆம் ஆண்டு காலம் வரை இந்தியா மியான்மரில் ஜனநாயகத்திற்கு குரல் கொடுத்தது. ஆனால் 1990ஆம் ஆண்டுக்குப்பிறகு இராணுவ ஆட்சிக்கு ஆதரவளிப்பது என்ற கொள்கையை இந்தியா எடுத்தது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானிஸ்தானுக்கு இந்தியா ரூ.11 ஆயிரம் கோடி நிதியுதவி


இந்தியா, ஆப்கானிஸ்தான் இடையே பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த இருநாட்டு தலைவர்களும் முடிவு செய்துள்ளனர். ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீத் கர்சாய் அரசு முறை பயணமாக நேற்று முன்தினம் இந்தியா வந்தார். ஜனாதிபதி மாளிகையில் அவரை ஜனாதிபதி பிரணாப், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர், மன்மோகன் சிங்கை கர்சாய் சந்தித்துப் பேசினார். அப்போது, இருதரப்பு உறவுகள், சர்வதேச பிரச்சினைகள் குறித்து இருவரும் விவாதித்தனர். இந்தியா, ஆப்கானிஸ்தான் இடையே நல்லுறவை மேம்படுத்தவும் குறிப்பாக பொருளாதார துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது. நிலக்கரி மற்றும் கனிம வளங்கள் துறையில் இணைந்து செயற்படுவது, சிறிய வளர்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதில் இந்தியாவின் உதவி உட்பட 4 ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

பின்னர், மன்மோகன் சிங்கும் ஹமீத் கர்சாயும் கூட்டாக பேட்டியளித்தனர். மன்மோகன் கூறுகையில், இருதரப்பு உறவுகள், ஒத்துழைப்புகள் குறித்து விவாதித்தோம். ஆப்கானிஸ்தானிலும் அதை சுற்றிலும் உள்ள பாதுகாப்பு மற்றும் அரசியல் நிலைகளில் மாற்றங்கள் பற்றியும் ஆலோசித்தோம். அண்டை நாட்டில் இருந்து வரும் தீவிரவாத அச்சுறுத்தலை சமாளிப்பது உட்பட எல்லா முனைகளிலும் ஆப்கானிஸ்தானுக்கு உலக நாடுகளின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆப்கானிஸ்தானின் வளர்ச்சிக்கு இந்தியா ரூ.11 ஆயிரம் கோடி நிதியுதவி அளிக்கிறது என்றார்.

கர்சாய் கூறுகையில், ஆப்கானிஸ்தானின் வளர்ச்சிக்கும் மறுகட்டமைப்புக்கும் இந்தியா பெருந்தன்மையுடன் தாராளமாக உதவி வருகிறது. இதற்காக இந்தியாவுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆப்கானிஸ்தானில் இந்திய வர்த்தகர்கள் பெருமளவில் முதலீடு செய்ய வேண்டும். அதற்கான சூழ்நிலை ஆப்கானிஸ்தானில் நிலவுகிறது என்றார்.

# ஒருநாள் கிரிக்கட் தொடரில் 5ஆவது போட்டி கைவிடப்பட்டது



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற் றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 5ஆவ தும் இறுதியுமான போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம் பெற்ற இப் போட்டி யில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி 28.3 ஓவர்களில் 8 விக் கெட்டுக்களை இழந்து 123 ஓட் டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டு போட்டி இடை நிறுத்தப்பட்டது.

தொடர்ந்தும் மழை காணப்பட்டதால் போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக உபுல் தரங்க 94 பந்துகளில் 60 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்தன 26 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

இன்றைய போட்டியில் லஹிரு திரிமன்ன 3ஆம் இலக்கத்திலும், அன்ஜலோ மத்தியூஸ் 4ஆம் இலக்கத்திலும் துடுப்பெடுத்தாடிய போதிலும் இருவரும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்தியிருக்கவில்லை.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 5.3 ஓவர்களில் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், அன்ட்ரூ எலிஸ் 4 ஓவர்களில் ,22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ட்ரென்ட் போல்ட், அடம் மில்ன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

5 போட்டிகளில் முதலாவது, இறுதிப் போட்டி ஆகியன மழை காரணமாகக் கைவிடப்பட்ட நிலையில் ஏனைய 3 போட்டிகளையும் வெற்றிகொண்டு இலங்கை அணி தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தொடர் நாயகனாக நியூசி லாந்து அணியின் பி.ஜே. வற்லிங் தெரிவுசெய்யப்பட்டார்.

# தென்மராட்சி வலய பாடசாலை போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி சம்பியன்

தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் 16 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டிகள் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றது.

மேற்படி போட்டிகளின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இன்று நடைபெற்றன. முதலில் நடைபெற்ற அரையிறுதியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியினை எதிர்த்து நாவற்குழி மகா வித்தியாலயம் மோதியது. இந்தப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


இரண்டாவது அரையிறுதியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியை எதிர்த்து மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் மோதியது. இந்தப் போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் சாவகச் சேரி டிறிபேக் கல்லூரியும் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் பின்கள வீரர்களினால் தடுக்கப்பட்டது. இருந்தும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி கோல் ஒன்றினைப் பெற்று தென்மராட்சி வலய சம்பியனாகியது. மூன்றாமிடத்திற்கான ஆட்டத் தில் நாவாற்குழி மகா வித்தியா லயம் 2:0 என்ற கோல் கணக்கில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தை வென்றது.

# கொல்கத்தா நைட்ர் ரைடர்ஸு க்கு வருமான வரித்துறை நோட்டீஸ்

விசாரணைக்கு வருமாறு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி நிர்வாகம் மற்றும் கம்பிளான் ஸ்போர்ட்ஸ் நிறுவனங்களுக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இது குறித்து கிழக்கு பிராந்திய வருமான வரி புலனாய்வுப் பிரிவு இயக்குநர் வினோத் குராணா கூறுகையில், விசாரணைக்கு வருமாறு இரு நிறுவனங்களுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளோம். இரு நிறுவனங்களும் விசாரணைக்கு ஆஜராக திங்கட்கிழமை வரை அவகாசம் கேட்டுள்ளனர். இரு




நிறுவனங்களிடமிருந்தும் சில ஆவணங்களை கைப்பற்றியுள்ளோம். அதுகுறித்து தீவிர ஆய்வு நடந்து வருகிறது என்றார் குராணா.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளர் ஷாருக் கான் என்பது குறிப்பிடத்தக்கது.

# பீலேவின் கோல் சாதனையை முறியடித்தார் மெஸ்ஸி

ஐரோப்பிய உள்ளூர் போட்டியான லா லிகா கால்பந்து லீக் தொடரில் மல்லோர்காவை 4-2 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வீழ்த்தியது. இந்தப் போட்டியில் பீலேவின் கோல் சாதனையை பார்சிலோனாவின் மெஸ்ஸி முறியடித்திருக்கிறார்.

ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் லா லிகா கால்பந்து லீக் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் பார்சிலோனா அணியின் மெஸ்ஸி அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். ஆட்டத்தின் முதல் பாதியில் மெஸ்ஸி உட்பட பார்சிலோனா அணியினர் அபாரமாக ஆடினர். ஆட்டத்தின் 2-வது பாதியில் மல்லோர்கா 2 கோல்களை மட்டுமே போட முடிந்தது. மெஸ்ஸி இப்போட்டியில் 2கோல்களை அடித்ததுடன் முன்னணி வீரரான பீலேயின் கோல் சாதனையை முறியடித்திருக்கிறார்.

நடப்பு ஆண்டில் மெஸ்ஸி மொத்தம் 76 கோல்களை அடித்திருக்கிறார். 1972ஆம் ஆண்டு முல்லெர் அடித்த 85 கோல்களே சாதனையாக இருந்து வருகிறது. அதற்கு அடுத்து பீலேதான் ஒரு ஆண்டில் 75 கோல்களை அடித்த சாதனையாக இருந்தது. தற்போது இதனை மெஸ்ஸி முறியடித்திருக்கிறார். 2011-12ஆம் ஆண்டில் மெஸ்ஸி 73 கோல்களை அடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சில நாட்களுக்கு முன்பு ஐரோப்பாவின் உள்ளூர் கால்பந்து தொடர்களில் அதிக கோல்கள் அடித்ததற்காக மெஸ்ஸிக்கு தங்க காலணிகள் வழங்கப்பட்டிருந்தது.

# இந்தியா- பாகிஸ்தான் மோதிய உலக கிண்ண போட்டியில் சூதாட்டம்:

இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதிய உலக கிண்ண அரையிறுதி போட்டியில் சூதாட்டம் நடந்துள்ளதாக இங்கிலாந்து பத்திரிகை செய்தி வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் டெய்லி மெயில் என்ற பத்திரிக்யையில், விளையாட்டு சூதாட்டங்கள் தொடர்பாக கட்டுரை எழுதும் ஹாவ்கின்ஸ் பேட்டி இடம் பெற்றிருந்தது.

அதில் இந்தியாவை சேர்ந்த சூதாட்ட தரகர் பார்த்திவ் என்பவர் தனக்கு ட்விட்டரில் ஒரு செய்தியை அனுப்பியதாகவும், அதில் இந்திய அணியின் துடுப்பாட்டம் அமையும் விதம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடும் போது 100 ஓட்டங்களுக்கு மேல் 2 விக்கெட்டும், 150 ஓட்டங்களை கடக்கும் போது 5 விக்கெட்டுகளும் விழும். 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைவார்கள் என்றும் பார்த்திவ் தெரிவித்திருந்ததாக கூறியுள்ளார். இந்த ஆட்டத்தில் இந்திய அணி 29 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இந்த விவகாரம் தொடர்பாக சர்ச்சை எழுந்தபோது ஐசிசி தலையிட்டு சூதாட்டம் நடந்ததற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என கூறியிருந்தது. தற்போது இந்த விவகாரம் மீண்டும் பூதாகரமாக வெடித்துள்ளது.

# சச்சினுக்கு பந்து வீச வேண்டும்

**- ஜேம்ஸ் அன்டர்சன்**

இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு எதிராகப் பந்துவீசுவதைத் தான் விரும்புவதாக இங்கிலாந்து அணியின் ஆரம்பப் பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார். சவால்களை எதிர்கொள்ள விரும்புவதாலேயே சச்சினுக்கெதிராகப் பந்து வீசத் தான் விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி இந்தியாவில் வைத்து 4 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. அத்தொடர் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே ஜேம்ஸ் அன்டர்சன் இவ்வாறு தரிவித்துள்ளார்.

மிகச்சிறப்பானவர்களுக்கெதிராக தங்களைப் பரிசோதித்துக் கொள்வதை விரும்புவதாலேயே சச்சின் டெண்டுல்கருக்கெதிராகப் பந்துவீசுவதை விரும்புவதாகத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், அதன் மூலமே தங்களது நிலையை அறிந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக உலகின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராகச் சச்சின் டெண்டுல்கர் காணப்படுகிறார் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் கிடையாது எனத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், சிலவேளைகளில் சச்சின் டெண்டுல்கரே கடந்த 20இற்கும் மேற்பட்ட வருடங்களில் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரராகக் காணப்படலாம் எனத் தெரிவித்தார்.

எனினும் சச்சின் டெண்டுல்க ருக்கெதிராகப் போட்டிகளில் பங் குபற்றும் போது மைதானத்தில் வைத்து அவருக்கு அதிக மரியாதை வழங்க முடியாது எனத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், அவரை ஆட்டமிழக்க வைக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

# பிங்கி பிராம்னிக் ஆண் தான்!

பாலியல் பலாத்கார புகாரில் சிக்கி கைதாகி ஜாமீனில் வெளியே வந்துள்ள பிங்கி பிராம்னிக் ஆண் என்பது மருத்துவ பரிசோதனைகளில் உறுதியாகியுள்ளது. இதையடுத்து அவர் மீது மேற்கு வங்க பொலிஸார் கற்பழிப்பு வழக்கைப் பதிவு செய்துள்ளனர்.

தடகள வீராங்கனையாக அறியப்பட்டவர் பிங்கி. மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர். இவர் மீது கடந்த ஜூன் மாதம் அனாமிகா ஆச்சார்யா என்ற பெண் பொலிஸ் ஒரு புகார் கொடுத்தார். அதில் பிங்கி ஒரு ஆண். அவரும் நானும் பல வருடமாக சேர்ந்து வாழ்ந்து வருகிறோம். என்னைத் திருமணம் செய்து கொள்வதாக கூறி விட்டு தற்போது மோசடி செய்து விட்டார் பிங்கி.

இதையடுத்து அவர் மீது பொலீஸார் வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். சிறைக்கும் அவர் அனுப்பப்பட்டார். அவர் ஆணா, பெண்ணா என்பதை அறிய மருத்துவப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.



சோதனைகளின் முதல் கட்டத்தில் அவர் ஆணாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுப்பப்பட்டது. இதுகுறித்து பிங்கி வேதனையும், ஏமாற்றமும் வெளியிட்டார். இதையடுத்து மேலும் ஒரு சோதனைக்கு காவல்துறை உத்தரவிட்டது.

அதன்படி கொல்கத்தாவில் உள்ள எஸ்எஸ்கேஎம் மருத்துவமனை டாக்டர்கள் குழு பிங்கியிடம் சோதனை நடத்தினர். அதில், பாலின ரீதியாக பிங்கி ஒரு ஆண்தான் என்பதை உறுதி செய்து அறிக்கை அளித்துள்ளனர்.

இதையடுத்து பிங்கி மீது கற்பழிப்பு மற்றும் மோசடிப் புகாரை பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

பிங்கி பிராம்னிக் 2006-ம் ஆண்டு டோகாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் மகளிர் பிரிவு தடகளப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவர் ஆவார். இவர் ஆண் என்பது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டால் அவரது பதக்கம் பறிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 14.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது